# உலகியல் நூறு

பெருஞ்சித்திரனார்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

உலகியல் நூறு

முதற் பதிப்பு—2000 படிகள்
தி. பி. 2013 கன்னி—செப்டம்பர், 1982

விலை உருபா ஆறரை

இந்நூலையோ, நூற்பகுதியையோ எவ்வகையானும்
பயன்படுத்திக் கொள்ள ஆசிரியர் ஒப்புதல் பெறுக.

மறைமலை அச்சகம்
புன்செய்ப் புளியம்பட்டி - 638459
பெரியார் மாவட்டம்.

# முன்னுரை

**உ**லகியல் நூறு என்னும் இந்நூலின் தலைப்பு, 'உலகின் இயற்கைத் தன்மைகளைப் பற்றிய நூறு பாடல்களைக் கொண்டது' என்று பொருள் தருவதாகும்.

இது 1973—'74-ஆம் ஆண்டுக்கிடையில் எழுதப் பெற்றது. அக்கால் தென்மொழிக் குடும்பம் கடலூரில் (தெ. ஆ.) இருந்தது. என் சிங்கைச் செலவு (1974)-க்குப்பின் குடும்பம் சென்னைக்கு மாற்றப் பெற்றது. அதன்பின், 1976-இல் இது **தென்மொழியில்** (சுவடி : 13 ; ஓலை : 3) வெளிவரத் தொடங்குகையில், நான் ஓராண்டு '**மிசா**' ச் சிறையை ஏற்றுச் சென்னை, நடுவண் சிறையில் வைக்கப் பெற்றிருந்தேன். அக்கால், இது தொடர்ந்து வெளிவந்து, 1978 ஏப்பிரல் - மே மாதத் **தென்மொழி** இதழில்,(சுவடி : 14 ; ஓலை : 12-இல்)முடிவுற்றது. இத் தொடர் வெளி வருகையில், என் நூல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த **அறிஞர் த. முத்துக்குமரன், க.இ.** அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பும், கூடவே வெளிவந்தது. வாய்ப்பிருக்கையில், ஆங்கில மொழிபெயர்ப்பு தனித்தோ, மூல நூலுடன் இணைத்தோ வெளியிடப் பெறும்.

இந்நூலுள் உள்ள பாடல்கள் நூறும் வெண்பா யாப்பில் அமைந்தனவாகும். பாடல்கள் திண்ணிய மெய்ப் பொருள் கருத்துகளை வெளிப்படுத்துவன வாகையால், பாடல் அமைப்பும் இறுகலாகவே உள்ளது. அதனைப் பொழிப்பு ஓரளவே குழைவாக எடுத்துக் கூறுகிறது. இதில் உள்ள கருத்துகளை இதைவிட மிக எளிமையாக எடுத்துக் கூறுவதானால், அஃது, இந்நூலைப்போல் பலமடங்கு பெரிதாக அமைந்து விடும். காலமின்மை கருதி அவ்வேலையை என்னால் செய்ய முடியவில்லை. பிற்காலத்து, மெய்ப்பொருளுணர்வும் தமிழ்த் தகுதியும், அறிவு ஒளியும் வாய்க்கப் பெற்றார் எவரேனும் அதைச் செய்யட்டும்.

சொல்லப்பெறும் கருத்துகள் நுண்மையும் திண்மையும் வாய்ந்தனவாக இருந்தால், நடையும் சொற்களும் அவற்றுக் கேற்றபடியே அமைவது இயற்கையாகப் போய்விடும்; அதைத் தடுத்து நிறுத்த முயலுவோமானால், கருத்தில் செறிவிருக்காது; வெண்மை தோன்றி விடும். நல்லறிவு அரிதின் முயற்சியால் பெறவேண்டிய தொன்றாகலின், உண்மை நாட்டமுடைய அறிவினர், திண்மை கருதி வெண்மை அறிவிற் புகார்; நுண்மை அறிவே அவருயிர்க்கு உவப்புத் தருவதாகும்.

இனி, **உலகியல் நூறு** என்னும் இந்நூல், உயர்ந்த மறைவான உலகியல் செய்திகளை, ஓரளவு முற்றும் அடக்கிக் கூறுவதாகும். அகண்டாகாரமாகப் புடைவிரிந்து, எண்ணத்திற் கெட்டாமற் பரந்து கிடக்கும் இப்புடவியுள் (பிரபஞ்சத்துள்), மாந்தப் பிறப்பிடத்தின் துகள் இருப்பும், அவனின் துணுக்கிருப்பும், அத்துணுக்கின் ஆட்டமும் அடக்கமும், ஒக்கமும் ஒடுக்கமும் எத்தகையன என்பதைத் துல்லியமாக, மெய்ப்பொருள் நூல்கள்போல் விளக்கிக் காட்டுவது, இந்நூல்.

உலகின் இயல்புகள் இருபது தலைப்புகளாகப் பகுக்கப் பெற்று, ஒவ்வொரு தலைப்புக்கும் ஐந்தைந்து உட்பிரிவுகளாக, மொத்தம் நூறு பாடல்களில் உள்ளடங்கியது இந்நூல். இதில் வரும் நூறு குறும் பிரிவுகளையும் ஒருசேர ஒட்டுமொத்தமாகப் பார்ப்பவர்க்கு, இந்நூலின் பெறுமதி ஒருவாறு விளங்கும்.

இதனுள் வரும் அனைத்துச் செய்யுள்களிலும், உலகின் நுண்பொருள், பருப்பொருள் இயக்கங்கள் அனைத்தும் ஒருவகையாக அடக்கிக் காட்டப் பெற்றுள்ளன. இதன் பெரும் பகுப்பு **இயல்**களாகவும், குறும் பிரிவு **நிலை**களாகவும் பாகுபாடு செய்யப் பெற்றுள்ளன. நிலை என்பது இருப்பு நிலை; இயல் என்பது இயங்கு நிலை. எனவே உலக இருப்பும் இயக்கமும் இதில் காட்டப் பெற்றுள்ளன எனக் கொள்க.

இந்நூலுள் வரும் உண்மைகள் எல்லாம், எல்லார்க்கும், எவ்வகையானும் எளிதே விளங்குவன அல்ல. ஆழ்ந்து

தோய்ந்த சிந்தனையால் வெளிப்படுத்தப் பெற்ற மெய்ம்மக் கூறுகள் இவை. இந்நூல் முழுமையையும் கற்றுணர்ந்தார், உலகின் மூல நிலைகளைத் தெளிவாக உணர்ந்து கொண்டவ ராவர். அத்தகையவர் இவ்வுலகின் புறவியக்கங்களால் அசை வுறு மனத்திண்மை பெறுவர்; அலைவுறு அறிவு நிலைப்பை அடைவர். அவர்க்கு இவ்வுலகின்கண் நேர்ந்த, நேர்கின்ற, நேரவிருக்கின்ற அனைத்துப் புறச் செயல்களும், அவற்றின் நோக்கங்களும், ஆக்கங்களும் எளிதே விளங்குவன வாகும். எனவே, அவர்க்குத் துன்பம் என்பதில்லை; துயர் மூட்டங்கள் அவர்தம் மனத்தின்கண் எழா! மாசு மயக்கங்கள் அவர்தம் உள்ளத்தைப் பற்றி அலைக்கழிப்ப தில்லை; இழிவு இருள்நிலை அவர்தம் அறிவைச் சூழ்ந்து வருத்துவதில்லை. தூய ஒளி பொருந்திய சுடர்வெளிக்குள் அடங்கிய ஓர் உள்ளொளியாக அவர் இருப்பர். பேரின்ப வெள்ளத்துள் அவர்களின் உயி ரியக்கம் ஆழ்ந்து, பெயரா வியற்கைப் பெரு நிறைவை அவர் களுக்கு வழங்குவது உண்மை! இதனை ஆழ்ந்து கற்குங்கால், இவ்வுண்மையை அவர்கள் தெளிந்து தேர்ந்துகொள்வார்கள்.

இதிலுள்ள பாடல்கள், சொற்புணர்ப்பால், படிப்பதற்குச் சிறு அளவில் எளிமைக் குறைவாக இருந்தாலும், ஓரிருமுறை வாய்விட்டுப் படித்து விட்டால், மனத்தில் எளிதே பதியும் தன்மை வாய்ந்தவை; சொல்லுரஞ் சான்றவை; பொருள் பொதிவு நிறைந்தவை; நூற்பா வகையில் இணைந்து உணர் வின்பம் கிளர்ப்பவை; வெண்பா யாப்பிற்குரிய அழகிய செப்பலோசை இயைந்தவை.

இந்நூலிலுள்ள பாடற் கருத்துகள் பலருக்கு வியப்பை அளிக்கும்; சிலர்க்கு மலைப்பைக் கொடுக்கும்; சிலர்க்குச் சில கருத்துக்கள் கற்பனையாகப் படும்; சிலர் சிலவற்றை ஒப்புக்கொள்ளவும் தயங்குவர்; சிலர் சில கருத்துகளைச் சரியோ தவறோ என்று ஏற்கவும் இழக்கவும் மனமிலாது மயங்குவர்; சில கருத்துகளால் சிலர் எரிச்சலும் வெகுளியும் கொள்ளலாம்; சிலர் பொய்ம்மை என்றும் புகலலாம்.

# 15

# புகழியல்

## 1. அறிவு நிலை

கரணம் கருமம் கருவியெனும் மூன்றின்
முரணின் றுயிர்க்கு முகிழ்த்து - நிரனிறையாப்
பாகின்றி நீண்டஃகித் தன்துணையோ டுட்கரணத் 71
தாகி இயலும் அறிவு.

பொழிப்பு: கரணியநிலை, கருமநிலை, கருவிநிலை, என்னும் மூன்று நிலைகளும் தம்முள் மாறுபாடு கொள்ளாமல் உயிர்களிடத்து வெளிப்பட்டுத் தோன்றி அவற்றின் உட்பகுப்புக்களாய் வரிசை முறைகளாகப் பகுப்பில்லாத படியாகவும் நெடிதும் குறுகலும் என்னும் படியாகவும், தற்கருவியும், துணைக்கருவியும், கரணியக் கருவியும் என்னும் படியாகவும், விளங்குதல் பெற்று, இயல்கின்ற தன்மை யுடையது அறிவு.

### அறிவு இயல் நிலை

| | | |
|---|---|---|
| 1. கரணிய அறிவு<br>(Knowledge of reasons) | — | (பாகில்லாதது) பிரிவில்லாதது |
| 2. கரும அறிவு<br>(Knowledge of doings) | — | 1. நெடியநிலை (நீண்டநிலை)<br>2. குறுகிய நிலை (அஃகிய நிலை) |
| 3. கருவி அறிவு<br>(Knowledge of things) | — | 1. தற்கருவி நிலை<br>2. துணைக் கருவி நிலை<br>3. கரணியக் கருவி நிலை |

இவர்கள் அனைவர்க்கும் நாம் கூறும் விடை இந்நூலுள் ஒரு பாட்டாகவே (3) மலர்ந்துள்ளது. அதில் இவ்வுலகத்துள்ளார் அறிவு எப்பொழும் மருட்சியுடையதாகவே இருக்கும் என்பது சொல்லப் பெற்றுள்ளது. இருப்பினும், அறிவுநிலை, இடத்தானும், பொருளானும், காலத்தானும், கருவியானும் கரணத்தானும், அறிவானும், உள்ளத்தானும், உணர்வானும் சொல்லானும், சொற்பொருளானும், தொகுப்பானும், விரிப்பானும், விளக்கத்தானும் என்றைக்கும், எவர்க்கும், பல்வேறு மாறுபாடுகள் கொண்டே இயங்கும் தன்மை யுடையது. இவ்வனைத்து மாறுபாட்டு நிலைகளையும் அளாவி யறிந்தோரது மெய்ப்பொருளுண்மை என்றும் மாறாத தன்மை யுடையது. ஆற்றலையும் பொருளையும் மாற்றமின்றி உள்ளது உள்ளபடியே பிரித்துணர்வார் உலகத்து உளர். அவர்தம் கூற்றுவாயிலாகவே அவர் அறியப் பெறுவர். அவ் வறிவவரது அறிவு மாட்சி காலத்தாலேயே தேர்வு பெறற் குரியது. அதனை எளிதே மறுத்து விடுதலும் அத்துணை இயல்வதன்று. எனவே உணர்வார்க்கு உணர்வதும், உணர்வு மழுங்கினார்க்கு மறைவதுமாகிய மெய்ப் பொருளுண்மையை, முதற்கண் ஒருவர் கற்றறிவது கடனாகும். அந்த வகையில் எழுந்ததே இந்நூல் என்க.

வழக்கம்போல், இந்நூலையும், கோவை **பெருஞ்சித்திரனார் நூல் வெளியீட்டுக் குழுவே** வெளியிடுகிறது. இக்குழுவின் இயக்குநராகிய தென்மொழி. **ப. துரையரசனார்**, என் நூல்களை வெளியிட்டு மக்கட்குக் கொண்டு செலுத்தும் பணியையே தம் தண்டமிழ்த் தொண்டாகவும், வாழ்நாட் கடமையாகவும் கொண்டிருக்கிறார். அவர்தம் தூய தமிழ்த் தொண்டுக்கு என்றும் என் நெஞ்சு நிறைந்த வாழ்த்துகள் உரியவாகும். அவரின் தந்நலமற்ற தூய தமிழ்த் தொண்டுக்குத் துணை நிற்கும் அனைத்துத் தமிழுள்ளங்களுக்கும் என் உளம் கனிந்த நன்றியும் வாழ்த்தும்! அவர்களின் ஆர்வத்தையும் அரு முயற்சியையும் தமிழகம் நன்கு ஊக்குவித்துப் பயன்படுத்திக் கொள்ளுமாக.

இந்நூலுக்குரிய ஆய்வு முன்னுரை ஒன்று, என் மருகரும் வழக்குரைஞரும், சொல்லாய்வறிஞரும் ஆகிய **தமிழூர் ப. அருளி** அவர்களால் எழுதப் பெற்று இத்துடன் இணைக்கப் பெற்றுள்ளது. நூலின் சிறப்புக்கு அது மகுடமிடுகிறது. அவர்க்கு என் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

இந்நூலுக்கான '**முதற்சீர் அகரவரிசை**'யையும் '**அருஞ் சொற்பொருள் அகரவரிசை**'யையும் தொகுத்துதவிய நெய்வேலி தென்மொழி **சுப. திருமாறன்** அவர்களும், அவர்க்குத் துணை நின்ற என் மகன் **மா. பூங்குன்றன்** அவர்களும், பிழைதிருத்தப் பட்டியல் எடுத்துதவிய தென்மொழி **செ. கண்ணன்** அவர்களும் என் அன்புக்கும் நன்றிக்கும் உரியராவர்.

இந்நூலை அழகிய முறையில் அச்சிட்ட, புன்செய்ப் புளியம்பட்டி அச்சக உரிமையாளர் **திரு. ஆடலரசனார்க்கும்,** முகப்போவியம் வரைந்துதவிய ஓவிய அறிஞர் **திரு. ப. அறவாழிக்கும்** என் அன்பு கலந்த நன்றியும் வாழ்த்தும்!

அன்புநிறை

**மடங்கல் ௪, தி. பி. ௨௦௧௩**
**29—8—1982, சென்னை-5.**

**பெருஞ்சித்திரன்.**

# ஆராய்ச்சி முன்னுரை

**முன்னுரைக்கு முகவுரை :**

ஒரு சிறுகதையோ, புதினமோ, கட்டுரையோ அல்லது உகைந்தெழுந்த பாடலோ அல்லது பாவியமோ, — எது வாயினும், படைப்பாளியின் மன, உள்ள, அறிவுப் பண்பு களின் ஒட்டு மொத்தத் திரட்சியின் குளிகையமைப்பை (pill) அது பெற்றிலங்குவதைக் கூர்ந்து நோக்கின் விளங்கிக் கொள்ளலாகும்.

ஓர் இலக்கிய வெளிப்பாட்டைக் 'காலத்தின் கண்ணுடி என்பதினும், அதைப் படைத்தவனின் 'புலம் படி கண்ணுடி' என்பதே, முதற்கண் பொருந்துவதாகும். படைப்பாளியான வன் எந்தச் செய்தியைப் புலப்படுத்தி யிருப்பினும், அதில் தன்னை, தன் உணர்வை, தன் அகப் பண்பை, தன் அறிவுத் தெளிவை ஒவ்வோர் எழுத்தின் வளைவிேைடும் பொருத்தி யிருப்பான்! இந்நிலையை அவனே தவிர்க்க இயலாது! ஏனெனில், தவிர்க்க முயன்றிருப்பின், அதைப் புறப்படுத்தா மலேயே அமைந்திருக்க வேண்டியதுதான்!

அவனின் மன உள்ள அறிவுத் திறத்திேைடு, தன் வாழ்க்கையையே எதில் ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்தான் என்னும் ஒரு போலிகைப்படியைக்கூட (Specimen Copy) அவ் வெளிப்பாட்டில் விளங்கிக் கொள்ளலாம்! உயர்ந்த நெஞ்சங்களின் உணர்வுக் கருவூலங்கள் யாவும் கால வெள்ளத் தில் கரந்தும் கரைந்தும் போகாது நிலைக்கின்றமையையும், உலர்ந்த நெஞ்சங்களின் உணர்ச்சிக் கருக்கூலங்கள் அவ்வக் காலத்தால் மெல்லாதேயே துப்பித் தொலைக்கப் பெற்றுப் போயினமையையும், அவற்றிற்கு அடிச்சுவடிகளே அற்று அழிந்தொழிந்தமையையும் இலக்கிய வரலாறுகள் தெளியக் காட்டுகின்றன!

அவ்வகையில், அறவிலக்கிய நூல்களை மட்டும் நம் பார்வைக்கு எடுத்துக் கொள்ளுவோமானால், தமிழ் தோன்றிய காலந்தொட்டு, ஈராயிரம் ஆண்டு முன் வரைக்கும் எந் நூலும் நம் கைக்குக் கிடைக்காது போயினது. அன்று தோன்றிய திருக்குறள் என்னும் செப்ப அறவிலக்கியமே கிடைத்துள்ளது! பிந்திச் சுழன்று கடந்த, ஈராயிரம் ஆண்டுக் கால அளவிடையில் தோன்றிய மூன்று நான்கு அறவிலக்கியப் படைப்புகளும், அரைகுறை யுடை உடுத்தியனவாகவே யுள்ளன!

அன்று தொட்டு அண்மைவரை, திருக்குறளை அடுத்த படியில் வைத்து எண்ணிப் பார்ப்பதற்குரிய அளவுக்கு, வேறொரு புதிய செப்ப அறநூலைப் படைக்கும் உரத்திற வன் புலமையும், உலகியலறிவும் மக்கள் நல வுணர்வும், மெய்ப் பொருள் தெளிவும் கொண்ட செம்புலவாணர் தோன்றிலர்! ஏன்?

இந்த ஈராயிரமாண்டு இடைவெளி முழுமையிலும், அய லகத்தின் ஊடுருவிகள் தமிழகத்தின் மதக்குடுமியை இறுகச் சுற்றிப் பற்றியவாறும் அசைத்திழுத்தவாறும் கரவெக்காள மிட்டுக் கயமையாடி வந்தனர்! அக் கால எல்லை முழுமை யிலும் உட்பகைகளுக்கு உரமிடப் பெற்றன! ஆண்ட மன்னர் களின் அறிவு நன்கு குட்டை குழப்பப் பெற்று, அந்நிலை தொடரக் காப்பும் இடப்பெற்றது! [ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை ,“பார்ப்பார்க்கு அல்லதுபணிபு அறியலையே” (63 : 1 - பதிற்றுப் பத்து) என காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பாடிய ஒரு வரியே, நம் மன்னர்களின் அடிமை நிலைமையையும், புலவர் பெருமக்களின் தன்மான மற்ற தன்மையையும் காட்டப் போதுவதாகும்!] அக்கால், புறப்பகைகள் புகமுலா வந்தன! எங்கும் அறிவு மழுக்கமும் பண்பு வழுக்கமும் கொழுத்தன! குடிமை கலைந்து, உரிமை குலைந்து அங்குமிங்குமாக அடிமையுணர்ச்சிகளே விளைந்தன! உளவள மறக் குலத்தினர், தம் பண்டை நலம் மறந்தனர்! திண்டுகளில் குந்தி, பிறரையும் கூட்டிச் சூழ வைத்துக்

கொண்டு தொன்மம் (புராணம்) படிப்பதையே, அறிவும் தொண்டும் அறனும் பயனுமென மலிந்த தமிழ உள்ளங்கள் உலைந்தன! மானமும் நாணமும் எங்கும் நலிந்தன!

இந்த நிலைப்போங்கு தொடர்ந்த ஈராயிரமாண்டுக் காலத் தொய்வு "பெரியார்" என்னும் பொதுத் தொண்டுத் தலை மகனரால் முற்றுப்புள்ளி பெற்றது! அதுவரை, இங்கு இலக்கிய முகைகளும் எழவில்லை! கலக்கிய பகைகளும் விழவில்லை! இந்த நூற்றாண்டிலேயே, நமக்குத் தன்னுரிமை ஊற்றுக்கண் திறந்தது! தன்மான எழுச்சியும், பண்டைய பண்புவளம் நோக்கிய விழிப்பும் வித்து விளர்ந்தன!

பெரியார் அவர்களின் பொதுத் தொண்டு விளைத்த பயனுய், தமிழரிற் பல்லோர் கடந்த பழைமையில் புழுங்கிய பாரிய நலத்தை, மீள உணர்ந்து தலை நிமிரத் தொடங்கினர்! பல துறைகளிலும் தம்முணர்வையும், உழைப்பையும், செலுத்தி வளர்ச்சி நோக்கினர். அவற்றிலொரு துறையாம் இலக்கியத்தின்கண்ணும் கனத்த உரவளர்ச்சி ஒரு புறத்தே நிகழ்ந்து வருகின்றது!

தனித்தமிழ் என்னும் பெயரிய தூய தமிழை முன்னிறுத்தி ஓரியக்கம் தோன்றி வளர்ந்து வருகின்ற ஒரு நிலையே, தமிழினம் தன்னை உணரத் தலைப்பட்டுவிட்டது என்பதற்குப் போதிய சான்ருகும். மறைமலையடிகள், பாவாணர், பாவேந்தர் போன்ரேரின் ஆக்க வெளிப்பாடுகள், தமிழ் தன்னை மீட்டுக் கொண்டு மீள உயருதற்கான ஆற்றல் தகவு அழிவுருதேயே அமைந்திலங்குவதை விளங்க விளக்கின!

தூய தமிழை வெறுப்பவன், கட்டாயமாகத் தமிழ்ப் பகைவனகவே இருப்பான்; அன்றெனில் அறியாமைச் சூழ்வால் தமிழ்ப் பேதையாக இருப்பான் என்ற தெளிவு தமிழின உணர்வு நிரம்பியோர் அனைவர்க்கும் படிப்படியே ஏற்பட்டு வருகின்றது! எங்கும் தூய தமிழுணர்வு செழித்து வளர்ந்து கடைப்பிடி கொள்ளப் பெற்று வருகின்றது. இந்நிலைக்குத்

தேவையான கடும் பணியைத் ‘தென்மொழி’ என்னும் தூய தமிழ்த் திங்களிதழ் இருபத்தியைந்தாண்டுகளாகத் தொடர்ந்து செய்து வருகின்றது. தமிழ்ச் சிறுர் சிறுமியர்க் கெனத் ‘தமிழ்ச்சிட்டு’ என்னும் பெயரில் தொடர்ந்து ஓரித ழும் இயங்கி வருகின்றது. இவற்றை இயக்கி வரும் பெருமகன் தூய்தமிழ்ச் செம்மல் பாவலரேறு. பெருஞ்சித்திரனுர் அவர்கள் ஆவார்கள்.

இனம், மொழி, நாடு ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்த தம் கருத்துகளை உரையாலும் பாட்டாலும் இடைவிடாது தொடர்ந்து பரப்பி வரும் இவர், இன்றைக்குத் தமிழினக்கொடி தன்னை மீட்டுக் கொள்ளவும், பற்றியேறிப் படரவும் பயனுய் நிற்கின்ற வலிந்த கொழுகொம்பு ஆவார்! ஒட்டு மொத்தத் தமிழினத்தின் முன்னேற்றம் பற்றிய நெஞ்ச அவலத்தைச் சுமந்தவாறு துடிப்பொடு உழைக்கும் தூய்மையர் இவர்! இப்பெருமகனுரின் ஆயிரக்கணக்கான உரைகளும் பாக்களும் கட்டுரைகளும் நூல்வடிவில் புறம் போந்திருப்பின், அவை நூற்றுக்கணக்கில் விரிந்து விளங்கியிருக்கும்! ஆனல், இது வரை அச்சில் படிந்து வெளியேறித் தனித்தவை, ஏறத்தாழ இருபது நூல்களே! அவை யாவும் மாணிக்க நூல்கள்! வயிரவொளி விரிபவை! தமிழிலக்கிய உலகில் மறுமலர்ச்சியை விளைவித்ததோடு தமிழின நாட்டுணர்வுகளையும் பதப்படுத் தும் சால்பு சான்றவை! அவ்வகையில், ‘உலகியல் நூறு’ என்ற தலைப்பில், புதிய ஓர் அறிவிலக்கியம் இப்பொழுது இவரிடமிருந்து வெளிப்போந்துள்ளது!

## இயல்களும் நிலைகளும்

உலகியலின் பாரிய பரப்பினை இருபது இயல்களாகப் பாகுபடுத்தி, ஒவ்வோர் இயலையும் ஐயைந்து நிலைகளாகக் கூறுபடுத்தி, மொத்தமாக நூறு வெண்பாக்களில் அவற்றைச் சிறக்க அடக்கித் திணித்து ‘உலகியல் நூறு’ என்று தலைப் பிட்டுப் படைத்திருக்கின்றுர்.

இருபது இயல் பிரிவுகளையும், அவற்றின் உள்ளடக்கமான நூறு நிலைப் பிரிவுகளையும் நனியொழுங்காக நிரல்படுத்தி, இந்நூலை அமைத்திருக்கும் செப்பம், இலக்கியப் படைப்பாளி-கள் யாவரும் முதற்கண் படித்துணர்ந்து பதித்துக் கொள்ள வேண்டிய அருநிலையாகும்.

இயல் தலைப்புகளும் நிலைத் தலைப்புகளும், — கச்சிதமும் சொற்சுருக்கமும் பொருள் விளக்கமும் உடைமை, இயற்கையின் பேரொழுங்கைப் போன்றதாகும். உலகியலில் உள்ளடங்க வேண்டிய அத்துணைப் பகுதிகளையும் ஒன்றுவிடாது அமைத்திருக்கும் நிறைவுநிலை, நூலுக்குரிய முழுமைப் பண்பை வெளிப்படுத்துவதாக உள்ளது.

## வெண்ணூற்பா

உயர்ந்த பா வகை! வெண்பா யாப்பமைப்பு! மூன்றே முக்கால் அடிகள்! முந்நூற்றெழுபத்தைந்து அடிவரம்பில் நூலே முழுக்கச் செறிக்கப்பட்டுள்ளது! எதுகையும் மோனையும் முறைமையில் அமைந்து ஓசைநலம் பொருந்தி யுயர்ந்து, இனிய எளிய கருத்துக்கேற்ற முழு ஊட்டந் திணிந்த சொற்களால் பெய்யப் பெற்று, வெண்பாக்கள் விளங்கி யொளிர்கின்றன! ஓ, விலக்கிய (ஓ - மதகுநீர் தாங்கு பலகை) நீரோட்ட விரைபாட்டு ஒழுக்கு ஒத்த பாவொழுங்கு! சுருக்கத்தையும், அதன்கண்ணேயே விளக்கத்தையும் புரிகின்ற ஊட்டச் சொற்போங்கு!

பாவொன்றினுள் அடங்கும் கருத்துத் திணுக்கம், வெண்பா யாப்பினுள் யாக்கப் பெற்றிருப்பினும், 'நூற்பா' என்னும்படியான உணர்வினையே ஊன்றித் துய்ப்போர்க்கு ஊட்டி விடுகின்றது. இந்நூலுள் மிளிரும் இப்பா அமைப்பை வெண்பா என்பதினும் 'வெண்ணூற்பா' (வெண் + நூல் + பா) எண்ணுமோர் பிரிதோர் சொல்லமைத்து வழங்குதல்கூடப் பொருத்தமுடைய தாகும்.

## கருத்துக் கிசைந்த பா நடை

இந்நூலாசிரியர் தம் பாநூல்கள் யாவற்றுக்கும் தாம் எடுத்து விளக்கப் போந்த கருத்துகட் கேற்ப பாநடையைத் தேர்ந்தெடுத்து யாக்கும் பண்பினர்! 'மகபுகு வஞ்சி'யை வஞ்சிப்பாவிலும், வாழ்வியல் முப்பதை இரு தூக்காக வந்த அறுசீர் ஆசிரிய மண்டிலப்பாவிலும், எண்சுவை எண்பதைச் சிந்தியல் வெண்பாவிலும், நூருசிரியத்தை ஆசிரியப்பாவி லும், கற்பனையூற்றை (புதுப்பா) உரைப்பாவிலும் யாத்தமைத் தளித்த பாங்கு, இப்பண்புடைமையாலேயேயாம்! இந்த 'உலகியல் நூறு' என்னும் நூலை வெண்பாவால் மட்டுமே ஆக்கி யுள்ளது இவரின் ஆக்கங்களில் புதிய போக்குடைய தாகும்.

## நடைத் தூய்மை

ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்டுத் தோன்றிய, முதல் அறவிலக்கண விலக்கியமாகிய திருக்குறளில்கூட தொண்டு (ஒன்பது) வடசொற்கள் திமிர்ந்து நுழைபட்டுள்ளன என்பது சொல்லாய்வு முயல்வில் வெளிப்பட நிற்கிறது! ஆனால், இக் கால் தோன்றியுள்ள 'உலகியல் நூறு' என்னும் இவ்வற விலக்கியத்துள் ஒரு பிறமொழிச் சொல்தானும் விரவவே யில்லை! இஃது, ஒரு தனித்த சிறப்பாகும்! பிறமொழிச் சொல் விரவா நிலையில், குறளினும் மேலோங்கி யிருக்கும் தன்மையை இது பெற்று நிற்கின்றது!

## தொடக்க வாய்ச்சொல்

'உலகம்' என்னும் சொற்பொருள் முன்வருமாறு நூல் நுனியைத் தொடங்குதலே, தமிழ்ப் பாவியல் அறிஞர் களிடையே மங்கலமாகக் கருதப் பெற்றுக் கடைப்பிடி கொண் டது என்பது, இதுவரை வந்த பாவிலக்கியங்கள் பலவற்றால் புலனாகின்ற ஒரு கருத்து! (ஆதி பகவன் முதற்றே உலகு,

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு, நனந்தலை உலகம் வளை இ, வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇ, மணிமலைப் பணைத் தோள் மாநில மடந்தை, உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் . . . என்றவாறு வரும் பல இலக்கியத் தொடக்கங் களைக் கருதுக !

இந்த 'உலகியல் நூறு' நூலின் தொடக்கத்தில் 'உலகம்' என்று இயல் தலைப்பிட்ட பரந்த அறவுணர்வின் ஆசிரிய உள்ளம், பாத்தொடக்கத்தில் முன்னைய நூல் தொடக்க மரபு முறையினின்றும் மிக மேம்பட்டு, அவ்வுலகமே நுண்மணல் அளவென அடங்கி விடுகின்ற பெரும் பேரியக்கப் பெரும்பரப் பின் திரட்சியமைப்பாகிய 'புடவி'யைக் குறித்து மேல் போகின்றது ! இது மற்றைய அனைத்தோடும் ஒப்பிட, தனிச் செம்மாப்பு நோக்கத் தொடக்கம் உடைமையைக் காட்டுகின் றது ! அரிய மங்கலத் தொடக்கமுமாகும் ! 'புடவிபல ஒன்றுகடல் புன்மணலின் ஞாலம்' என்றவாறு முதல் வரியி லேயே ஞாலத்தையும் சுட்டி மரபு வழுவாமையையும் புலப்பட வெளிப்படுத்தும் போங்கு, மிகை சிறப்பாகும் !

## பரந்த பயனோக்கு

தூய தமிழ் வளர்ச்சிக்கும், தமிழின மீட்புக்கும், தமிழக விடுதலைப் பேற்றுக்கும் ஆகத் தொடர்ந்து தொய்வுறுது தொண்டாற்றிவரும் **பாவலரேறு** உலகியலறிவு சுட்டப் புகுந்த நூறிடங்களிலும் தம் தலையாய தொண்டும் வாழ்க்கைக் குறிக் கோளுமான தமிழ் தமிழினம் தமிழ்நாடு என்னும் முந்நிலை மீட்புகள் பற்றிய கருத்துகளை, எவ்விடத்திலும் குறியாமலேயே யாத்துள்ளமை மிகவும் கருதற்குரியதாகும் !

நாடு இனம் மொழி கடந்த நிலையில், உலக மாந்தர் அனை வர்க்கும் பொதுவானதாகவே அறிவறவிலக்கியம் ஒன்று படைக்கப் பெறுதல் வேண்டும் என்ற சிறப்புயர்ந்த முறைமை, — திருக்குறளைப் போன்றே, இந்நூலுள்ளும் அமைந்துள்ளது !

## இனவொருமை

'தமிழினம், தமிழினம்' என ஓயாது தொடர்ந்து குர விட்டவாறு இன மீட்புக் கொள்கையையும் பரப்பி வருகின்ற ஓர் இனக்காப்பு உள்ளம், — தம் அறவிலக்கிய நூலுள் மாந்த வியல் கூறுமிடத்தே, மனவொருமையுடன் இரண்டு தனித் தனி இனங்கள் தம்முள் ஒன்ருதற்கு ஏது அமையுமாஞல், அவ்வினங்கட்குள் ஏற்படும் கலப்புநிலை ஏற்புடையதே என்னும் பொருள்பட "மனக்கலப்பு வாய்க்கில், இரு மாண்குடிக்குள் நேரும் இனக்கலப்பு, — குற்றமன்ரும்!" (பா : 13 : 1-2) என்று கருத்தளிக்கின்ற நிலையால், தம்மின் மாந்தப் பொதுமை நோக்கிய பரந்த பேருணர்வைப் புலப் படுத்தி நிற்கின்றது! உலகவொருமைக்கு வித்திடும் அரிய வைர வரியுமாகுமிது!

## அறிவியற் படிவு

அறிவியலுண்மைகளைப் பரவலாகச் சுட்டிக் கோடிட்ட வாறும் மெய்ப் பொருளியல் சாரப் படிவுள்ளவாறும் உலகிய லறிவுக் கருத்துகளை முற்படுத்தியவாறும் அறவிலக்கிய நூலொன்றை, முதன்முதலில் யாத்தளித்த பெருமையை, இந் நூலாசிரியப் பெருமகன் தமக்கே உரித்தாக்கிக் கொள்கின் ருர். அறவிலக்கிய மொன்றில் இவ்வளவு செறிவாக அறிவியற் கூற்றுப் பகுதிகள் அடங்கியமைக்கு, அறிவியல் விளக்கம் புடைசூழ்ந்தொளிரும் இக்காலச் சூழலும் ஒரு காரணமாகும்.

## கடவிடைகள் நேர்ச்சிக் கணிப்பு (1 : 4 இயல்நிலை)

கடவுதல் என்பது ஒன்றைக் கடத்துவதற்கு விரையச் செலுத்துதல் என்னும் பொருளில் முதற்கண் பயிலப்பெற்ற அரிய சொல்! பின், கடவுதல் என்பது கேள்வியைச் செலுத்துதலுக்கும் ஆகி வளர்ந்தது! கடவுவிடை > கட விடை எனப் புணர்ந்து நின்றது! கடவிடை என்பது விஞ விடை என்பதன் பிறிதொரு புடை, பொருள் வடிவம்.

விளுக்களும் அவற்றிற்கு இம் மாந்தர் இறுத்துக் கொள்ளு கின்ற விடைகளும், இவர்கள் இவ்வுலகக் காட்சிகளின் மற்றும் நிகழ்ச்சிகளின் வழியதான அறிவில், தாம் விளங்கிக் கொண்ட அளவினை மட்டுமே வைத்துக் கொண்டு, கணித்துச் சொல்லிக் கொள்ளும் எல்லையன என்னும் பேருண்மையினை விளக்கப் புகும் நூலாசிரியர்,-அக்கூற்றமைந்த தம் பாடற்கண்ணேயே, இவ்வுலகை உள்ளடக்கிய புடவியில் இஞ்ஞாலம் ஒரு கடற் 'புன்மணல்' அளவினதாக உள்ளது என்று ஒப்புமை கூறுத லும், அண்டத்தில் ஒளிரும் மின் பிழம்புகளையும் இம்மக்கள் நீருயிராகிய நிலமீனைக் குறித்த சொல்லாலேயே குறிக்கின்ற னர் என்ற உண்மை சுட்டுவது போன்று 'மீன்' என்ற சொல்லை விண்மீனைக் குறிக்கப் பயன்படுத்தலும், அவ்விண் மீன்களின் செறிவைக் கூறுமிடத்துக் காடுபோன்று அவை செறிந்துள்ளன என்னும் பொருளில் 'அடவியென மீன்செறி வாம்' எனப் பாவரியில் கூறி இவ்வுலகத்துள் அடங்கிய 'காட்டை'யே பொருத்திக் காட்டி ஒப்புமை சுட்டுதலும் உட் புலனுணர்ந்து உவப்படைதற் குரியவாகும்.

## அறிவு மருட்சிநிலை (பா: 3)

உருண்டை என்பது உருள்வதற்கு ஏதுவாய வடிவாகும். உருள் என்னும் வினையடிச் சொல்லினின்றே உருண்டை என்னும் வடிவு பிறந்திருத்தலையும் நாம் இங்கு ஒப்பக் கருது தல் நலம். (அம் மூலச் சொல்லினின்றே Roll (English), Rulla (Swedish), Roaler (Old French) Whirl (English), Rota (Latin) போலும் மேலையாரிய மொழிச் சொற்கள் பிறந்தமையையும் இங்குக் கருதி மகிழலாம்!)

நாம் உலவும் இவ்வுலகம் உருளும் ஓர் உருண்டை! கண்ணும் ஓர் உருள் உருண்டை! உருண்டையான கண், உருண்டையான உலகைப் பார்க்கும்பொழுது இவ்வுலகம் தட்டையான வடிவினதாகவே அதற்குத் தெரிவதாகின்றது!

ஏனெனில், உருண்டைக் கண் இவ்வுலகில் இருந்தவாறே தம் பார்வையைச் செலுத்துதலான், முழுமைத் தோற்ற உண்மையை விளங்கிக் கொள்ளாது நிற்கின்றது! அஃதாவது பார்க்கும் பொருள் பார்க்கப்படுகின்ற பொருளின் ஒரு புறத்திலே மட்டும் நின்று பொருந்தி அதைப் பார்க்கும் பொழுது, அக் காண்புறு பொருளின் முழுமையை விளங்காதேயே வேறொரு முடிபைத் தான் பெறுகின்றது! இவ்வுலகு தட்டையானது என்றே, கண் காட்சி பெறுகின்றது!

அதேபோல், இக் காண்புறு பொருளின்கண் ஒளியைக் காணும்போதும் இருளைக் காணும்போதும் இரவும் பகலுமாக இதில் மாறி மாறி ஏற்படுகின்றதென்ன, அவற்றைக் காண்புறு பொருளின் தன்மையதாகவே தப்பாகக் கணிக்கின்றது! இருளும் ஒளியும்,—அந்நிலத்தின் தன்றன்மையே அல்ல என்பதுவும், அவை கதிரவக் கோளின் வெய்யொளிப் படிவுப் பகுதியும் படாப் பகுதியுமாகிய இருவேறு பகுதிகளாக நிலச் சுழற்சியின் பாங்கோடேயே பொருந்தித் தொடர்கின்ற அமைவுகளின் ஒருபுடைக் காட்சியென்பதுவும் கட்புலனுக்கு நேரடியாகத் தோன்றுவதில்லை! ஏனெனில், அக் கட்புலக் காட்சியை ஆய்ந்து தெரிந்து கொள்ள வேண்டிய அறிவுபுலத் தெளிவு அது!

மருண்ட அறிவினர், உலகம் தட்டையாயே இருப்பது போன்றும், இருண்டும் ஒளிர்வதுமாகிய தன்மைகளை அது பெற்றிருப்பதைப் போன்றும்தாம் தம் காட்சியளவையை மட்டும் வைத்துக் கொண்டே முடிபு கொள்வர்! அதைப் போன்றேதாம் இவ்வுலகின் உண்மை நிலைகளையும் உண்மையன்மை நிலைகளையும் ஆழ்ந்த அறிவொடு எடையிட்டுப் பாராதேயே துடுமெனத் தாம் கண்ட காட்சியே மெய்யென மருண்ட அறிவால் கருதிக் கொண்டுவிடுகின்றனர்.

"கண்டதே காட்சி, கொண்டதே கோலம்", "கண்ணால் காண்பதுவும் பொய், காதால் கேட்பதுவும் பொய், தீர உசாவியறிதலே மெய்" என்பன போலும் பரவலாக வழங்கும் நாட்டுப் புறப் பழமொழிகள்,—இந்த மெய்க் கருத்தை ஒருபுடை யொத்த பொது மொழிகளாகும்!

எந்த இடத்திலிருந்து கொண்டு அப்பொருளைக் காண்கின்றது என்பதைப் பொறுத்தே, அப் பொருளின் காட்சி கண்ணுக்குப் புலனாகின்றது! அப்போதுங்கூட அதன் முழுமையைக் காணவியலாது! அதன் முழுமையைக் காண, அறிவானது அக்கண் தான் முன்கண்ட, அதாவது இப்போது கண்ணுக்குப் புலப்படாப் பகுதியாகிய மறைவுப் புறப் பகுதியை, அப்பொருளொடு இணைத்துத் தருகின்ற உளக் காட்சி இயைப்பினை நிகழ்த்துதல் வேண்டும். அஃதுடனேயே ஓரளவு முழுமையான பொருட்காட்சியை உணர முடிவதாகும்.

எப்பொருளின் முழுமையான காட்சியையும் உணரவியலுமே ஒழிய, நம்மால் காணவே இயலாதாகும்! ஏனெனில், அந்த அமைப்பிலேயே நம்மின் கண்ணே உள்ளது! ஆக, காட்சியளவொன்றினாலேயே எந்தப் பொருளின் முழுத் தோற்றத்தையும் கண்டு கொள்ளக்கூடிய திறனே நமக்கில்லாத போது, உண்மை அல்லது உண்மையன்மையாகிய இவற்றை அதன் மெய்ந்நிலைப்பட அறிவதும் உணர்வதும் மிகப் பெரும்பாடாகும். இந்நிலையை யுணராததாலேயே மக்களுட் பெரும்பாலோரும் தாறுமாறாகத் தாம் கண்ட கட்புலக் காட்சியளவைகளின் துணைமட்டுமே கொண்டவாறு, உள்ளதென்றும் இல்லதென்றும், அண்மைத் தென்றும், சேய்மைத் தென்றும் மயக்குற்ற நிலையிலேயே கூறி நிற்கின்றனர்.

இக் கருத்தையே,

"உருண்டை உலகம் உருள்விழிக்குத் தட்டாய்
இருண்டொளிரும் தன்மைத் தியல்பின்—மருண்டறிவால்
உண்மை இலவென்பார் இன்மை உளவென்பார்
அண்மை தொலைவென்பார் ஆம்"

எனத் தம்மின் உட்புலப்பாட்டை, தூவெண்பாட்டில் ஒழுக்குவார் பாவலரேறு!

“ஆர்க்டூரசு(s)” என்பது ஒரு விண்மீன்! இது நாமிருக்கும் நிலத்தினின்று 38 ஒளியாண்டுத் தொலைவில் உள்ளது(?). [ஒளிவேகம் என்பது நொடிக்கு 1,86,000 கற்கள் விரைவில் பாயும் ஒளிச் செலவு. ஒளியாண்டு: 1,86,000 கற்கள் விரைவில் பாயும் ஒளிச் செலவு. ஒளி யாண்டு: $1,86,000 \times 60 \times 60 \times 24 \times 365 =$ ஓர் ஒளியாண்டு (one light year). இந்தத் தொலைவு போல் இங்கிருந்து 38 மடங்குத் தொலைவில் உள்ளது இந்த ஆர்க்டூரசு என்னும் விண்மீன். கதிரவ ஒளி நிலத்தை வந்தடைய எட்டு நிமையங்கள் ஆகின்றன என்ற அறிவியல் உண்மையைக் கருத்தில் கொண்டு ஓர் ஒளியாண்டுத் தொலைவு என்பது எவ்வளவாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க!] இன்று நாம் தொலைநோக்கியின் வழியாகக் காணுவோமாயின் அக்காட்சியின் வழி, இன்றைக்கு அந்த விண்மீனையே பார்த்துவிட்டதாக அறிவியல் உண்மையொடு பொருந்த அறுதியிட்டு விட இயலாது! 1944-ஆம் ஆண்டு ஆர்க்டூரசு அவ்விடத்திலிருந்த காட்சியையே நாம் காண இயல்வதாகும்! இன்று அது அவ்விடத்தில் இருக்கலாம்! அல்லது இல்லாதும் போயிருக்கலாம்! அதாவது, அவ்விண்மீன் வேறொன்றொன்றுடனுவது ஒன்றியிருக்கலாம் அல்லது சிதர்ந்தும் போயிருக்கலாம்! இப்படி, நேரடிக் காட்சியையே உளதா இலதா என்று வரையறைப்படுத்திவிட இயலாதபோழ்து, உண்மை அன்மைக் காட்சிகளை அல்லது நிகழ்வுகளை எங்ஙன் அறுதியறிய வொல்லும் என்ற அறிவியல் பார்வையில் எழுந்ததே இம்மேற்கூறிய பா!

## உறழ்ச்சி நிலை

‘உறு’ என்பது பொருந்துதலைக் குறிக்க எழுந்த ஒரு வினையடிச்சொல். அது, உறழ் என்னும் வடிவெய்தி மாறுபாட்டைக் குறிக்க நின்றது. (பொரு என்னும் பொருந்துதல் கருத்து வினையடிச்சொல் பொரு > போர் என்றாகி, மாறுபட்டுப் பொருதுதலைக் குறிக்க எழுந்தது போலென்க...)

உலகியல் நூறின் இரண்டாம் பாடல், மாறுபாட்டு நிலையை வலியுறுத்த எழுந்தது.

நாமிருக்கும் நிலக்கோள், கதிரவமண்டிலக் குடும்ப வுறுப்பினுள் ஒன்று. கதிரவனைச் சார்ந்தியங்கும் பெருங் கோள்களாக அறிவியல் வரையறைப்படுத்தம் செய்த ஒன்பான் கோள்கள், ப்ளூட்டோ, நெப்டியூன், யுரேனசு, காரி, வியாழன், வெள்ளி, ஞாலம், செவ்வாய், அறிவன் என்பன ஆகும். அண்மையில் புதிய ஒரு கோளும் கதிரவ மண்டிலக் குடும்பத்துள் ஓர் உறுப்பெனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அக்கோளுக்கு அறிவியலார் "1982 DV" என்று பெயரிட்டுள்ளனர்!

1929-ஆம் ஆண்டுவரை "ப்ளூட்டோ" என்னும் கோளொன்று கதிரவனைச் சுற்றி வருவதே அறிவியலாளர்க் குத் தெரியாது! அதுவரை, எட்டுக்கோள்களே என்று அறுதியுரைத்து வந்தனர்! கதிரவ மண்டில விளிம்பில் ஒரு கோள் தென்படுவதைத் தொலைநோக்காடியின் வழி "டோம்பா" என்னும் பெயரிய அமெரிக்க வானியலறிஞனை இளைஞன் ஒருவன் காணும் வரையில் அக்கூற்று நிலைத்தது. பின்னர் 1930-இல் ஒன்பது கோள்களே என வரையறைப் படுத்தப் பெற்றது! இப்பொழுதோ, அது பத்தாகிவிட்டது!

நிலவுலகத்தைப் போன்று 1314 மடங்கினைத் தன் னகத்தே அடக்கிக் கொள்ளவல்ல வியாழக் கோளைச் சுற்றி வரும் துணைக்கோள்கள் நான்கு என, இன்றைக்கு முன்னூறு ஆண்டுகட்கு முன்னர் "கலிலீயோ" கண்டார். அவை நான்கும் அறிவன் கோளைப் போன்ற பருமையன. ஆனால், வானறிவியல் வளர்ச்சியில், அத்துணைக் கோள்கள் பன்னி ரண்டு எனப் பின்னர் அறுதியிடப் பெற்றன.

கதிரவ மண்டிலத்தில் சிறுகோள்களாக (Asteroids) நாற்பதினாயிரம் முதல் ஐம்பதினாயிரம் வரை அமைந்திருக்க வேண்டும் என, வானறிவியல் அறிஞர்களின் "தூவல்முனைக்

கணக்கீடு'' தெரிவிக்கின்றது. அவற்றில், ஈராயிரத்துக்கும் குறைவான சிறு கோள்களே இதுகாறும் வரையறைக்குட் பட்டுள்ளன !

நம் கதிரவக் குடும்பத் தொடர்பான கோள்நிலை வரையறைகளின் மீதிலேயே இன்னும் வானியலாய்வு தொடர்ந்த படியுள்ளது. எனவே இன்னும் பல்லாயிரங் கோடிக் கோள்களும், கதிரவன் போலும் பல்லாயிரங்கோடி விண்மீன்களும் ஓரியையிலும் எதிர்விலும் விசைந்தியங்கும் நிலையில், நம் மக்கள் கற்றேம் கல்லேம், ஆராய்வுற்றேம் என்றவாறாக மாறு பட்டவாறு சொல்லிச் செல்லவே இவ்வுலகின்கண் இயலும் என்ற அரிய உண்மையை உறழ்ச்சி நிலைப்பாட்டின் உள்ளடக்கமாக்கி யிருக்கின்றார், நூலாசிரியர் !

## நினைவு

மாந்தன் பெற்றுள்ள உணர்வுகள் பலவற்றுள்ளும் மிகவும் நெடியதும் நீளியதுமாகிய பேருணர்வு என்பது, அவன் தானே அமைந்து அமர்ந்து எண்ணிப் பார்த்தற்குரிய "நினைவு" என்னும் ஒன்றேயாம். மிக நீளமாகக் குழப்பமில்லாது உணர்வதற்குரிய வேறு நிலைகள் அதனினும் வேறில்லை என்னும் உண்மை, "நிலையிற் பெரிதாகும் நீள் நினைவு" என்னும் பிழிவு வரியுள் வடிக்கப் பெற்றுள்ளது !

## அரசும் குடியும்

முடியரசு (Monarchy) செவ்விதாக அமைய வேண்டுமானால், அது மனநலஞ் செறிந்த மன்னனைக் கொண்டதாகவும், குடியரசு (Democracy) செவ்விதாக அமைய வேண்டுமானால் அறிவுநலஞ் சான்ற குடிமக்களைக் கொண்டதாகவும், வல்லதிகார அரசு (Dictatorship) செவ்விதாக அமைய வேண்டுமானால் அது படைவலம் (வலி) நிறைந்ததாகவும், குழு ஆட்சி அரசு (Aristocracy) செவ்விதாக இருக்க வேண்டுமெனில் அது மக்களினப் பற்று சான்ற ஆன்றோரைக்

கொண்டதாகவும் பொருந்தி யிருக்க வேண்டும். அந்தந்த அரசுகளும் மேற்கண்ட நிலைகளுடன் பொருந்தியிருப்பினும், அஃததற்குரிய குடிகள் "குடிமை நலம்" பொருந்தியவர் களாகவிருந்து அவ்வவற்றோடு ஒத்துப்போகும் வாய்ப்புகள் அமைந்திருந்தால் மட்டுமே, அது இயல்வதும் சிறப்புடையதும் ஆகும் என, அரசுநிலை விரிக்கும் அழகு தனிச் சிறப்புடைய தாகும். "அடிமை, மடிமை, அறியாமை குற்றம்,—மிடிமை களவு கொலை மீளல் குடிமை (பா : 12 : 1-2) என, குடிமை நலம் என்பதற்குரிய விளக்கத்தைப் பிரிதோரிடத்தில் சுட்டுவார்!

## ஒறுப்பு

"ஒறுப்பு நிலை" என்னும் தலைப்பின்கீழ், குற்றம் செய்வோரை நல்வழிப்படுத்தி வெல்லும் வழியை மேற்கொள் ளாது, "சொல்லால் எச்சரித்துக் கடிதல், தடியடி ஏவல், சிறைப்படுத்தல், உயிர் நீக்கத் தண்டனை" போலும் தண்ட முறைகளை அரசு மேற்கொள்ளுதல் '**பயனின்றே**' (பா : 9: 2-4) என்ற நூலாசிரியர், அரசுக்குரிய கடமை களாகச் சுட்டும்பொழுது 'தண்டம்' என்பதைத் தலையாய வற்றில் ஒன்றாகச் சுட்டி நிற்பார்!

குடிமைநலம் பொருந்திய மக்கட்குவேண்டிய உரிமையை யும், உழைப்பு உருவாக்கத்தையும், கல்வி வளர்ப்பையும், வேளாண்மை விரிவு செய்கையையும் பரக்கச் செய்யும் ஒரு நல்லரசு, அவற்றிற்குத் தடையாக நிற்கும் குற்றவாளிகளை முறைப்படி ஒறுக்காதுவிடின், இம்மேற்கண்ட இன்றியமை யாக் கடமைகளால் வருவதாகிய பொதுமை நலம் கேடுறு மாதலின், தண்டத்தையும் ஒரு கடமையாகத் தவிர்க்காது சேர்த்துள்ளார்!

[நல்ல குடிமக்களைக் காத்தற்கு, அரசனானவன் கொடிய வரைக் கொலையே செய்தல் வேண்டும்! அது களை களைவதைப் போன்றது என்னும் வள்ளுவர் வாய்மொழி ஈண்டு

ஒப்புநோக்கற்குரியது! (கொலையிற் கொடியாரை வேந் தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர். (குறள்: 550). திருவள்ளுவரும் தண்டத்தை வேண்டா வென்னவில்லை! அரசனின், கையிகந்த தண்டத்தையே கடிகின்றார் (ஒ. நோ.: "கையிகந்த தண்டம்", குறள்: 567) என்பது இங்கு கருதற்குரியது!]

அரசின், இம்மேற்கண்ட கடமைத் தொடர்பான நிலைகளைத் தவிர்த்து, அறியாமையாலும் அழுக்காற்றினாலும் தீமை புரியும் குடிமக்களில் ஒரு சிலராகிய புன்மையாளரை நல்வழிப் படுத்தி, நாட்டந் திசை திருப்பித் திருத்துதலே ஏற்றதாம் என்னும் ஆசிரியர் கருத்து, இங்கு ஒப்பிட்டு ஊன்றிப் பார்த்து உணர வேண்டியதாகும்!

## ஆணையும், பூணையும்

ஆளுமைக் கட்டிலை எவ்வழியாலோ பற்றியேறிவிட்ட, மக்கள் நல நாட்டமற்ற ஆளவந்தார், தமக்கேற்ற நிலையில் முன்னறிவோடு கூடி தம்முடைய அதிகாரத் துணையை வைத்துக் கொண்டு, உருவாக்கிக் கொள்ளுவனவே சட்டங்களாகின்றன! (இவ்விடத்தில், முன் அரசு உருவாக்கி வைத்த சட்டங்களில் திருத்தம் ஏற்படுத்திக் கொள்ளும் இக்கால அரசியல் சூழ்ச்சிகளையும் கருத்திற் கொள்ள வேண்டும்!) இக்கால் நடக்கின்ற அரசியல் கூத்தடிப்புகட்கிடையில் நடக்கும் இவ்வகைத் திருட்டுத்தனத்தை அறியா மக்கள் உணராவாறு பல்வகைத் திசை திருப்பங்களும் செய்யப் பெறுகின்றமையையும் கூர்ந்து நோக்குவோர் உணர்வர்! ஆளவந்தவர், தமக்குச் சார்பாய் உருவாக்கிக் கொள்ளும் நெறிமுறைகளே சட்டங்களாக உலவுகின்றன என்பதை விளக்குகையில், "ஆணைக்குழுசெய் யறநெறி, ஆங்கோர் ஏழைப் பூணைக்கு உதவும் எனல் பொய்" (பா: 7: 3–4) என, அரிய ஒப்புமை காட்டிச் சாடி நிற்கும் நூலாசிரியரின் திறம் போற்றுதற் குரியதாகும்!

## யாருக்கு யார் காவல் ?

நாட்டியலில் அரண்நிலை கூறவந்த நூலாசிரியர், ஒரு நாட்டினை ஆள்வோர்க்குத் தன்னுற்றலே வலிந்த அரண் என்று வலியுறுத்தி நின்றவாறே, மேலும் சில அரண்களையும் அட்டியலிடுகின்ற அழகு, மிகப் பயனுய் அமைந்திருக்கின்றது! 'சேய்க்குத் தாய் கன்னி தந்தை சேயிழைக்கு வன்கணவன்' (பா : 8 : 1) என வரும் முதல் வரியில் உள்ள இரண்டாவது குறிப்பு தமிழிலக்கிய வுலகிற்கே மிகப் புதியது! தந்தையை இழந்த அல்லது ஈடுபாடற்ற நிலையில் தந்தை திரிந்து கொண்டுள்ள குடும்பங்களில் கன்னிப் பெண்கள் பெரும்பாலும் தம் தாயரை அன்பாலும் நடைமுறையாலும் ஏமாற்றி ஏய்த்து அல்லது உடன்படுமாறு செய்து தடம் புரண்டு விடுவதற்கு அவ்வளவு வாய்ப்புகள் உள்ளன! அன்பும் மென்மையும் ஆர்ந்துறையும் தாயர், தட்டிக் கேட்கவும் அதட்டிக் கேட்கவும் கூட அமைவில்லாத பொதுநிலை மனத்தைப் பெற்றவராகையால், கன்னியரான தம் பெண்டிர்க்கு அரணுக விளங்கும் தகுதியற்றவராகவே பெரும்பாலும் அமைந்திருப்பர்! தந்தை நிலை அப்படியன்று! அவன் புறவுலகத்தே புழங்குபவன். உலகியல் சூழலில் உழன்று உலவும் ஒவ்வொரு தந்தையும் தம் கன்னியரான மக்கள் கன்னிமை எய்தியதிலிருந்து அவர்களைக் கட்டிக் கொடுப்பது வரையிலான அவ்வளவு காலமும் மிகுந்த எச்சரிக்கையுடனும், உறத்த கவனத்துடனும்தான் இயங்குவான். அவளுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தரும் முனைவுடனேயே இருப்பான்! எனவே, தந்தையே தம் மகளான கன்னியொருத்திக்கு வன்காவலாக இருப்பான் அல்லது இருந்தாக வேண்டும் என்னும் பொருள்பட "கன்னி தந்தை" என அரணிலை காட்டுவார், இந்நூலாசிரியர்.

கன்னிக்குத் தந்தையோல், மணமான ஒரு பெண்ணுக்கு வலிய அரண் அவளின் கணவனே என்று சுட்ட வந்தவர், வெறுங் கணவனுக மட்டும் அவளுக்கு அவன் அமைந்

திருந்தால் போதாது, அவன் வலிமையுடைய கணவனாக இருந்தாக வேண்டும் என்று அழுத்தம் தருவார்! 'வன் கணவன்' என்னும் சொல்லில் பயிலப் பெற்றுள்ள 'வல்' என்னும் முன் அடைமொழி அவ்வளவு பொருட் சாரமுடையதாகும்! 'வல்' என்னும் மூலச் சொல்லுக்குரிய வலிமை, வன்மை, இயலுகை, ஆற்றல், திண்மை ஆகிய அனைத்துப் பொருட்கூறுகளையும் அடக்கிய தன்மையனாக கணவன் இருந்தால்தான், ஒரு பெண்ணுக்கு உண்மையாகவே அவனால் வலிய அரணாக விளங்க இயலும் என்னும் பொருள் விளங்க 'சேயிழைக்கு வன்கணவன்' என்பார். இல்லெனில், அவன் கணவனாக இருக்கலாம்; காவலனாக இருக்க இயலாதென்னும் உட்குறிப்பும் உள்ளுள்ளது!

## ஒழுக்கம் > பசியின்மை

ஒழுக்க நிலை என்னும் தலைப்பின்கீழ், ஒழுக்கம் என்பது இன்னது எனவும், அது எவற்றின் துணையால் குலைவுபடாமல் இருக்கவல்லது என்பதையும் ஆழமாகக் கோடிட்டு உள்ளார்! "ஒழுக்கம் பசியின்மை ......" (பா. 15 : 1) என்ற பாத் தொடக்கமே நமக்கு ஒருண்மையைக் கதுமெனக் காட்டி விடுகின்றது! உலகத்தின்கண் நடக்கும் பெரும்பாலான ஒழுக்கக்கேடுகள் வறுமையின் உச்சகட்டமாகிய பசியுணர்ச்சியால் விளைவனவே! குடிகளிடம் பசியைப் போக்கிவிட்டால் பெரும்பாலும் ஒழுக்கச் சிதைவுகள் சிதர்ந்து விலகிவிடும் என்ற குறிப்பை, பாடலின் முதலிரண்டு சீர்களே மூச்சுயிர்த்துக் காட்டி விடுகின்றன.

ஒரு மாந்தனின் பசியைப் போக்கி, அவன் ஊன்றிச் செய்தற்குரிய தொழிலை அவனுக்கு வாய்ப்பாக ஏற்படுத்திக் கொடுத்து, அறிவையும் புகட்டி விட்டால், அவனுக்கு, ஒழுக்கத்தினின்றும் பிசகிவிட வாய்ப்பில்லாது போய்விடும் என்னும் அருமையான வழிமுறையை இந்நூலாசிரியர் குறிக்கின்றார்! பொது மாந்தர் அனைவரும், இந்த நிலைகளை உருவாக்கித் தருவதொன்றாலேயே ஒழுக்கமாக இருப்பார்கள்!

ஆனல், இயல்பாகவே உள்ளத்தில் அமைந்த ஒழுக்க வுணர்வே உயர்த்த நல்லொழுக்கமாகும் எனச் சுட்டும் நூலாசிரியர், அப்படிப்பட்ட நல்லொழுக்கமுங்கூட, மேற் சொன்ன பசி, தொழிலின்மை, கல்வியறிவின்மை ஆகியன எய்திய அந்தச் சூழலில், எவருக்கும் தெரியாதவாறு திருட்டுத் தனமாக வழுவி இடறும் என்கின்ருர் ! இக் கருத்தில் ஆசிரியர் முடிபாவது பசி நீக்கம், தொழில் வாய்ப்பு, கல்வி வாய்ப்பு ஆகிய மூன்றையும் கட்டாயமாக உருவாக்கித் தருவதொன் ருலேயே ஒருவனிடம் அல்லது ஒரு நாட்டுக் குடிகளிடம் ஒழுக்கத்தை உருவாக்கவும் நிலைப்புறுத்தவும் முடியும் என்பதே! ஒன்று தவிர்த்துப் பிற உருவாக்குதலுங்கூட, ஒழுக்கக் கேட்டில் வழுக்கி, இழுக்கம் எய்திவிடும்படியான நிலையையே உருவாக்கும் என்பதுவும் ஓர் உட்குறிப்பாகும்! "வழுக்கலிலா உள்ளத் தொழுக்கம் உயரொழுக்கம்! ஆங்கதுவும் கள்ளத்து இடறும் அக்கால்" என்பதில் வரும் "கள்ளத்து இடறும்" என்ற சொல்லாட்சி அரிய கருத்து நுட்பம் பொருந்திய தாகும்.

## எங்கும் யார்க்கும் எதுவும் பொது !

ஒருபுறம், வருந்த வருந்த உடலுழைப்பில் பலர் கடுமை யாக ஈடுபடுகின்றனர்! ஒருபுறம், உவக்க உவக்கப் பலர் தாம்பாட்டுக்கும் துய்ப்பதில் சலிக்க ஈடுபடுகின்றனர். ஒரு புறம் நாட்டின் அமைதி குலையுமாறு இடையூறு புரிவதில் சிலர் கரவாக ஈடுபடுகின்றனர்! நாட்டு இழுக்கு என்பதே இவை தாம் என்னும் நூலாசிரியர், பிறநிலை உடலுழைப்பு, வேளாண்மை, துய்ப்பு, ஏந்து ஆகிய இம்மூன்றையும் எங்கும் யார்க்கும் "பொது" என்று அமைத்து விடுதல் வேண்டும் என்று பொதுமையியலின் தொடக்கப் பாவிலேயே தம் உள் விருப்பை மலர்த்திக் காட்டுகின்ருர் !

இடம், குடி, பால், எண், காலம் ஆகிய எந்நிலையிலும் வேறுபாடில்லாதவாறு செல்வநுகர்ச்சியானது பொதுமை

யாக்கப்படல் வேண்டும் என்ற கருத்தை நுகர்ச்சிநிலை என்னும் தலைப்பின்கீழ் (பா : 20) தெளிவுபடச் சுட்டித் தம் அறவுள்ளத்தின் பொதுமை வேட்கையை, நூலாசிரியர் புலப்படுத்துகின்றார் !

## காலம் வரும் !

நிரம்பிய செல்வச் செழிப்பு கொழித்த மாடமாளிகைகள் ! வானைமுட்டும் வளமனைகள் ! அவை மேன்மேலும் கட்டப் பெறுதலால் பெருக்கமுற்றுக் கொண்டுள்ளன ! அவை நிறைந்த தெருக்களின் ஒதுக்க ஓரத்தில் மிகச் சிறிய குடிசைகளின் பெருக்கம் ! உழைக்கும் வகுப்பினராயிருத்தலால் அவர்களிடம் வலிமை அடர்ந்திருப்பதையும் அவர்கள் பெருகிய தொகையினராய் உள்ளமையையும், நூலாசிரியர் காண்கின்றார் !

இந்நிலை எதில் போய் முடியும் தெரியுமா ? ஆசிரியர் விளக்குகிறார் ! " அளவில் பெருகிக் கொண்டிருக்கும் குடிசைகளில் வாழும் ஏழை உழைப்பாளிகளான, ஒரு சார்பாய் ஏமாற்றி வஞ்சிக்கப்பெற்று வரும் இவ்வலிய மக்கள், அளவிலும் நிலையிலும் மேம்பட்டுப் பருத்துவரும் இவ்வளமனைகட்குள்ளேயும் மாட மாளிகைக் குள்ளேயும், தம் கால்களை முன்னெடுத்துத் தோய்த்து வைத்து, ஒருவர்க்கே உரிமை யெனும் நிலைமாற்றி, பொதுமை நிலையைத் தாமே தோற்றி, வாழ்க்கையையே அங்கிருந்து கொண்டுதாம் வாழப் போகிறார்கள் ! அதற்கான காலம் வரத்தான் போகிறது ! "— என்று உறையுள் நிலைத் தலைப்பின்கீழ் எக்காளத்தொடு " **விரிச்சி** " விரிக்கின்றார் ! பின்நடப்பை முற்கணித்து முழங்குகின்றார் !

அழகிய இசையியைந்த இனிய பாடல் பிறக்கின்றது !

" திருக்குவைசூழ் மாடத் தெருக்கடையின் ஓரத்
துருக்குலையும் வாழ்க்கை ஒழிக ! —பெருக்கமுறும்
வான்தோய் வளமனைக்குள் வன்குடில்வாழ் ஏழையர்தம்
கான்தோயுங் காலம் வரும்." —(பா : 18)

இந்த நான்கு வரிப் பாடற்கான விரிவாக்கப் பொருளை, பல ஆண்டுகட்கு முன்னரே, "ஒருநாள் வரத்தான் போகிறது" என்ற தலைப்பில் அழகிய இனிய சந்த யாப்பில் இந் நூலாசிரியர் புறப்படுத்தியுள்ளார்! உள்ளத்தை உருக்கி உணர்வெழுச்சியை உசுப்பிவிடும் அரிய புறப்பாடல் அது! (காண்க: கனிச்சாறு— 2-ஆம் தொகுதி. பா. எண்: 63)

## இன்ப துன்பமும் துன்ப இன்பமும்

துன்ப நெருக்கத்தால் நாம் அறிந்து கொள்ளும் அறிவு இறப்பற்ற இன்பக் கல்வி என்பார் நூலாசிரியர்! இன்பத் தோய்வால் உணர்வு நிலைகளை மட்டுமே நம்மால் பெற முடியும்; அதே போழ்து உலகியல் தெளிவு நிலையில் நமக்குச் சுன்ன மதிப்பெண்ணே கிடைக்கும்! இக் கருத்தை "இன் புணர்வால் உள்ளம் விளங்கும் உலகம் விளங்காதே" (பா: 25) என, ஒளியெழுத்தில் அழகுறச் சுட்டுவார்! நமக்கு வெப்பம் தேவைப்பட்ட இடத்து, நிழல் துன்பமானதாக இருக்கும்; நிழல் தேவைப்பட்டு விரும்பியணுகிய இடத்து, படுகின்ற வெப்பம் துன்பமானதாக இருக்கும். எனவே இன்ப துன்ப மென்பதெல்லாம், உயிர்க்குப் பொருந்திய அல்லது பொருந் தாத தற்சார்பு நிலைகளே என்பார்!

## காதலெனும் போது!

"காலமோ, நல்லிளமைக் காலம்! நிலமோ, நெஞ்ச நறுநிலம்! வித்தோ, எண்ண வித்து! விதைப்போரோ, விழியர்கள்! (உழவர்களில்லர்!) எருவோ, (இருவிழியர் களும் தம்முள் உரையாடி அளாவுகை) சொல்லெரு! மழையோ, இருவரின் உயிரும் உள்ளமும் பொழியும் வேட்கை! வெப்பமோ ஊரார் தூற்றும் அலர்...... இவை முறையே அமைந்த நிலையில், இருவர் உள்ளத்தும், ஊன்றுகை பெற்ற எண்ண வித்தானது விளர்ந்து விளைந்து 'காதல்' என்னும் முகையை அரும்பச் செய்கின்றது!" இவ்வாறு இந்த அரிய

உணர்வு விளர்வுப் போங்கை 'காதல் நிலை' என்னும் தலைப்பின் கீழ் அருமையாக ஆசிரியர் அமைத்துள்ளார்! காதல் தோற்ற மானது, எங்ஙன், எங்கு, எவர்பால், எப்படி நிகழ்வதாகும் என்பதற்கான முழு விளக்கம் காழ்த்த அரிய இனிய செறி வுள்ள இந்நூற்பா, இலக்கிய வுலகிற்கு ஒருபுடைப் புதுமை வடிவத் தோற்ற முடையதாகும்!

## கடனென்ப காளையர்க்குக் காட்சி!

நமக்குற்ற நூல்கள் எவற்றினுள்ளும், இவ்வளவு சாறமாக இக்கருத்து வெளிப்பட்டதே யில்லை! திருக்குறளில்கூட, அரசர்க்கும் அமைச்சர்க்கும் சான்றோர்க்கும் பிற பிறவே வலி யுறுத்தப் பெற்றன! கல்வியைக்கூட எப்பருவத்தினர்க்கும் உரியதாக்கிக் கூறும் பொதுச் சிறப்புக் கருத்தும் தொடர்ந்து வந்ததுதான்!

புறநானூறு போலும் மறம் பற்றிய நூல்களிலும் "களிறெறிந்து பெயர்த்தல் காளைக்குக் கடனே!" என்ற வாருன போங்குகளிலேயே கடமை வலியுறுத்தப் பெற்றது! இந்நூலில் அக்கடமைநிலை முறைப்படுத்தப் பட்டுள்ளது! இளைஞர்களே ஒரு நாட்டின் ஆளுமைப் பாங்கில் அடுத்த படியில் அமர்தற்கும் நாட்டைச் செலுத்துதற்குமாகிய நெருக்கச் சூழலில் அமைந்த அகவையினராதலால், அவர்கள் முதற்கண் கட்டாயக் கடமையாக அறிவுதெளிதலை மேற் கொள்ள வேண்டும் என்று, நூலாசிரியர், ஆண்மையியல் தொடக்க வரியிலேயே உரக்க விரிக்கின்றுர்!

"கடனென்ப காளையர்க்குக் காட்சி" என்னும் மணி மொழியில் பயிலப்பெறும் **காட்சி** என்னும் சொல், வெறும் கட்புலனை மட்டுமே குறியாமல், 'அறிவுத் தெரிவு' என்னும் சிறப்புப் பொருளையும் குறிப்பதாகும். கழக இலக்கியங்களில் இச்சொல் வழங்குமிடங்களை நோக்குமிடத்து, திருக்குறளி லேயே இச்சொல்லுக்கு இம்மேற்கண்ட 'அறிவுத் தெரிவு'

என்னும் சிறப்புப் பொருள் விளங்கக் காட்சியாகின்றது! அறிவுடையோரைக் காட்சியவர், காட்சியார் என்றவாறுன சொற்களாலே வள்ளுவர் சிறக்கக் குறிப்பார்! (ஒ. நோ: குறள் எண்கள்: 174, 199, 218, 258, 352, 654, 699).

## பொன்மணி மொழிகள்

"கடனென்ப காலையர்க்குக் காட்சி" என்பது போலும் கருத்துத் திணிந்த பொன்மணி மொழிகள், இந்நூலுள் பரவலாக விரவிக் கிடக்கின்றன! அவற்றின் அமைவில், திருக்குறளைப் போன்ற நுணுக்கமும் திணுக்கமும் திளைப்புற்றுக் கிடக்கின்றன!

நிலையிற் பெரிதாகும் நீள்நினைவு (4), வழுக்கலிலா உள்ளத்து ஒழுக்கம் உயரொழுக்கம் (15), செய்தொழில் இன்றிச் சிறப்பில்லை (22), இன்மையே புன்மைக்கு இடங்கொடுக்கும் (23), வெள்ளத்துப் பின்பார் விளைவு (24), ஆளுமை என்ப நல் ஆண்மை (32), மறமென்பது ஒன்றின் மனவூக்கம் (33), பொருட் குறையாவும் புலக்குறைவே (54), ஊனின்றி இல்லை உயிர் (61), நன்மை நினைக்குணர்வே நன்றி (67), மனவுயர்ச்சி தாழவரல் மானம் (74), என்றவாறு இந்நூலுள் வரும் இனிய எண்மையும் ஒண்மையும் திணிந்த கூற்றுகள், பொன்மணி மொழிகளாகக் கருதிக் கையாளப் பயனுடையனவாகும்!

## கோளறவு கூடாது மன்!

கடமைநிலை சுட்டும் பாட்டில், ஓரினைனுக்கு மடமை என்பது அவனின் முயற்சியற்ற தன்மையே என்றும், ஒரு வினைத் தகுதியையும் அவன் பெறுதிருக்கின்றமையைச் சுட்டும் சிறந்த பொருட்சொல் என்றும் கூறி அறிவு மூட்டுவது ஓர் அழகிய பாங்கு! இத்துணைக்கும் மேலாக, ஓரினைன் தாம் சரியென்று தெளிந்து மேற்கொண்ட எந்தக் கொள்கையினின்றும் வழுவவே கூடாது என்று ஆசிரியர் வலியுறுத்து

கின்றார்! அவ்விடத்தில், 'மன்' என்னும் உறுதிப்பாட்டுக்குரிய அசைச்சொல்லை ஈற்றசையாக நிறுத்தியிருப்பது, தாம் எடுத்துக் கொண்ட கருத்தை நிறக்க நிறைவுறுத்த ஆசிரியர் கையாளும் உத்திச் சிறப்பைக் காட்டி நிற்கின்றது! சொல்ல வந்த அருமைக் கருத்துக்கு அணிகூட்டி விடுகின்றது, மன்!

## மறம் அறம் திறம்! ( மறமறந்திறம்! )

மறநிலை என்னும் தலைப்பின்மீது ஒன்றின்கீழ் கொள்ளும் மனவூக்கமே மறம் என்றும், அம்மறத்தொடு அறிவுடைமை இயைந்திருக்கும் நிலையே அறம் என்றும், அவ்விரண்டொடும் உடல்முயற்சி மேற்கொண்டு உழைத்தலே திறம் என்றும், தம்முடைய பாட்டில் புத்தொளி காட்டுகின்றார்! புற வாழ்க்கைக்குரிய இம்மூன்றனுலும் விளைவதுவே 'புகழ்' என ஒருவன் புகழ்பெறுதற்குரிய மூலத் தேவைகளை மிக அருமை யாகச் சுட்டி விடுகின்றார்!

## நாணமும் அடக்கமும்

எட்டாம் இயலதான, பெண்மையியல், — நாணமும் அடக்கமும் அழகும் நலமும் அளவும் மேன்மேலும் அமைவுற வேட்கும் அறிவுடைய பெண்டிர்க்கென இருபான் வரிகளி லியன்ற மந்திர மொழியடங்கிய அரிய சாரப்பகுதி! திருவள்ளுவப் பெருந்தகையின் கூற்றில் பயிலப் பெறும் "திருநுதல் நல்லவர் நாணு" (குறள் : 1011) என்பது, எந்தப் பாங்கில் அமைந்திருந்தால் ஆண்மையைத் தன்வயப் படுத்தும் என்ற இலக்கண விளக்கத்தை, இப்பெண்மையியல் பகுதியின் நாணநிலையின்கீழ், இந்நூலாசிரியர்.

"முகங் கவிழ்க்கும் நாண்பெண்மை ஆண்மை முகக்கும்
அகங் குமிழ்க்கும் இன்வாரி ஆழ்த்தும்" — என்ற

இருவரிகட்குள்ளேயே வளைத்து, அகங்குமிழ இன்வாரியுள் நம்மை ஆழ்த்தி விடுகின்றார்! இந் நாண நிலை விளக்கம் பெண்மைச் சிறப்பையே நிமிரச் செய்துவிடுகின்றது!

நாணுகை என்பது நாண், நாணம், நாணு என்றவாறு மூ வடிவங்களிலும் கழகக்காலத்திலேயே பொதுப்படவழக்குப் பெற்றிருந்தது. இங்கு, பெண்மையியலில் முதற்பாடலின் தலைப்பை **நாணநிலை**யென்றும், அறவியலில் மூன்றும் பாடலின் தலைப்பை **நாண்நிலை** யென்றும் ஆசிரியர் அமைத்திருப்பது சிலர் அவற்றின் போன்மை நிலையால் சிறிது மருட்சியேற்படலாம்! இம்மருட்சி, கழகக் காலத்திலேயே அமைந்து குழப்புறுத்தியமையைத் தெளிவுபடுத்தவே திருவள்ளுவப் பெருந்தகை "கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல் நல்லவர் நாணுப் பிற" (குறள் :1011) எனத் தம் குறட்கண் விளக்க நேர்ந்தார். அவ்விளக்கம் செய்துவிட்ட போதிலும் தொடரும் குழறுபடி நிலை மாற்றும் முயற்சியை, பெண்மைக்குரிய வெட்கப் பண்பினைக் குறித்தற்கு "நாணம்" என்ற அம்மீற்றுச் சொல்லையும், தீயன செய்ய அஞ்சி வெட்கியுட்கும் பண்பைக் குறித்தற்கு "நாண்" என்ற சொல்லையும், மிக விளங்கப் பிரித்தமைத்துக் கையாளுவதன்வழி தெளிவு செய்து விடுகிறார் இந்நூலாசிரியர்!

## அடங்கல் இழுக்கன்றே!

"பெண் தான் அடக்கமாக இருக்கும் ஒழுக்க நிலையொன்றே ஆடவனை ஆள்வதற்குரிய சிறந்த வழியாகும். அரிமா போலும் எழுச்சியை யுடைய ஆண்மையுள்ளத்தில் கனன்றெழும் தீயையே பெண்ணின் இந்த அடக்கம் தணித்து விட வல்லது" என, இவ்வடக்கநிலைப் பகுதியுள் ஆசிரிய நெஞ்சம் அடக்கமாக அடுக்கிச் செல்கின்றது! "அடங்கல் இழுக்கன்றே ஆணுள் ஒழுக்கு!" என்னும் முதல்வரி, நுணுகிய திணுகிய சிறப்பு வரியாகும்!

இவ் வியலில், உடல்நல நிலையின்கீழ் விளங்கி யொளிரும் "உடலம் உலகியலுக்கு ஒண் கருவி" (பா :39:1) என்னும் ஒளிவரி, "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" எனத் தொடங்கும் திருமந்திரப்பாடலினும் பொருட் சாரமும், திண்ணிய கருத்துத் தெளிவும், சொற்சுருக்கமும் நுண்மையும் உடையதாகும்.

அவ் வொண் கருவி கேடுறத் தொடங்குமானல், "அன்பு கெடும் இன்பு கெடும் ஆன்ற அறிவு கெடும்" என்ற அடுக்கு அழகினும் அழகியதாகும் !

## அன்புநிலை

தாய் தன் சேயின்மேல் காட்டும் அன்பு, தந்தை தன் சேயின்மேல் காட்டும் அன்பு, சேய் தன் பெற்றோரின்மேல் காட்டும் அன்பு, இளந்தையராகிய காதலரிருவர் தம்முள் கொண்ட காதலன்பு என்ற இவை முறையே ஒன்றுக்கொன்று அடுத்தடுத்த படிநிலைப்பட்டனவே என்று வரையறை செய் யும் நூலாசிரியர்,—சான்றோர்களின் அன்பு நிலைப்பட்டது என்றாலுங்கூட, இம்மேற் சுட்டிய நானிலைகட்கும் அடுத்த ஐந் தாம் படிக் கட்டிலேயே அது வைக்கத் தக்கது என்றவாறு தானுணர்ந்த உண்மையை உறத்துச் சொல்லும் துணிந்த உயர் நெஞ்சமுத்தம்,—பிற பாப்புலவோர் இதுகாறும் பெறாத தாகும்! மற்றும், அன்பென்று உலகியலில் சொல்லிக் கொள்ளப்பெறும் பிற அனைத்தும், அன்னன்னவரும் அவ்வவ் வழிப் பயன் பெறுகின்ற அளவுக்குத்தக, ஒருவர்க்கொருவரால் பரிமாறிக் கொள்ளும் "வாயன்பே" என்று குத்திச் சொல்லும் அழகு, உலகியலில் அலையிற் றுரும்பாகி வாழ்க்கை நடத்தி யுழலும் நமக்கு, நல்லதொரு தெளிவை நல்க வல்லதாகும் ! இந்நூலாசிரியர் அத்தகைய அன்புக்கு "வாயன்பு" என்ற புதுச் சொல்லாக்கத்தையே புணர்த்தியுள்ளார் !

## சுற்றநிலை

"தாமுறுவது உற்றம், தமையுறுவது ஒண்சுற்றம்" (பா : 42 : 1) என வரும் வரியில், உற்றம் சுற்றம் என்பதற் குரிய மொழியியல் வழிப்பட்ட உண்மை அருமையாக விளக்கம் பெற்றுள்ளது !

## இனநிலை

இனவுறவு நிலையானது, மொழி, நிலம், நாகரிகம், பண்பாடு, நாடு, ஆட்சி என்றவாறான ஆறு வழிகளால் உருவாவதாகும். ஒன்றில் குலைவு ஏற்படுமானால் வேறோர் உணர்வு தலையெடுத்து அதைக் கட்டுறுத்திக் காத்து நிற்கும். அச்சமயத்தில் மொழியுணர்வு ஓங்கித் தலையெடுக்குமானால், அவ்வினவுறவு நிலையைக் குலைக்கும் பிறவி, நிறம் போலும் பெருத்த வேறுபாடுகளும்கூட நில்லாது நீங்கிவிடும் என்ற தம் கருத்தில், நூலாசிரியர் தம் வாழ்க்கைக் குறிக்கோள்களில் தலையாயதான மொழியுணர்வுத் தொண்டில் தாம் தோய்ந் திருக்கின்ற வலிந்த பின்னணியின் உண்மை நிலையை ஒப்பு நோக்கச் செய்கின்றார்!

மொழிநிலைத் தலைப்பின்கீழ், தாமெழுதிய "மொழியோடு இனநலமும் மொய்க்கு நலம் காணும், வழியாய்ந்து உணர்ந்து வரம்பமைக்க; — தப்பின் அழிவே நிரல் நிறையாம்" (பா : 14 : 1-3) என்று பொதுப்பட ஓரினத்துக்கு விடுத்த எச்சரிக்கை வேண்டுகோளின் உட்புறத்துள்ளும் ஆசிரியர் ஒன்றி யிருப்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். படைப்பாளி, தம்மைத் தாமறியாமலே தம் படைப்பினுள் புகுந்திருக்கின்றமைக்கு, இம்மேற்குறிப்புகள் எடுத்துக்காட்டு களாகும். அறவிலக்கிய வெளிப்பாடாகையால், அதற்குரிய தமிழ்ப் பண்பாட்டோடு உலக மாந்தர் அனைவர்க்கும் பொது வாகவே, அனைத்தும் புறம் போந்துள்ளன!

## ஒட்பம் திட்பம் நுட்பம்

செயலொன்று செப்பமுடையதாக அமைய வேண்டு மானால், செய்பவன் அதனை மனவொப்புதலோடும், அதற் குரிய அறிவோடும், அதைச் செய்வதற்குரிய ஊக்க வுணர் வோடும் அதிலேயே தம்மைத் தோய்த்துக் கொண்டவாறான ஈடுபாட்டோடும், உண்மை பற்றிய மனவுணர்வோடும் கூடி, செய்ய வேண்டும். அன்றேல், செய்பொருளோ அல்லது

செயலோ செப்பமுடையது எனச் சொல்ல வியலாது! அச் செயல் ஒட்பம், திட்பம் ஆகியன பெற்றிலங்க வேண்டு மாயின், அதைச் செய்வோன் அச்செயலுக்குரிய ஆராய்ந்த அறிவுத் திறப்பாடு உடையவனாக இருத்தல் வேண்டும். ஆனால், அச்செய்கையின் நுட்பம் விளங்குவது, அத்திறப் பாட்டோடேயே ஓர் இயற்கையமைவு அவனுக்குக் கட்டாய மாக இருந்தால்தான் இயைவதாகும்! இந்த இயற்கை யமைவு நெடிய மரபு இழை ஊடேயே அவன் பிறப்போடேயே பற்றி வருவதாகும். இவ்வுண்மை நிலைகளை செயனிலை வெண்பாவில் செறிய விளக்குகின்றார்!

## பொருட்குறை யாவும் புலக் குறைவே!

ஒரு செயலின் முடிவுக்கு நுழைவாயிலே முயற்சி என்றும், அத்துறையில் தொடர்ந்து பெறும் பயிற்சியே ஒருவனுக்கு அத்துறை வெற்றிக்குப் படிநிலை என்றும், முயற்சிநிலையில் வலியுறுத்துவார்! ஒரு பொருள் குறையாக இருக்கின்றது அதாவது செப்பமாக அமையா திருக்கின்றது என்பது பொருளின் குறையன்று, அது அதைச் செய்தவனின் அறிவுக் குறையே என்பார். அவ்வரிய கருத்தை "பொருட் குறை யாவும் புலக்குறைவே" என நுண்மையாக யாப்பார்!

ஒரு வினையில் இழப்பு ஏற்படுவது, அவ்வினை பற்றிய அறிவுக் குறைவாலும், முயற்சியின் வழியதாகிய உழைப்பு இன்மையாலுமே என்ற தெளிவை ஒரு சிறிய தொடரியத்தில், "இழப்பு அறியாமை உழைப்பின்மை" என்று முச்சொல் லமைவிலேயே பெய்து காட்டி எளிதாக விளக்குகிறார், நூலாசிரியர்!

"பண்பு உளத்துச் செல்வம்" (பா: 60:1) பிற வளமும் செல்வமுமாகிய நிலைகள் எளிய முயற்சியாலே எளியர்க்கும் மலியக்கூடியன என்று ஒப்பிட்டுக்காட்டி பண்பின் சிறப்பை உயர்த்துவார்!

பொய்யாமை வாய்மை (பா: 66), நன்மை நினைக் குணர்வே நன்றி (67) மனவுயர்ச்சி தாழவரல் மானம் (74) என்றவாறு வரும் பல கருத்துரைத் தொடரிய சுருக்கச் சொல்லியங்களில், சொல்லுக்கு உரிய பொருளை எளிமையாக விளக்கும் அழகு மிகமிகச் சுவைத்தற்பாலதாகும்!

தொண்டு நிலை கூற வந்த விடத்து, தொண்டுக்குரிய உள்ளச்சீர்மை வாய்ந்தவர்களே அதில் வயப்பட்டு உழைக்க வாருங்கள் என்னும் கருத்துப்பட வந்த "உள்ளச் சீர் வாய்ந் தவர் துணிவின் வயப்படுக!" என்னும் நூலாசிரியர்தம் வெளிப்பாட்டில் அதை வேண்டுகோள் போன்றும் அமைத் திருப்பது தகுதியுடையார் பிறரும் அதில் ஈடுபட்டுப் பொது நலம் விளைவிக்க வருதல் வேண்டும் என்ற தம் பேருணர்வின் அவாவினைக் காட்டி நிற்கின்றது!

## பொருணிலை

அணுவின் உட்கருவில் அமைந்து குமுறும் ஆற்றலின் அளவையே $E = MC^2$ என்னும் சூழ்த்திர மந்திரமாக "அறிவியலரசர்" ஐன்சுடீன் கண்டு காட்டி விண்டு விளக்கினார்! இதன்வழி, 1945 சூலை 16-ஆம் நாளிலிருந்து பொருளை ஆற்றலாகவும் ஆற்றலைப் பொருளாகவும் மாற்றி விடும் ஆற்றல் வலிவை மாந்த இனம் பெற்றுவிட்டது.

ஓர் அயிரி எடை (1 Gram) நிலக்கரியை முழு ஆற்ற லாக மாற்றினால், அந்த ஆற்றலின் அளவு 25 கோடி அயிர மின்னலகு (25,000000 Kilo Walt) உடையதாயிருக்கும்! அவ்வளவு ஆற்றல் செறிவை அடக்கியே அது பொருளாக இருக்கிறது!

அணுவில் முப்பது வகை அடிப்படைத் துகள்கள் இருப் பது அறிவியலாய்வில் இதுவரை கண்டுபிடிக்கப் பெற்றுள் ளது. அவற்றுள் மிக முகமையானது மூன்று. இலக்குரான் (Electron), புரத்துரான் (Proton), நட்டுரான் (Neutron)

என்பவை அவை. அணுவை உருவாக்கிய மூலத்துகள்கள் என்று கூட இவற்றைச் சொல்லிவிடலாம். அணுவின் உட் கருவில் (Nucleus) நேர்மின்னூட்டமுள்ள (positive charge) புரத்துரான்களும், மின்னூட்ட மற்ற நட்டுரான்களும் அமைந் துள்ளன! அவ் வுட்கருவைச் சுற்றியே எதிர் மின்னூட்ட முள்ள (Negative charge) இலக்குரான்கள் என்னும் துகள்கள் கதிரவ வெங்கருவைக் கோள்கள் சுற்றுவன போலும் நீள் வட்டப் பாதையில் சுற்றி வருகின்றன.

பொருளும் ஆற்றலும் ஒன்றே! பொருளைச் சிதைக்கின் ஆற்றலாகும். ஆற்றல் திரளின் பொருளாகும்! ஆற்றலும் பொருளும் ஒரே மூலத்தின் உடன் காலமான (தற்காலிக மான) நேர்வின் வெவ்வேறு நிலைகளே! நேர்மின்னூட்டம் எதிர்மின்னூட்டம், மின்னூட்டமில்லாத துணைமை ஆகியன சான்ற ஆற்றல் நிலைகள் பொருண் மூலங்களாக நின்று, உட் கருவிலும் அதைச் சூழ்ந்துமாகப் பல்வேறு எண்ணிக்கை அளவிலே கலந்தவாறு வடிவங் கொண்டிருக்கும் நிலையே பொருளாக உள்ளது. அவ்வாற்றல் தொக்க பொருண்மூலங் களின் தொகுப்பு, பல படிநிலைகளில் கலந்துள்ள இயைபு களையே நாம் பொருள்களாகக் காண்கின்றோம். அஃதாவது ஆற்றலும் மூலங்களும் அளவில் அறக்கலந்து மாற்றுருவங் கொண்டிருக்கும் தோற்றநிலையையே “பொருள்” என்கின் றோம். இந்த அரிய அறிவியல் கூற்றையே தம் வெண்ணூற்பா வரிகளில்,

> “ஆற்றலொடு மூலம் அளவின் அறக்கலந்து
> மாற்றுருவங் கொள்ளல் பொருளென்ப”
>
> —(பா : 77 : 1–2).

என, ஆற்றலும் மூலமும் கலந்ததுபோலக் கருத்தாற்றலும் பொருட்சொற்களும் அறக் கலந்த யாப்பு கொண்டு சுட்டு கின்றார்!

## ஆற்றல் நிலை

“ அற்றாலும் ஆற்றல் அழியாது மற்றொன்றாய்
உற்றாலும் ஆங்கதுவாய் உள்ளுயிர்க்கும் ”—என்றவாறு

ஆற்றல்நிலைத் தலைப்பின்கீழ் ஊற்றோடும் அருவரிகள், ஆற்றல் மாறாக் கோட்பாட்டை (Law of Conservation of Energy) உள்ளடக்கித் துலங்குவனவாகும்.

ஐம்புலவழியே அறியும் அறிவுநிலை, மேன்மேலும் பாகு படுத்தியும் கூறுபடுத்தியும் மீள மீள அறிவெடையில் தம்மை நிறுத்துப் பார்த்துத் தெளிவடைந்த பின் பகுத்தறிவாகி வளர்வதும், அதனின் பரந்த தெளிவின் வழி மேன்மேலும் படர்ந்து மெய்யறிவாகி விளர்தலும், ஆக, ஒன்று செறிவுறச் செறிவுற அடுத்தபடியான மேன்மை அறிவு புலர்ந்து செழிக் கும் என்ற உண்மையை ஓர்பியலில், மெய்யறிவு நிலையின்கீழ்,

“ அறிவு பகுத்தறிவு மெய்யறிவென் றுன்றே
செறிவின் இயங்கிச் சிறக்கும் ” —(பா : 91 : 1-2)

என, ஒளிபெறச் சுட்டுவார். ஓர்பியலை அடுத்த இறைமை யியலிலும், இறையுருவத்தைக் கற்பித்துக் கொண்டு உரு வாக்கிக் கொள்ளும் அறியாமை நிலைகளைச் சாடியவாறு தாமுணர்ந்தவற்றை நுண்ணிய பாக்களில் திறம்படக் கூறு காட்டியுள்ளார் !

### உவமை

(1-2) ஒன்றுகடல் புன்மணலின் ஞாலம் (பா : 1-1)—(இவ் வுலகம் புடவியை நோக்க, கடலின் மிகச் சிறிய மணல் ஒன்றைப் போன்றதாகும்).

(1-2) அடவியென மீன் செறிவாம் (பா : 1-2) —(அண்டங் களில் உள்ள விண்மீன்கள், இவ்வுலகத்தேயுள்ள காடுகள் போலும் செறிந்தனவாக உள்ளன ; அவ் வளவு நிரம்பிய எண்ணிக்கையுடையன என்றவாறு)

(1-3) *மலையிற் கடுகுபோல் மண்ணுலகில் மாந்தன் (பா : 4-1)* — *(மலையின் மேல் வைத்த ஒரு கடுகு எவ்வளவு சிறியதாயிருக்குமோ அந்த அளவுக்குரிய வேறுபாடு, இந்த மண்ணுலகத்திற்கும் மாந்தனுக்கும் இடைப்பட்ட உருவ அளவு வேறுபாடாகும்.)*

(1-4) *வாழ்க்கை அலையில் துரும்பாகும் (பா : 4-3).*

(1-5) *அங்காப்பும் துய்ப்பும் இலையில் பனித்துளியாம் (பா : 4-4).*

(1-6) *முத்தவிழ்ப்பாய் ......... வீழும் வியப்பே வியப்பு (பா : 82-2).*

*[குழந்தையின் பிறப்புக்கு, சிப்பியினின்று அவிழ்ந்து விழும் முத்து உவமைப்படுத்தப் பெற்றுள்ளது !].*

(1-7) *கவண்முகத்து ஊடுருவும் கல் (பா : 85 : 4).*

(1-8) *புனமொன்றில் புள்ளார்தல் ஒக்கும் (பா : 92 : 2-3).*

என்றவாறு அழகிய நுட்பமான உவமைகளின் செறிவு இந் நூலுள் எங்கும் விரவிக் கிடக்கின்றது.

## சொல்லாட்சிப் புதுமைகளும் அவற்றின் பொருள்களும்

இலக்கியப் புலமையும், சொல் நுட்பம் அறிதிறனும், சொல்லாக்க ஆற்றலும் கைவரப் பெற்றவராக நூலாசிரியர் இயல்பின் இலங்குவதால், தம் கருத்தை வலியுறுத்தற் கேற்றவாறுன புதிய கோணங்களில் சொல்லைப் பெய்தலையும், புணர்த்தியமைத்துக் கொள்ளுதலையும் இந்நூற்கண் சிறக்க மேற்கொண்டுள்ளார். அவை பலுக்கற்கு எளியவும் பொருண்மையில் வலியவுமாக செப்பமுறப் படிந்துள்ளன.

(1) தன்னுண்மை (6–1) — (சர்வாதிகாரம் என்னும் வடமொழியும் தமிழும் கலந்து ஆகி நிற்கின்ற இரு பிறப்பிச் சொல்லுக்கான (Hybrid) நேரிய ஆக்கச் சொல்) — நூலாசிரியர் பிறிதோர் இடத்தில் இச் சொல்லுக்குரிய பொருளை விளக்குமாறு போல் "தன்னென் அதிகாரம்" (பா : 10-2) என்றே குறிப்பது இங்குக் கருதத் தக்கது !

(2) தாயொளி (5 : 3) — கதிரவ ஒளி. தம்மைச் சுற்றும் அனைத்துக் கோள்களுக்கும் தாயாகி விளங்கும் ஒளியாகிய ஞாயிறு...)

(3) முழவு (21 : 2) — இடி முழக்கம்.

(4) இழவு (21 : 2) — துயரம்.

[இறப்பால் நேர்ந்த இழப்பைக் குறித்த மக்கள் வழக்குச் சொல் இது. "இழ" என்னும் வினையடியாகப் பிறந்தது. பின், இறப்பு நேர்ந்தபின் பிறருறும் துயரத்திற்கும் பொதுச் சொல்லாகியது. இந்நூலுள் பயிலிடத்தில், மக்கட்கு ஏற்படும் துயரம் எனப் புதுப் பொதுச் சொல்லாகி இயைந்துள்ளது. இழப்புக்கு என்னும் பொருட் சொல்லாக "இழவு" என்னும் சொல்லையே இங்குக் கொண்டு, "இழவுக்கு இடமில்லை உலகில்" எனப் பொருளாறு பொருந்தினும் சிறப்பே ! ]

(5) ஐ கருவி (22 : 4) — ஐம்பொறிகள் (மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐங்கருவிகள்).

(6) தாளறவு (31 : 3) — முயற்சியை அறுத்து விட்டு அமைந்திருக்கும் மடிநிலை. இது வள்ளுவர் பயின்ற முயற்றின்மை (குறள் : 616) என்னும் சொல்லுக்கு இணையாயது.

(7) கோளறவு (31 : 4) — கொள்கை நெகிழ்ப்பு, கொள்கையை அறுத்துக் கொள்ளுகை.

(8) தாளுமை (32 : 2) — முயற்சி.

(9) வாள் (32 : 2) — அறிவு.

[" வாள் ஒளியாகும் ", என்னும் தொல்காப்பியம் (உரியியல் : 69). ஒள்ளிய அறிவு " வாள் " என்ற ஒளி குறித்த சொல்லாலேயே சுட்டப் பெற்றுள்ளது).

(10) தடங்கல் (37 : 2) — பாதைக்குக் குறுக்கீடாக நிற்கும் கல், தடை.

[தடம் + கல் = தடத்தை அடைத்துக் கொண்டுள்ள கல். இரண்டாம் வேற்றுமை உருபும் வினையும், உடன்தொக்க தொகை. வழியடைக்குங் கல் (குறள் : 38) எனும் திருக்குறள் தொடர்ச் சொற்கு மணிச் சுருக்கமான எளிய மக்கள் வழக்குச் சொல்.]

(11) வெள்ளியோர் (54 : 4) — வெண்மை யுடையோர் ; அறிவில் வறியோர்.

(12) காணிப்பு (57 : 1) — கண்காணிப்பு (Supervision)

(13) கோணிப்பு (57 : 2) — நொடிவு, நொடிப்பு.

(14) குழப்பு (58 : 2) — குழப்பம்.

(15) கள்ளன்மை (63 : 2) — கள்ளத் தன்மை ; ' கள்ளத் தாற் கள்வேம் ' எனும் தன்மை.

(16) கள் (80 : 4) — மெய்ப்பொருள் இன்ப வொழுக்காகிய கள்.

(17) வேண்மதநீர் (81 : 2) — வேட்கை மதர்ந்த குருதியாகிய செந்நீர்.

(18) கனப்ப (81 : 2) — கனலுறச் செய்ய.

## முடிவுரை

இந்நூல் அளவில் மிகச் சிறியது! நூலளவில் திருக்குறளே அளவிற் சிறியதாக இருக்கையில், அக்குறள் நூலை ஒப்பிடுகையில், அதில் ஆறில் ஒரு பகுதியதான தோராய அளவையே இந்நூல் பெற்றுள்ளது. அவ்வளவு அளவிற் சிறியது இது!

ஆனால், தமிழிலக்கிய உலகில் நிலைத்த சிறப்பொடு நின்று நீடுய்ந்து மாந்த இனத்தை உய்க்கும்படியான அரிய திணுக்கக் கூறுகளை இயல்பாகவே இது பெற்றுள்ளது. உலகியலைப் பரவலாகச் சுட்டியெழுந்த இத்தகைய ஓர் அறவிலக்கியம் போன்று பிற வேறெம் மொழிகளிலும் வேறொன்று தோன்றியுள்ளதாகத் தெரியவில்லை! தமிழுக்கும் இதன் உள்ளடக்க அமைப்புமுறை புதியது! உலக மாந்தர் அனைவர்க்கும் பொதுப் பயனாகப் படைத்த இனிய நூல் இது!

பொது நல வுணர்வும், தொண்டுள்ளமும், அருள் நெஞ்சமும், மக்கட் பற்றும், அறத் தெளிவும், ஒழுங்கு வேண்டும் வேட்கையும், உலகியல் தெளிவும், பரந்த நூலறிவும் வாய்ந்த ஒரு நன்னெஞ்சமே, இத்தகைய நூல்களை யாக்க வல்லது! அக்கூறுகளின் திரட்சியாய் விளங்கும் பாவலரேறு அவர்கள் இவ்வரிய நூலை சிறக்க யாத்துள்ளார்கள்!

இம் முன் பக்கங்களில் குறித்த உரைப் பகுதிகள், இந்நூலைப்பற்றி முழுக்க முற்றத் தெளிந்த அத்துணைக் கூறுகளையும், நிறக்கக் கூறிவிட்ட திறத்தினவும் நிறைவினவும் அல்ல! சில இடங்களைத் தொட்டுக் காட்டியுள்ளன. சில இடங்களில் உள்ளிறங்கிப் பார்க்க முயன்றுள்ளன! அவ்வளவே!

நூலுள் நுழைவார் திறத்திற்கேற்ப, தம் ஒளியைத் துலக்கிக் காட்ட வல்லதாகிய அமைப்பில், சொல்லும் பொருளும் ஒள்ளிய யாப்பில் கட்டப் பெற்றுள்ளன! உள்ளத்தில் அணிந்து கொள்ளவும், அறிவறையின் ஒளி விள்ளவும், இதோ உங்கள் முன்னால் உலக வாயில் திறந்துள்ளது! உள் புகுந்து உவப்பூறுங்கள்!

அன்பு,

**ப. அருளி**

# பதிப்புரை

இது 'கோவை - பெரியார் மாவட்டப் பெருஞ்சித்திரனார் நூல் வெளியீட்டுக் குழு'வின் இரண்டாம் வெளியீடு.

எவ்வளவு சிறந்த, உயர்ந்த கொள்கையாயினும் உலகியலுக்குப் பொருந்த விளக்கப் பெறவில்லையாயின் அக் கொள்கையால் மக்களுக்கும் பயனில்லை; அவ்வறிஞனும் மதிக்கப் பெறான். இதனையே திருவள்ளுவரும்,

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்". என்பார்.

அறிஞர்களிற் சிலர் புறத் துறையில் (தொழில், தொண்டு) வெற்றி பெற்றாலும் அகத்துறையில் (குடும்பவியல்) தவறி விடுகின்றனர். குடும்பவியலில் நிறைவடைந்த பலர் வெளி வாழ்க்கையில் தோல்வியடைகின்றனர். ஏன்? இந்நிலைகள் உலகியலறிவின் தேவையை உணர்த்துகின்றன. இவ்வுலகிய லுண்மையை உணராமையால்தான் இன்றைய நம் நாட்டின் பல அரசியல், அறிவியல், தொழிலியல் அறிஞர்களின் அறிவும் வீணே மக்கட்குப் பயன்படாமல் வறிதே கழிவதைக் கண்டும் கேட்டும் வருந்தி வருகிறோம்.

பழையன கழிந்தும் புதியன புகுந்திருக்கும் இன்றைய உலகியலை நூறு வெண்பாக்களால் இருபது இயல்களில் அவ் வைந்து பாடல்களாகப் பகுத்தும் பன்னூறு கருத்துகளை நமக்கு அளித்துள்ளார் **பாவலரேறு** அவர்கள். வாழ்வாங்கு வாழ்ந்து மக்களுக்குப் பயன்படவிழையும் அறிஞர்கள் கையில் தவறாது இடம் பெற வேண்டிய இந்நூலை வெளியிடுவதில் பெரிதும் மகிழ்கிறோம். இதில் கூறப் பெற்றுள்ள கருத்துகள் செப்பமும் நுட்பமும் ஒட்பமும் வாய்ந்தன. அறிஞர்கள் இந் நூலை ஓதி அக் கருத்தொளியில் உண்மை யுணர்ந்து தமிழர்க்கு உரைத்து அவர்களை உயர்த்துவதுடன் தாமும் உயர்வார் களாக.

இவண்

**கோவை – பெரியார் மாவட்டப்**

**பெருஞ்சித்திரனார் நூல் வெளியீட்டுக் குழு.**

# நூல் வெளியீட்டுக் குழு உறுப்பினர்கள் பட்டியல்

திரு. புலவர். கா. இளமுருகன், க.மு., நா.ஊ.ப., ப.இ., புளியம்பட்டி; திரு. தென்மொழி ந. முத்துக்குமரன், அறி.இ., ப.இ., பல்லடம்; திருவாட்டி. புலவர். சேதுகா முத்துக் குமரன், பல்லடம்.

திருவாளர்கள் :

மா. ஆறுமுகம், பல்லடம்; திருமேனி, பல்லடம்; கி. இளஞ் சேரன் முதுபாண்டியன், மின்பாறை; பாவலர். கதிர்நிலவன் (இரவிச்சந்திரன்), அவிநாசி; புலவர். சோ. அறுமுகவேலன் க.மு.(சண்முகவேலன்) அவிநாசி; க. அங்கமுத்து, அவிநாசி; சி. நடவரசன், க.இ., கல்.இ., அவிநாசி; த. க. ஆறுமுகம், அவிநாசி; அ. இராமசாமி, அவிநாசி; அ. துரையரசு, கைகாட்டிப்புதூர்; வெ. மாரிமுத்து, கைகாட்டிப்புதூர்; புலவர். செ கணபதிசாமி, இல. இ., கல். இ., தெக்கலூர். பெ. சுப்பையன், தெக்கலூர்; பழங்கரை. தமிழவேள்; புலவர். இரா. அவிநாசிலிங்கம், இல.இ., அவிநாசிலிங்கம் பாளையம்; புலவர். க. காந்தி, க.மு., கல்.இ., சேவூர்; சி. நாவளவன், காரைக்குட்டைப்புதூர்; வை. பாலசுப்பிர மணியன், அனுப்பர்பாளையம்; ஈ. சு. கந்தசாமி, ஈட்டிவீரம் பாளையம்; தென்மொழி. க. தமிழப்பன், திருப்பூர் ; புலவர். செந்தலை கௌதமன், க. மு., கல்.இ., கோவை; இரணியன், க.மு., கல்.இ., கோவை; ப. நடராசன், கோவை; கல்லை. அருட்செல்வன், கல்லுப்பட்டி; வேலரங்கன், தாராபுரம்; புலவர். துரைசாமி, க.மு., கல்.இ., காராப்பாடி; மா. அரசு, கோபிபாளையம்; பெ. பழனிச்சாமி, வஞ்சி பாளையம்; மா. காசியப்பன், ஆண்டவர் பொறியியல் பணி யகம், அவிநாசி; ப. கி. முத்துச்சாமி, சாவக்கட்டுப்பாளையம்; புலவர். அ. க. இராமசாமி, க.இ., கருவலூர்; புலவர். சபேசன், க.மு., பெரியாயிபாளையம்; தென்மொழி. ப. துரை யரசன், க.இ., அவிநாசி; ந. அ. பழனிச்சாமி, அறி. இ., க.மு., ப.இ.,

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | ... | iii |
| ஆராய்ச்சி முன்னுரை | — | viii |
| பதிப்புரை | ... | xLiii |
| உள்ளடக்கம் | ... | xLv |

## நூல்

1. உலகியல்

| | | |
|---|---|---|
| 1. இயல்நிலை | ... | 1 |
| 2. உறழ்ச்சி நிலை | ... | 2 |
| 3. அறிவு மருட்சி நிலை | ... | 2 |
| 4. துய்ப்பு நிலை | ... | 3 |
| 5. அழிவு நிலை | ... | 3 |

2. நாட்டியல்

| | | |
|---|---|---|
| 1. ஆட்சி நிலை | ... | 4 |
| 2. சட்ட நிலை | ... | 4 |
| 3. அரணிலை | ... | 5 |
| 4. ஒறுப்புநிலை | ... | 5 |
| 5. அரசு நிலை | ... | 6 |

3. மாந்தவியல்

| | | |
|---|---|---|
| 1. இயனிலை | ... | 7 |
| 2. குடிமை நிலை | ... | 8 |
| 3. கலப்பு நிலை | ... | 8 |
| 4. மொழிநிலை | — | 9 |
| 5. ஒழுக்க நிலை | ... | 9 |

4. பொதுமையியல்

| | | |
|---|---|---|
| 1. உழைப்பு நிலை | ... | 10 |
| 2. பொருள் நிலை | ... | 10 |
| 3. உறையுள் நிலை | ... | 11 |
| 4. உடைமை நிலை | ... | 11 |
| 5. நுகர்ச்சி நிலை | ... | 12 |

பக்கம்

5. வாழ்வியல்

1. உழவு நிலை . 13
2. தொழில் நிலை ... 14
3. புன்மை நிலை ... 14
4. துன்ப நிலை ... 15
5. இன்ப நிலை ... 15

6. குடும்பவியல்

1. காதல் நிலை ... 16
2. கணவன் நிலை ... 16
3. மனைவி நிலை ... 17
4. மக்கள் நிலை . 17
5. ஈடுபாட்டு நிலை ... 18

7. ஆண்மையியல்

1. கடமை நிலை ... 19
2. ஆளுமை நிலை ... 19
3. மற நிலை ... 20
4. புறத்தல் நிலை ... 20
5. தறுகண் நிலை 21

8. பெண்மையியல்

1. நாண நிலை ... 22
2. அடக்க நிலை ... 23
3. அழகு நிலை ... 23
4. உடல் நல நிலை ... 24
5. அளவு நிலை ... 24

9. உறவியல்

1. அன்பு நிலை ... 25
2. சுற்ற நிலை ... 26
3. நட்பு நிலை ... 26
4. இன நிலை ... 27
5. துணை நிலை ... 27

| | | பக்கம் |
|---|---|---|
| **10. அயவியல்** | | |
| 1. நொதுமல் நிலை | ... | 28 |
| 2. வெறுக்கை நிலை | ... | 29 |
| 3. முரணிலை | ... | 29 |
| 4. காழ்ப்பு நிலை | | 30 |
| 5. பகை நிலை | ... | 30 |
| **11. வினையியல்** | | |
| 1. சொன்னிலை | ... | 31 |
| 2. செயனிலை | . | 31 |
| 3. முயற்சி நிலை | ... | 32 |
| 4. ஊக்க நிலை | ... | 32 |
| 5. ஊதிய நிலை | ... | 33 |
| **12. செல்வ இயல்** | | |
| 1. ஈட்டல் நிலை | ... | 34 |
| 2. காத்தல் நிலை | ... | 35 |
| 3. இழத்தல் நிலை | ... | 35 |
| 4. கல்வி நிலை | ... | 36 |
| 5. பண்பு நிலை | | 36 |
| **13. ஒப்புரவியல்** | | |
| 1. ஊண் நிலை | ... | 37 |
| 2. நடுவு நிலைமை | ... | 37 |
| 3. ஈகை நிலை | ... | 38 |
| 4. துன்பின்ப நிலை | ... | 38 |
| 5. உடைமை நிலை | ... | 39 |
| **14. அறிவியல்** | | |
| 1. வாய்மை | ... | 40 |
| 2. நன்றி நிலை | ... | 40 |
| 3. நாண் நிலை | | 41 |
| 4. முறை செயனிலை | ... | 41 |
| 5. பொறை நிலை | ... | 42 |
| **15. புகழியல்** | | |
| 1. அறிவு நிலை | ... | 43 |
| 2. அருள் நிலை | ... | 44 |
| 3. அமைவு நிலை | ... | 44 |
| 4. மான நிலை | ... | 45 |
| 5. தொண்டு நிலை | ... | 45 |

16. இறப்பியல்
1. நிலையாமை நிலை ... 46
2. பொருணிலை ... 47
3. ஆற்றல் நிலை ... 47
4. மாறுதல் நிலை ... 48
5. ஒடுங்கல் நிலை ... 48

17. பிறப்பியல்
1. உடல் நுகர்ச்சி நிலை ... 49
2. கரு நிலை ... 50
3. உரு நிலை ... 50
4. திரு நிலை ... 51
5. புதுமை நிலை ... 51

18. உயிரியல்
1. உந்து நிலை ... 52
2. உகப்பு நிலை ... 53
3. துய்ப்பு நிலை ... 53
4. உய்வு நிலை ... 54
5. நிலைப்பு நிலை ... 54

19. ஓர்பியல்
1. மெய்யறிவு நிலை ... 55
2. மன நிலை ... 56
3. இயக்க நிலை ... 56
4. கூர்தல் நிலை ... 57
5. உறவுறழ்ச்சி நிலை ... 57

20. இறைமையியல்
1. ஒருமை நிலை ... 59
2. இருமை நிலை ... 60
3. உண்டிலை நிலை ... 60
4. தெளிவு நிலை ... 61
5. ஒப்பு நிலை ... 62

# உலகியல் நூறு

## 1

## உலகம்

### 1. இயல் நிலை

புடவிபல ஒன்றுகடல் புன்மணலிஞ் ஞாலம்
அடவியென மீன்செறிவாம் அண்டம்பல் கோடி
இடவரைகள் எண்டிசைகள் இவ்வுலக வாக்கம்
கடவிடைகள் நேர்ச்சிக் கணிப்பு. 1

பொழிப்பு : புடவிகள் [ பிரபஞ்சம் (Universe) ] பல வாகும். அவற்றுள் ஒன்றினது, கடற்கரையின் புல்லிய மணலைப் போன்ற இவ்வுலகம், அடர்ந்த காடுபோலும் செறிந்த விண்மீன்களை யொட்டிய அண்டங்கள் பல கோடியாகும். இவற்றுள் இடமும், அளவுகளும், எட்டுத் திசைகளும் இவ்வுலகத்திற்கென உருவாக்கிக் கொண்ட ஆக்கங்களாம். வினுக்களும் அவற்றுக்கான விடைகளும் இங்குள்ள நிகழ்ச்சிகளின் அடிப்படையில் எழுந்த கணிப்புக் கூறுகளாம்.

## 2. உறழ்ச்சி நிலை

பல்லாயிரங் கோடி கோள்கள் பரிதிமீன்
எல்லாம் உறழ்ந்திங் கியைதலால்—கல்லாத
கற்றே மெனலொருகாற் கல்லே மெனலொருகா
லுற்றே மெனலொருகா லோர்ந்து. 2

பொழிப்பு : பலவாயிரங் கோடியளவிற் கோள்களும், அவற்றை இயக்கும் கதிரவன்களும், அவைபோலும் மீன்களும், தனித்தும் சேர்ந்தும் மாறுபட்டும் இவ்வுலக வுருண்டைக் கண் இயைபு கொண்டிருப்பதால், இங்குள்ள உண்மைகளை முற்றுங் கல்லாத நிலையில், 'கண்டறிந்து கற்றேம்' என ஒரு பொழுதும் 'கல்லேம்' என ஒரு பொழுதும், 'ஆராய்தல் நிலையில் உள்ளேம்' என ஒரு பொழுதும், மாறுபட எண்ணிச் சொல்லும் நிலையேற்படும்.

## 3. அறிவு மருட்சி நிலை

உருண்டை உலகம் உருள்விழிக்குத் தட்டாய்
இருண்டொளிரும் தன்மைத் தியல்பின்—மருண்டறிவால்
உண்மை இலவென்பார் இன்மை உளவென்பார்
அண்மை தொலைவென்பார் ஆம்! 3

பொழிப்பு : உருள்வதும் உருண்டையானதும் ஆகிய இவ்வுலகம், அதுபோல உருள்வதும் உருண்டையானதும் ஆகிய விழிகளுக்குக் காட்சியளவில் தட்டை போல் இருள்வதும் ஒளிர்வதும் ஆகிய தன்மையில் இயங்குவதால், அதில் உள்ள உயிர்களின் மருட்சி பொருந்திய அறிவினாலே உண்மை நிலைகளை இல்லை என்றும், இன்மை நிலைகளை உண்டு என்றும்; அண்மையைச் சேய்மை யென்றும், சேய்மையை அண்மை யென்றும், மயக்கமுறச் சொல்லுவர் ஆம்.

## 4. துய்ப்பு நிலை

மலையிற் கடுகுபோல் மண்ணுலகில் மாந்தன் !
நிலையிற் பெரிதாகும் நீள்நினைவு ! வாழ்க்கை
அலையிற் றுரும்பாகும் ! அங்காப்பும் துய்ப்பும்
இலையிற் பனித்துளியாம் இங்கு !

பொழிப்பு : *மலையளவு போலும் உள்ள இம் மண்ணுலகில் மாந்தன் நிலை கடுகளவு போல்வதாம். அவன்றன் உணர்வு நிலைகள் யாவற்றினும் பெரிது அவனின் நீண்டுயர்ந்த நினைவேயாகும். அவனின் வாழ்க்கையோ திரைத்து எழுந்து நுரைத்து வீழ்கின்ற அலையின்கண் சிக்கிய துரும்பு போலும் அலைவு சான்றதாம். மற்று, அவனின் ஆசை அவாவுதல்களும், அவற்றால் முடிந்த நுகர்ச்சி நிலைகளும், இலையின்மேல் உள்ள பனித்துளி போல் கவர்ச்சியும் சிறு நேர நிலைப்பும் கொண்டதாகும், இவ்விடத்து !*

## 5. அழிவு நிலை

நின்றுநிலை நில்லாது நீண்ட நெடுவானில்
தொன்றுமுதல் ஈர்சுற்றுத் தொல்லுலகம்—அன்றொருகால்
தாயொளியும் ஒல்கத் தணந்து நிலைமாறிப்
போயழியும் கங்குற் பொடிந்து.

பொழிப்பு : *காட்சியளவான் நின்றது போலும் இருந்து கருத்தளவான் ஒரு நிலையில் நில்லாமல், விழிக்கும் மொழிக்கும் எட்டாத நெடிய வானத்தில், தோன்றியது முதல் இரண்டு வகைச் சுற்று இயக்கங்களைக் கொண்டதாகிய இத்தொன்மையான உலகம், என்றோ ஒரு காலத்தில் தனக்கு ஒளி நல்கும் தாயாகிய கதிரவனின், ஒளி குறைந்து குளிரடைதலால், தன் நிலையில் திரிபுற்று, அதனின்று விலகியோடி இருட் பகுதிக்குள் புகுந்து பொடிந்து அழிவதாகும்.*

# ௨

# நாட்டியல்

## 1. ஆட்சி நிலை

தனிமை குடியரசு தன்னாண்மை ஆயம்
எனினுங் குடிகட் கிடரியல்பாம்; வாய்மை
இனிமை நடுநோக் கெதிரறிதல் கல்வி
முனிமற லற்ற முகத்து!

**பொழிப்பு:** தனியரசு, குடியரசு, வல்லதிகார ஆட்சி, அறிவர் குழு ஆளுகை எனும் நால்வகை ஆட்சியெனினும், குடிமக்கட்குத் துன்பம் இயல்பேயாகும்; அவ்வாட்சிக்கு வாய்மை, இன்னுரை, நடுநோக்கு, வருவதறியும் முன்னுணர்வு, கல்விச் சிறப்பு, தீமை, பகை இரண்டையும் முனிந்து காக்கும் தறுகண்மை ஆகியவை அற்றுப் போகின்றவிடத்து!

## 2. சட்ட நிலை

அமைத்த வதிகாரத் தாள்வோர்க்குச் சார்பாய்
சமைத்துக் கொளும்நெறியே சட்டம்—இமைத்துரைப்பின்
ஆனைக் குழுசெய் யறநெறியாங் கோரேழைப்
பூனைக் குதவுமெனல் பொய். 7

**பொழிப்பு:** எவ்வழியேனும் தம் வலிமையான் அமைத்துக் கொண்ட அதிகாரத்தினாலே ஆளவந்தவர்கள் என்றென்றும் தங்களுக்குச் சார்ந்து வருவதாக முன்னறிவுடன் உருவாக்கிக் கொள்ளும் வழியமைப்பே சட்டம் எனப்படுவதாகும். விளங்கச் சொல்வதாயின், யானைகளே சேர்ந்த குழுவொன்று செய்யும் அறமெனப் பெயர்பெறும் சட்ட நெறிமுறைகள், ஆங்கு ஓர் ஏழைப் பூனைக்கு உதவிவிடும் என்பது பொருளற்ற உரையேயாகும்.

## 3. அரணிலை

சேய்க்குத்தாய் கன்னிதந்தை சேயிழைக்கு வன்கணவன்
வாய்க்குமகன் ஈன்ருேர்க்கு வன்காவல்—தேய்க்கரிய
ஐந்தின் வளத்தெனினும் ஆற்றலிழந் தார்க்கென்னும்
ஐந்தினுங் கொள்ளா வரண். 8

பொழிப்பு : *குழந்தைக்கு அதன் தாயும், கன்னிப்பெண்ணுக்கு அவள் தந்தையும், சிவந்த நகையணிந்த மணங்கொண்ட ஒருத்திக்கு வலிமை மிக்க அவள் கணவனும், பெற்ருேர்க்கு வாய்த்த மகனும் வன்மை மிக்க காவலாம். அழித்தற்கு அரிய ஐந்திணை வளஞ்சான்ற ஒரு நாட்டினை ஆள்பவர் எனினும், தன்னுற்றலை இழந்தவர்க்கு, ஐம்பூத வழியினும் கொள்ளமுடியாத அரணிருந்தும், என்ன பயனைத் தரும் ?*

## 4. ஒறுப்பு நிலை

நயன்செய்து நாட்டந்திசை திருப்பி நன்ருற்றின்
வயன்செய்து நோக்கம் வரைக—பயனின்றே
சொல்கழிபூண் கோட்டமுயிர் சோரத் தடிதலென்னும்
வெல்வழியொன் றில்லா வினை. 9

பொழிப்பு : *மக்களுக்கு நயன்மை (நீதி) செய்து, அதன் வழி அவர்களுடைய புன்மை நாட்டங்களை வேறு திசைக்கண் திருப்பி நல்வழியில் அவற்றை வயப்படுத்தி, ஆள்வோர் தம் நோக்கத்தை நிறைவேற்றுக. மற்று, எச்சரித்துக் கடிந்து சொல்லுதல், கழி கொண்டு அடித்தல், பூட்டிட்ட சிறையில் தள்ளுதல், உயிர்போகும்படி தண்டித்தல் என்னும், குற்றம் செய்வோரை அதனின்று மீட்டு வெல்கின்ற வழியொன்று இல்லாத வினைகளால் பயனில்லையாகும்.*

## 5. அரசு நிலை

மன்னன் மனநலத்தால் மக்கள் மதிநலத்தால்
தன்னென் அதிகாரத் தார்நலத்தால்—நன்னெறியோர்
சார்ந்த குழுநலத்தால் சாருமே நல்லரசு
வார்ந்த குடிநலமும் வாய்த்து. 10

பொழிப்பு : *மன்னராட்சி யெனின் அவன் மனநலத்தைப் பொறுத்தும், மக்களாட்சி யெனின் அவர்கள் மதிநலத்தைப் பொறுத்தும், வல்லதிகார ஆட்சி யெனின் அதன்பால் உள்ள படை நலத்தைப் பொறுத்தும், நல்லறிஞர் சார்ந்த குழுவினது ஆட்சி யெனின் அக்குழுவினரைப் பொறுத்தும் அமைவதாகும் நல்லதோர் அரசு; அவ்வரசுக்குத் தக்க குடிமை நலன்களும் வாய்ப்பாக விருக்குமானல் !*

# 3
# மாந்தவியல்

## 1. இயல்நிலை

**ஒன்றுநிலம் நீரிரண்டு மூன்றுயிர்கள் நான்கியக்கம்**
**நின்றியலும் ஐந்துணர்வோ டாறுமனம் ஏழுநிலை**
**என்றுமுயிர்க் கெட்டுவினை தொண்டுகுறை பத்துநலம்**
**குன்றல் மிகுதல் குறை. 11**

பொழிப்பு: மாந்த வாழ்வியலுக்கு இடனாகிய இவ்வுலகத்து *நிலப்பகுதி ஒரு பங்கும் நீர்ப்பகுதி இரண்டு பங்குமாகவும்; அவ்வுலகத்து வாழும் உயிர்கள், நீரிலும் நிலத்திலும் வானிலும் இயங்கும் முத்திறத்தினவாகவும்; அவற்றுக்கு இயக்கம் உடலும் உயிரும் அறிவும் மனமும் ஆகிய நான்காகவும்; அவ்வியக்கத்திற்கு நிலனாகிய பொறிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐந்தாகவும், அவை பற்றுகின்ற மனவுணர்வு காமம், வெகுளி, மயக்கம், செருக்கு, பற்று, பொறாமை என ஆறாகவும்; அவை இயங்கும் உயிர்களின் பருமவெளிப்பாட்டு நிலை மனம், பொருள், காலம், இடம், நீளம், அகலம், உயரம் என ஏழாகவும்; அவற்றின் வினை உயிர்த்தல், உண்ணல், உடுத்தல், காணல், கேட்டல், சொல்லல், செய்தல், உறங்கல் என எட்டாகவும்; அவ்வுயிர்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்தனவாகிய மாந்தவுயிர்களுக்கு ஏற்படும் குறைகள் உறுப்பு, அறிவு, கல்வி, பொருள் நலம், துணை, மகவு, மனம், உறவு என ஒன்பதாகவும்; அவற்றுக்கு உண்டாகிய நலன்கள் பிறவி, உடல், அறிவு, மனம், கல்வி, செல்வம், துணை, மக்கள், தொழில், புகழ் ஆகிய பத்து ஆகவும் இயல்கின்றன. இவற்றுள் குறைவது மிகுதலும், மிகுவது குறைதலும் குறை எனப்படுமாம்.

---

* பத்தில் மூன்று பங்கு நிலமும் ஏழு பங்கு நீரும் ஆகியதைத் தோராயமாக ஒன்றும் இரண்டும் எனக் குறிக்கப்பெற்றது.

## 2. குடிமை நிலை

அடிமை மடிமை அறியாமை குற்றம்
மிடிமை களவுகொலை மீளல்—குடிமை
உரிமை உழைப்பூக்கம் ஒண்கல்வி தண்ட
விரிமை உழவுசெயல் வேந்து. 13

**பொழிப்பு :** *மொழியானும் இனத்தானும், அரசானும் வந்து சேரும் அடிமை நிலையும், அதனை அகற்ற விரும்பாத மடிமை நிலையும், அதற்கடிப்படையாய அறியாமை நிலையும், அவற்றால் விளைந்து வளர்கின்ற குற்றங்களும், அவை ஊன்றிய துன்ப நிலையும், அது தூண்டிய களவு நிலையும், அது வாயா விடத்து நேரும் கொலை நிலையும் என இவற்றினின்று மீண்டு கொள்வதே ஓரினத்தின் குடிமைச் சிறப்பாகும். அச்சிறப்புப் பொருந்திய குடிகளுக்கு அவை வேண்டிய உரிமை வழங்குதலும், அவ்வுரிமை பெற்றவிடத்து அது தொடர்ந்து உழைப்பை உருவாக்குதலும், அதனை ஊக்கப்படுத்தலும், அவை தேயாத ஒள்ளிய கல்வியைத் தருதலும், அவற்றுப் பிழை சேருமிடத்துத் தண்டமிட்டுத் தடுத்தலும், உயிர் நிலைப்புக்கு அடிப்படையாகிய உழவுத் தொழிலை விரிவு செய்தலும், அக்குடிமைக்காகிய அரசின் சிறப்பு நிலையாகும்.*

## 5. கலப்பு நிலை

மனக்கலப்பு வாய்க்கிலிரு மாண்குடிக்குள் நேரும்
இனக்கலப்பு குற்றமன்றா மென்றும்—புனற்கலப்பு
நீரான் பெருமையுறும் நீர்மையறுங் காற்றத்தம்
பேரான் இயங்கலே பீடு. 13

**பொழிப்பு :** *மன வொருமைப்பாட்டோடு கலத்தற்கு ஏது வாய்க்குமானால் மாண்புமிக்க இரண்டு குடிகள் தமக்குள் சேர்ந்து கொள்கின்ற இனக் கலப்பு குற்றமாகாது; என்றைக்கும் நீரின் தன்மையால் இருவகைப் புனற் கலப்பு பெருமை பெற்று விளங்கும்; தம் நீர்மைத்திறம் அற்றுப் போகுமானால், தம்தம் இயல்பான பெயர்ச் சிறப்பால் அவை தனித்து இயங்குவதே பெருமை தருவதாகும்.*

## 4. மொழி நிலை

மொழியோ டினநிலமும் மொய்க்குநலங் காணும்
வழியாய்ந் துணர்ந்து வரம்பமைக்க, தப்பின்
அழிவே நிரல்நிறையாம் ; அன்றறிவார் மொய்ம்பிற்
பழியாம் ; பிறன்கடைக்கும் பாழ்.

**பொழிப்பு :** மொழியும், இனமும், நிலமும் மேன்மேலும் சிறந்து நலங்காணுகின்ற வழியினை ஆய்ந்து ஓரினம் வரம்பு அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுமானால் அவற்றிற்கு முறையாக அழிவு வந்து சேர்வதாகும். அக்கால் அவ்வினத்து முன்னைய அறிவுடையாரின் புகழுக்கும் பழி வந்துறும்; அவ்வினத்தின் கால்வழியினரும் பாழாய்ப் போவர்.

## 5. ஒழுக்க நிலை

ஒழுக்கம் பசியின்மை ஊன்றுதொழில் கல்வி
இழுக்கம் இவையிறப்ப எய்தும்—வழுக்கலிலா
உள்ளத் தொழுக்கம் உயரொழுக்கம் ஆங்கதுவும்
கள்ளத் திடறுமக் கால்! 14

**பொழிப்பு :** ஒழுக்கம் என்னும் உயர்ந்த கடைப்பிடி பசியின்மையாலும், ஊன்றிய தொழில் வாய்ப்பினாலும், உள்ளம் விளக்கும் கல்வியினாலும் வந்தெய்துவதாம்! இம் மூன்றும் இல்லாதபொழுது இழுக்கம் வந்து குடிகளைச் சூழும். இந் நிலைக்குப் புறம்பாய் என்றும் வழுக்கலிலாத உள்ளத்தே அமைந்த ஒழுக்கமே உயர்வான ஒழுக்கம்; ஆனாலும், அதுவும் அம் முந்நிலைப் பிறழ்ச்சிக்கண் ஒருவரும் அறியாதவாறு கள்ளத் தன்மையான் இடறுதலும் செய்யும்!

# 4

# பொதுமையியல்

## 1. உழைப்பு நிலை

**உழைப்பொருபால் ஓங்கும் உவப்பொருபால் ஒன்னார்
இழைப்பொருபால் ஏய்தல் இகழாம்—தழைப்பெய்தல்
வேண்டின் உடலுழைப்பு வேளாண்மை துய்ப்பிவற்றை
யாண்டும் பொதுவமைத்தல் யாப்பு ! ...... 16**

பொழிப்பு : *உடலுழைப்பு வாழ்க்கையின் வருத்தம் ஒரு சிலர் இடத்தும், படிப்படியாக உயர்ந்து விளங்குகின்ற வாழ்க்கை நலன்களின் மகிழ்ச்சி ஒரு சிலரிடத்தும், நாட்டமைப்புக்குப் பொருந்தாத மனக்கிளர்ச்சி யுடையவர்களின் இடையூருன செயல்கள் ஒரு சிலரிடத்துமாக அமைந்திருத்தல் நாட்டுக்கு இழுக்காம். நாடு செழிப்புற வேண்டின் மக்களுக் குப் பொதுவாய உடலுழைப்பு, உயிர் வாழ்க்கைக்கு இன்றி யமையாத உழவு, இவ்வுலக நலன்களின் நுகர்ச்சி ஆகிய மூன்றினையும் எங்கும் எல்லார்க்கும் பொதுமை என்று அமைத்து விடுதலே பொருந்துவதாகும்.*

## 2. பொருள் நிலை

**உடல்கருவி மூளையெனும் ஒண்பொருள்கள் மூன்றில்
அடலுழைப்பா லாக்குவதே ஆக்கம்—கடல்நிலத்தின்
உள்ளும் புறமும் ஒளிர்வதெல்லாம் மாந்தரினம்
அள்ளும் படிநிலைக்கே ஆம் ! 17**

பொழிப்பு : *உடல், உருவாக்கப்பெற்ற கருவி, இவற் றுக்கு அடி நிலையாகிய அறிவு ஆகிய ஒளிப்பொருள்கள் மூன்றினும் வருந்தியுழைத்து உருவாக்குவதே செல்வம். கடல், நிலம் இரண்டின் உள்ளேயும் மலர்ச்சியுற்றுக் கிடக் கும் செல்வமெல்லாம், மக்களினம் வாரி நுகர்ச்சி கொள்ளும் படி நிலைகளுக்கே என்க.*

## 3. உறையுள் நிலை

திருக்குவைசூழ் மாடத் தெருக்கடையின் ஓரத்
துருக்குலையும் வாழ்க்கை ஒழிக—பெருக்கமுறும்
வான்தோய் வளமனைக்குள் வன்குடில் வாழ் ஏழையர்தம்
கான்தோயுங் காலம் வரும். 18

பொழிப்பு : அழகிய செல்வ வளம் சூழ்ந்திருக்கின்ற மாட மாளிகைகள் நிறைந்த தெருக்களில் ஒதுங்கிய ஓரங்களில் வாழ்ந்து உருக்குலைகின்ற துயர் வாழ்க்கை இவ்வுலகை விட்டு ஒழிவதாகுக! நாளும் பெருகித் தோன்றும் வானளாவிய வளமிக்க மனைகளுக்குள் மிகச் சிறிய குடிசைகளில் வாழ்கின்ற ஏழை மக்கள்தம் கால்கள் தோய்கின்ற காலம் வந்தே தீரும்.

## 4. உடைமை நிலை

உடல்நிலத்துக் குள்ளம் உயிர்க்குடைமை என்றும்
கடல்நிலத்துச் செல்வம் கணக்காம் - கெடல்நலத்து
நல்லறிவும் நல்லுழைப்பும் அல்லால் நலமில்லை
புல்லறிவால் துன்பம் பொது. 19

பொழிப்பு : நிலத்துக்கு உடலும், உயிர்க்கு உள்ளமும் உடைமைப் பொருளாகும். ஆகையால் நிலத்தின் அளவாகவும் உயிர்கள் அளவாகவுமே அவற்றின் உடைமைப் பொருள்களாகிய உடலெடுத்த பிறவிகளும், உள்ள உணர்வுகளும் தோன்றும். எனவே, கடலுள்ளும் நிலத்துள்ளும் உள்ள செல்வங்கள் ஆங்காங்குத் தோன்றுகின்ற உயிர்களுக்குக் கணக்கியல் முறைப்படி போதுமானவையாகவே இருக்கும். கேட்டிலும் நலத்திலும் நல்லறிவும் நல்லுழைப்பும் இணைந்து நின்றாலல்லது உயிர்களுக்கு நலம் உண்டாவதில்லை. புன்மை மிக்க அறிவால் விளைகின்ற துன்பம் எல்லாருக்குமே பொதுவாகி விடுகின்றது.

## 5. நுகர்ச்சி நிலை

இடங்குடிபால் எண்காலம் எந்நிலைக்கும் துய்ப்பு
முடங்கரவு வஞ்சமின்றி மூளல் - கடனாகும்
ஆன்ற பொதுமைக் கரசமைப்பார் தங்கால்கள்
ஊன்ற உழைக்கும் உலகு. 20

**பொழிப்பு :** இடம், குடி, பால், எண், காலம் ஆகிய வேறுபாடுகளின்றி எந்த நிலைக்கும், செல்வ நுகர்ச்சியானது முடக்கலும், கரத்தலும், வஞ்சித்தலும் இன்றி ஆகி வருதலே கடப்பாடாகும். இயற்கையாகவே அமைந்து கிடக்கும் அப் பொதுமைக் கொள்கைக் கேற்ப அரசியலை அமைக்க விரும்புவார்தம் அடிகள் ஊன்றுதற்கே இவ்வுலகம் உழைப்பதாகின்றது.

# 5

# வாழ்வியல்

## 1. உழவு நிலை

உழவுக் கிரண்டு தொழில்குடிக்கொவ் வொன்றால்
இழவுக் கிடமுலகில் இல்லை - முழவுக்குக்
காத்துழுது மின்னுக்குக் காழிட்டால் தாமுண்டு
மீத்தயலுக் கீயலாம் மேல்! 21

பொழிப்பு : உலகில் நீரும் சேறும், தூருந் துவரும், பாழும் பரலும், காடும் கரம்பும் தவிர்த்த நன்னிலத்தில் உழவுக்கென இரண்டு கூறும் தொழிலுக்கும் குடியிருப்புக்குமென ஒவ்வொரு கூறும் கொண்டு பயன் கண்டால், உலகில் துயரத்திற்கு இடமில்லையாகும். இடிமிகுந்த காலத்திற்குக் காத்திருந்து உழுது, மின்னும் பருவத்தில் விதைத்தால், உழைப்பவர் தாமும் வயிறார உண்டு, மற்றவர்க்கும் ஈயும்படி விளைவு மிகுந்து நிற்கும்.

குறிப்பு : இடிமிகுந்த காலம் - பின் முதுவேனில்.
மின்னும் பருவம் - பின் முதுவேனிலுக்கும் முன் காருக்கும் உள்ள இடைப் பருவம்.

கோடையில் உழவேண்டும் என்றது உழுத மண் நன்றாகக் காய்தல் வேண்டும் எனற்காம் அறிக.

பால் : பாறைக் கல் நிறைந்த நிலம்.

## 2. தொழில் நிலை

செய்தொழில் இன்றிச் சிறப்பில்லை ; தேவையோ
டெய்தொழில் காலம் இடனறிந்து - மெய்வளையக்
கைகருவி போற்றிக் கணக்கறிந்தால் பூதங்கள்
ஐகருவிக் குள்ளாடும் ஆம் ! 22

பொழில் : தாமே செய்கின்ற தொழில் முறைகளின்றிப் பிற வேறு தொழில் முறைகளால் சிறப்பு எய்துவதில்லை ; நம் தேவைகளையும் நாம் எய்த வேண்டிய தொழிலையும், அது செய்யப் பெற வேண்டிய காலத்தையும் இடத்தையும் அறிந்து உடல் உழைப்பு மிகும்படி, கைகளாலும், கருவிகளாலும் ஊக்கமொடு செய்கின்ற தொழிலின் விளைவுகளையும் இழப்புகளையும் கணக்கிட்டுச் செய்தால், ஐம்பூத வியக்கங்களும் நம் ஐம்பொறிகளின் ஆற்றலுக்குள் அடங்கும் என்க.

## 3. புன்மை நிலை

இன்மையே புன்மைக் கிடங்கொடுக்கும் மற்றதனை
வன்மையாற் கல்லல் வழுவிளைக்கும் - மென்மையாய்
உள்ளம் உழுதுணர்வு வித்தி உழைப்பறுத்தால்
கள்ளம் கிளைமடிக்கும் காண் ! 23

பொழிப்பு : தம் துய்ப்புக்கு இல்லாத வெறுமை நிலைகளே ஒருவற்கு மனத்தானும் அறிவானும் வினையானும் தாழ்ந்த புல்லிய நிலைகளுக்கு இடந்தருவன ஆகும். அவ்வாறு நேர்வனவற்றை வேறு வலிய புற முயற்சிகளால் தடுத்து நிறுத்துதலோ அகற்றுதலோ குற்றங்களை விளைவித்து விடும். அந்நிலைகளுக்குட்பட்ட ஒருவரை அன்பும் பரிவும் ஆகிய மென்மை உணர்வுகளால் நெருங்கி, ஈடுபாட்டான் அவரின் உள்ளத்தைப் பதப்படுத்தி, அறிவை ஊன்றி, அவரின் வெறுமை நிலைக்கான அடிமை, மிடிமை, அறியாமை முதலியவற்றைப் போக்கி, அவருடற்கு உழைப்புத் தந்து, பயன் பெறுமாறு செய்வது, கள்ளம் முதலிய குற்றங்களைத் தன் கிளைகளுடன் மடியச் செய்து விடுமென்றும் கண்டுகொள்க.

## 4. துன்ப நிலை

துன்பமெனும் ஆசிரியன் துன்னப் பயிற்றுவிக்கும்
இன்பமெனுங் கல்விக் கிறப்பில்லை - இன்புணர்வால்
உள்ளம் விளங்கும் உலகம் விளங்காதே
வெள்ளத்துப் பின்பார் விளைவு ! 24

பொழிப்பு : துன்பம் என்னும் இயற்கை ஆசிரியன் நெருக்கமுறப் பயிற்றுவிக்கின்ற இன்பம் என்னும் கல்வி யறிவுக்கு என்றும் அழிதல் இல்லை. ஒருவர்க்கு வந்து சேரும் இன்ப நிலைகளால் உள்ளத்தின் அன்பு, இரக்கம் முதலிய உணர்வு வெளிப்பாட்டு நிலைகள் மட்டுமே விளங்குவதாகும். மக்களமைப்பு வாழ்வியல் முறைகள், உலகப் பெருக்கம் முதலிய உலக நிலைகள் விளங்காமற் போகும். ஆற்று நீர் வெள்ளமாய்ப் பெருக்கெடுத்து இடர் தந்து, பின் வடிந்த நிலை யில், அண்டை அயலில் படிந்து விளங்கும் வண்டலால் உறுகின்ற பயிர் விளைச்சலைக் கண்டு உண்மை தெளிக.

## 5. இன்ப நிலை

அழலின்ப மென்னின் நிழற்றுன்பம் ஆங்கே
நிழலின்ப மென்னின் வெயிலாம் - குழலின்பங்
கற்செவிடு தானறிமோ காட்சி குருடறிமோ
தற்சார்பாம் இன்பம் தனக்கு ! 25

பொழிப்பு : வெப்பம் இன்பத்தைத் தரும். சில நிலை களில் நிழல் துன்பத்தையே தரும். அவ்வாறே நிழலால் இன்புறும் சில நிலைகளில் வெயிலால் துன்பமே விளையும். நுகர்வு நிலை சிறிது தானுமன்றிக் கல்போலும் பிறவிச் செவிடு, குழலின் இன்பத்தை அறிய முடியுமோ? அது போலும் பிறவிக் குருடுதான் காட்சி இன்பத்தை உணர வியலுமோ? இயலாவாம்! எனவே, இவ்வுலக வுயிர் ஒவ்வொன்றுக்கும், இன்பம் என்பது அஃததற்குப் பொருந்திய தற்சார்பு நிலை களே என்று அறிக.

# 6
# குடும்பவியல்

## 1. காதல் நிலை

**நல்லிளமைக் காலத்தே நெஞ்ச நறுநிலத்தின்**
**வில்லெழுந்த அம்புவிழி வித்தூன்றச் - சொல்லெருவில்**
**வேட்கை மழையா வியனம்பல் வெய்கதிராப்**
**பூட்கையுறுங் காதலெனும் போது !** **26**

**பொழிப்பு :** நல்ல இளமைக் காலத்தில், நெஞ்சம் என்னும் நன்னிலத்தின்கண், வில்லினின்று விசைந்தெழுந்த அம்புபோலும் கூரிய விழி எண்ணம் என்னும் விதையை ஊன்றவும் பின் நெருங்கிய காதலர் தாம் உரையாடும் சொற்களே அதற்கு எருவாகவும், உயிராலும், மனத்தாலும், உடலாலும் அவாவுகின்ற வேட்கையே மழையாகவும், அவர் தம் களவு நிலையைப் புறம் பழிக்கும் ஊராரின் பரந்துபட்ட தூற்றுதலே வெயிலாகவும் நின்று உதவ, அவ்விதை முளைத்து வளர்ந்து அரும்பிக் காதல் என்னும் முகையைத் தோற்றுவிக்க அது தானும் மலர்ந்து வலிமை பெறும்.

வலிமை பெறும் என்றது, மலர்ந்தபின் காய்த்துக் கனியும் என்பதால்.

## 2. கணவன் நிலை

**கொம்பாய் கொழுவாய் குடையாய் குடும்பமெனும்**
**இம்பருல காட்சிக்கோ ரேணியாய்ச் - செம்பாதி**
**கொண்டுங் கொடுத்துங் குடிப்பெருக்கி ஆளுதலே**
**மண்டுங் கணவனது மாண்பு !** **27**

**பொழிப்பு :** மனையும் மக்களும் பற்றிப் படரும் ஒரு கொம்பாகவும், வாழ்வு எனும் நிலத்தில் விளைவு காண வேண்டி உழுகின்ற குடும்பம் எனும் கலப்பைக்குக் கொழு முனையாகவும், தம்மொடு சேர்ந்தாரை மழையெனும், செல்வ மிகுதியினின்றும், வெயிலெனும் வறுமைக் காய்வினின்றும் கட்டிக் காக்கும் குடையாகவும், குடும்பமெனும் இம்மையுலக ஆட்சியின் உயர்வுக்கு ஓர் ஏணியாகவும், குடும்பத்தின் அனைத்து முயற்சிகளிலும் தாம் பாதியாகவும், தம் மனைவியும், மக்களும், பிறரும் பாதியாகவும் நின்று ஏற்று, வருகின்ற இன்பத்தினும் அவர்கட்குப் பகிர்ந்து கொடுத்து, தான் உற்ற குடி பெருகி நீளும்படி ஆண்டு நிற்பதுவே நிறைந்த கணவனுக்குரிய பெருமையாகும்.

## 3. மனைவி நிலை

பிறப்பிற் பொருந்தி பிழையாத அன்பால்
மறப்பின்றி இன்பம் மடுத்துச் - சிறப்புறவே
வாங்கி வகுத்து வழங்கி மகிழ்வித்துத்
தாங்கல் மனையாள் தகை ! 28

பொழிப்பு : *உயிர், உடல், உள்ளம், அறிவு, வினை ஆகிய ஐந்து பிறவி நிலைகளிலும் பொருத்தம் உடையவளாகி மனத்தானும், சொல்லானும், வினையானும் பிழையாத அன்பு கொண்டு, அகப்புற வினையழுத்தங்களால் பிறவாமல் நினைந்து தன் கணவற்கும் குழந்தைகட்கும் அவரவர்க்குரிய வகைகளால் இன்பம் ஊட்டுவித்துச் சிறப்பு நிலைகள் பொருந்தும் படியாகவே எதனையும் வாங்கியும் அதனைக் குடும்ப வுறுப்பினர்க்கேற்ற வகையில் வகுத்துப் பகிர்ந்து வழங்கியும் மகிழ்வு செய்து, இவ்வினைச் சுமைகளால் தளர்வுறாது பொறுமை பெற நிற்றல் மனைவிக்கு உற்ற சிறப்பாகும்.*

## 4. மக்கள் நிலை

கொண்கன் நிறைவித்துக் கோதில் மனைநிலத்துப்
பண்குதலை யாய்விளைந்து பாலருந்தி - மண்கண்
பூத்துப்புலர்ந்து பொலிந்து புலன் பெருகிக்
காய்ந்துக் கனிதல் கடன் ! 29

பொழிப்பு : *கொண்ட கணவனது நிறைந்த வித்தானது, குற்றமற்ற மனைவி என்னும் நிலத்து ஊன்றப்பெற, அது குழவியாய் முளைத்து மழலைப்பண் பாடிக் குழந்தையாய் முகிழ்த்துத் தாய்ப்பால் அருந்தி வளர்ந்து, இந்நிலத்தின் கண் அறிவும் உணர்வும் பூத்து நல்விளைவாக மலர்ந்து, அழகுற்று விளங்கி, கரண கருவிப் புலன்கள் முதிர்வுற, உலக உயிர்களின் மலர்ச்சியின் பொருட்டாய்த் தானும் காய்த்துக் குலுங்கி, அவற்றின் பயனுக்குக் கனிந்து உதவி நிற்றல் மக்கட்கமைந்த கடமையாம் என்க.*

## 5. ஈடுபாட்டு நிலை

அன்பறிவுக் கொத்தவினை ஆன்ற பயன்பகிர்வால்
இன்பநுகர் வெல்லார்க்கு மேற்பவே - துன்பநிலைக்
குள்ளந் துவளாமல் ஓங்குநிலை கண்டறிந்து
கொள்ளல் குடும்பநிலைக் கூறு ! 30

**பொழிப்பு :** *அன்புக்கும், அறிவிக்கும் பொருந்திய வினைகளால் வந்த பயன்களைப் பகிர்ந்து மடுக்கும் இன்ப நுகர்ச்சி குடும்ப உறுப்பினர்களுக்கு எல்லார்க்குமே பொருந்துமாறு துய்த்தலும், மேலிடும் அகப்புறத் துன்பநிலைகளுக்கு உள்ளம் துவளாமல், எல்லாத் தகுதிகளிலும் உயர்ந்து ஓங்குகின்ற நிலைகளைக் கண்டு அறிந்து கைவிடாமல் உறுதியாகப் பற்றிக் கொள்ளுதலும் குடும்ப வளர் நிலைக்குற்ற கூறுகளாகும்.*

# 7
# ஆண்மையியல்

## 1. கடமை நிலை

கடனென்ப காளையர்க்குக் காட்சி! கடனுக்
குடனென்ப நல்லூக்கம்! உற்ற - மடனென்ப
தாளறவு! ஒன்றில் தகவின்மை! எஞ்ஞான்றும்
கோளறவு கூடாது மன்! 31

பொழிப்பு: ஆடவர்க்கு, குறிப்பாக இளைஞர்க்கு, அறிவு பெறுதலே முதற் பெருங் கடமையாகும். அக்கடமைக்கு இயைபாக இருத்தல் நல்லனவற்றின்பால் கொண்ட உந்துணர்வாகும். அவர்களுக்கு வந்து பொருந்தும் அறியாமை எல்லாம் முயற்சியற்று இருத்தலும் ஒரு வினையிலும் தகுதி பெருதிருப்பதும் ஆகும். எந்நிலையிலும் தமக்குச் சரியென்று ஏற்றுக்கொண்ட கொள்கையைக் கைநெகிழ்ச்சிக்குந் தன்மையும் கூடாதாம்; அஃது இரங்கத்தக்கது.

## 2. ஆளுமை நிலை

ஆளுமை என்பநல் ஆண்மை! அதுதவிர்ந்தால்
தாளுமை அன்றே தவிர்ந்தழிக்கும் - வாளமைந்த
வல்லான் எனினும் வகையறிந்து சூழாக்கால்
எல்லாம் இழுக்குத் தரும்! 32

பொழிப்பு: நல்ல ஆளுமை என்று சொல்லப் பெறுதலே ஆண்மையாகும். அது தவிர்க்கப் பெறுமானல் அப்பொழுதே முயற்சி தவிர்ந்துபோய் தன்னை அழித்துவிடும். ஒள்ளிய அறிவு வாய்க்கப்பெற்ற வல்லவன் எனினும், ஒரு வினையின்கண் தான் செலுத்தும் வகையை அறிந்துகொண்டு அதனை மேற்கொள்ளாவிடத்து, தான் மேற்கொண்ட எல்லா வினைகளும் தனக்கு இழுக்கையே தரும் என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

## 5. மற நிலை

மறமென்ப தொன்றின் மனவூக்கம் ; மற்றுங்
கறமென்ப அஃதோ டறிவுடைமை ; ஆன்ற
திறமென்ப மெய்முயற்சி ! தேரினவை மூன்றும்
புறமென்ப செய்யும் புகழ் ! 33

பொழிப்பு : ஒருவர்க்கு ஒன்றின்மேற் கொண்ட மனத்தின் ஊக்கமே மறம் என்று சொல்லப் பெறுவதாகும். மற்று, அந்த ஊக்கம் அறிவுடைமையோடு இயங்குதலையே அறம் என்று சொல்லுவர். இனி அதன்கண் உடல் முயற்சி சார்வதையே தன்னுடைய திறம் என்று சொல்வர். ஆராய்ந்து கூறுவதானல் மன ஊக்கம், அறிவுத்திறன், உடல் முயற்சி ஆகிய இம்மூன்றையும் புற வாழ்க்கைக்கு உரியன என்று கொள்வர் ; இவையே ஒருவர்க்குப் புகழைத் தருவனவாகும்.

## 4. புரத்தல் நிலை

தன்னை மனைமகவைத் தம்போலும் தற்பிறரை
முன்னைக்குப் பின்னை முயன்றுயர்த்தி - மன்னியசீர்
நல்லரசு மன்பதைக்கு நாளும் நலம்புரக்கும்
வல்லாண்மை வாழி வழி ! 34

பொழிப்பு : ஒருவன் தன்னையும், தன் மனைவி மக்களையும் அவர்களைப்போல் தன்னைச்சார்ந்த பிறரையும், முன் உள்ள நிலையைவிடப் பின் உள்ள நிலைக்கு உயர்த்துதல் செய்து, நிலைபெற்று விளங்கும் சிறந்த நன்மை தரும் அரசுக்கும், மக்கள் கூட்டத்திற்கும், நாளும் நலஞ்செய்கின்ற வினைகளைப் போற்றிக் காக்கின்ற வலிந்த ஆண்மை வழிவழியாக வாழ்வதாகுக.

## 5. தறுகண் நிலை

அமைவுக் கமைந்தமையா ஆறல்லார்க் கார்ந்து
சமைவுக் குரன்காட்டும் சால்பும் - இமையாமல்
ஏர்ந்தடக்கும் ஓர்பும் இயல்பின் இழிந்தாரை
ஊர்ந்தடக்கும் வீறும் உரன் !

**பொழிப்பு :** உலகியலுக்குப் பொருந்திய வினைகளுக்குத் தானும் பொருந்தியிருந்து, இயல்பு நிலைக்குப் பொருந்தாத வழியைப் பின்பற்றாத தன்மையர் வழித்தான் அறிவால் கிளர்ந்து நின்று, அத்தகைய இயல்பு நிலைகளை அவர்களிடத்து உருவாக்கும் தன்மையில், தன் உள்ள உரனைக் காட்டுகின்ற தகுதியுடன் அவ்வழியில்தான் அஞ்சுதலில்லாமல் அவர்தம் மிகைநிலைகளைக் கடிந்து திருத்துகின்ற கடைப்பிடியும், அவ்வாறு மாற்றற்கியலாமல் இயல்பாகவே விளைந்து நிற்கும் இழிந்த தன்மையரை மேற்சென்று அடக்குகின்ற வீறுண்மையுமே, சிறந்த வீரம் என்று சொல்லப்பெறும்.

# 8

# பெண்மையியல்

## 1. நாண நிலை

முகங்கவிக்கும் நம் நாண்பெண்மை ஆண்மை முகக்கும் !
அகங்குமிழ்க்கும் இன்வாரி ஆழ்த்தும் - நுகங்கவிழ்த்த
ஏறன்றோ நாணவிழ்ந்த ஏர்த்தடங்கண் மங்கைதன்
சேறன்றோ ஆண்மைச் செருக்கு ! 36

பொழிப்பு : முகத்தைக் கவிழ்க்கச் செய்யும் நாணத்தை யுடைய பெண் தன்மையே ஆண்களைத் தன் வயப்படுத்துவ தாகும். அதுவே உள்ளத்தை மலரச் செய்கின்ற இன்பக் கடலுள் மூழ்குவிக்கும். அத்தகைய நாணம் தவிர்ந்து, நிமிர்ந்து நோக்கும் பெரிய கண்களையுடைய பருவ மகளிர், தன்மேல் வைக்கப்பெறும் நுகத்தடியை அலைத்து வீழ்க்கும் எருமைக் கடாவைப்போல் அடக்குதற்கரியர் ; அத்தகைய வர்களிடத்து, ஆண்களின் பெருமை, அவ்வெருமைக் கடா கிடந்து குழப்புகின்ற சேற்றைப்போல் மிதிபட்டுத் துவைந்து போகும் என்க.

## 2. அடக்க நிலை

அடங்கல் இழுக்கன்றே ஆணாள் ஒழுக்கு !
தடங்கல் பெயர்த்தகற்றும் தண்டு - மடங்கலுளத்
தீத்தணிக்கும் நீர்மை ! தெளிவார்க் கதுவன்றே
காத்தளிக்கும் பெண்மைக் கழல் ! 37

**பொழிப்பு :** *பெண்கள் அடக்கத்துடன் இருப்பது இழுக்கு ஆகாது ; அஃது ஆண்களை ஆள்கின்ற ஓர் ஒழுக்கமாகும். தங்கள் முன்னேற்றப் பாதைக்குக் குறுக்கீடாக நிற்கும் தடைக் கல்லைப் பெயர்த்தெறிகின்ற இரும்புத் தண்டு ஆகும் அது. அவ்வடக்கம், அரிமாவின் எழுச்சி பொருந்திய ஆண்மை யுள்ளத்தின் தீயைத் தணிக்கின்ற சிறந்த ஒரு பண்பாகும். மனவியலை ஆராய்ந்து தெளிந்த பெண்டிர்க்கு அப்பண்புதான் தம் பெண்மைத் தன்மையைக் காத்து உலகுக்குத் தரும் வெற்றிக் கழலாகும்.*

## 3. அழகு நிலை

ஒளிநுதல் விற்புருவம் ஊன்றுவிழி பொன்னார்
நெளியிதழ் வேய்தோள் நெரிமுலைமட் டன்றே
களிதரும் அன்பார் கனிமொழியும் ஆண்மைக்
களிதரும் பெண்மை அழகு ! 38

**பொழிப்பு :** *ஒளி பொருந்திய நெற்றியும், வில்போல் வளைந்த புருவங்களும், கூர்ந்து நோக்குகின்ற விழியும், பொன்னிறம் தோய்ந்து, முறுவல் பூக்கும் இதழ்களும், மூங்கில் போலும் வாளிப்பு நிறைந்த மென்தோளும், நெருங்கிப் புடைத்த முலைகளும் மட்டுமே அல்ல, ஆண்களுக்கு மயக் கத்தை யூட்டுகின்ற மகிழ்ச்சி தரும் அன்பு நிறைந்த கனிவான வாய்ச்சொல்லும், பெண்களுக்குச் சிறந்த அழகாகும்.*

## 4. உடல் நல நிலை

உடலம் உலகியலுக் கொண்கருவி என்றும்
கடனதை முன்னறிவாற் காத்தல் - கெடல்தொடரின்
அன்புகெடும் இன்புகெடும் ஆன்ற அறிவுகெடும்
என்புகெடும் எஞ்சா தெரிக்கு! 39

பொழிப்பு : உடல்தான் உலக வியக்கத்திற்கான சிறந்த கருவி, அதை முன்னறிவோடு நலிவின்றிக் காத்துக் கொள்ளுதலே எல்லார்க்கும் என்றும் தலையாய கடைமயாகும். அது கெடத் தொடங்குமானால், அதன்வழி அன்புணர்வும் இன்ப உணர்வும், நிறைந்து விளங்கிய அறிவுணர்வும் படிப் படியாகக் கெட்டுச் சீரழிவதல்லாமல், உடலின் உருவ நிலைக்கேதுவாகிய எலும்புக் கூட்டையும், இறுதிக்காலத்து எரிகின்ற தீயினுக்கும் எஞ்சுதல் இல்லாமல் கெடுத்துவிடும் என்க.

## 5. அளவு நிலை

எழலியங்கல் உண்ணல் எழிற்புனைதல் பேசல்
கழலாடல் ஈட்டல் கணித்தல் - விழலூடல்
மெய்யுறுதல் ஈனல் மேலோர் மிகை கடிதல்
ஐயாறும் வாழ்க்கைக் களவு. 40

பொழிப்பு : வைகறையில் எழுதலும், மேற்கொள்ளும் வினைக்கண் இயங்குவதும், உண்பதும், தன்னைப் புனைந்து கொள்ளும் அழகு நிலைகளும், பிறருடன் பேசுகின்ற பேச்சும், ஓடியாடி விளையாடுதலும், பொருளீட்டத்தில் செய்கின்ற கணக்கு முறைகளும், நாளிறுதிக்கண் படுக்கையில் சாய்ந்து ஓய்வு கொள்ளுதலும், தன் கணவனோடு ஊடுதலும், உடல் இன்பம் துய்த்தலும், பிள்ளைகளைப் பெறுதலும், தனக்கு மேனிலையில் உற்றவர்கள் ஒரோவழித் தம் நிலையில் மிகைச் செல்வார்களாயின் அவர்களைக் கடிந்து கொள்ளுதலும் ஆகிய பன்னிரண்டு தன்மைகளும் பெண்டிர் தம் வாழ்க்கையில் அளவாக கடைப் பிடிக்கத் தக்கனவாகும்.

# 9

# உறவியல்

## 1. அன்பு நிலை

தாயன்பே அன்பு தகுதந்தை அன்பதன் பின்
சேயன்பே எண்ணச் சிறந்ததுவாம் - காயின்ப
நேயன்பு சான்றோர் நிலையன்பு மற்றெல்லாம்
வாயன்பே துய்ப்பின் வரை. 41

பொழிப்பு : உலகத்து, தாயினது அன்புதான் அன்பு என்று சொல்லுதற்குரிய உயர் தகுதியைப் பெற்றது. அதன் பின்னர் தகுதியான தந்தை ஒருவரது அன்பு சிறப்பானதாம். அதற்கடுத்த நிலையில் வைத்து எண்ணத்தகுந்தது, ஒரு குழந்தை தன் தாயிடத்து வைத்திருக்கின்ற அன்பாகும். அதன்பின், காய்ப் பருவமாகிய இளமைப் பொழுதின் இன்பவுணர்வுகளுக் கிடையில் ஓர் ஆணொடு பெண்ணும், பெண்ணொடு ஆணும் கொள்ளுகின்ற நேயத்திற் கடிப்படையாகிய அன்பு சிறந்தது. இனி, அதற்கடுத்தபடியாக உள்ளது, சால்பு நிறைந்த பெரியோர்களின் நிலையான அன்பாகும். இவை தவிர, பிறரிடத்துத் தோன்றுகின்ற அன்புணர்வு எல்லாம், அவ்வவ் வழித் துய்க்கின்ற வரையில் காட்டப் பெறுகின்ற வெறும் வாய்ச் சொல்லால் அமைந்த அன்பே ஆகும்.

## 2. சுற்ற நிலை

தாமுறுவ துற்றம் தமையுறுவ தொண்சுற்றம்
ஏமம் இவையென்ப - ஏழையர்க்கு ! - காமுறுவ
தென்றும் உகப்புடைமை ஈதல் இணைதலென
ஒன்றும் பழைமை உணர்ந்து ! 42

பொழிப்பு : *தாம் போய் இணைந்து உறவாடற்குரிய வரே உற்றார் எனப்பெறுவர் ; தம்முடன் வந்து இணைந்து உறவாடுவர் வலிந்த சுற்றத்தார் ஆவர். ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு இவ்விரு திறத்தாரும் அரண் போன்றவ ராவர். இவர்கள் விரும்புவது என்றும் ஒருவரின் மகிழ்ச்சியான நிலையையே ! தம்தம் பழைய தொடர்புகளை மீண்டும் நினைத் துத் தம்தம் உடைமைகளை ஒருவர்க்கொருவர் ஈந்து கொள்ளு தலும், அதன்வழி இணைந்து கொள்ளுதலும் எனப் பொருந்திக் கொள்ளும் உறவு நிலைகளாகும் இவை.*

## 3. நட்பு நிலை

நட்பரிது நட்டல் நனிவலிது நட்டாலும்
திட்ப முறலரிது தேர்கவே ! - ஒட்பம்
உயர்வென்க உள்ளம் உறழ்ந்துநடு மாறின்
அயர்வென்க ஆரு முயிர்க்கு ! 43

பொழிப்பு : *நட்பு வாய்ப்பது ஒருவர்க்கு அரியது. அவ்வாறு நட்பு வாய்க்கின் அந்நிலை அவர்க்கு மிகவும் வலிமையைத் தருவது. அவ்வாறு சிறந்த முறையில் ஒருவரோடு நட்பாடினும் அத்தொடர்பு திண்மையுறுதல் மிகவும் அரியது என்று அறிந்து கொள்க. அவ்வாறு திண்மை கொண்டு விளங்கும் நட்பு அறிவுடன் இயங்குவ தாயின் இன்னும் மிகவும் உயர்வாக மதிக்கப்பெறுவதாகும். அத்தகைய நட்பாடிய உள்ளங்கள் முரண்பட்டு நடுநிலை யினின்று மாறுபடின், அந்நட்புணர்வைத் துய்த்து மகிழ்ந்த இரண்டு உயிர்களுக்கும் அந்நிலை மிகவும் அயர்வைத் தருவதாகும்.*

## 4. இன நிலை

மொழி நிலம் நாகரிகம் பண்புநா டாட்சி
வழியினம் ஆறுவகுப்ப—கழியினொன்
றுங்கதுமுன் னேங்கும் அகத்தே மொழியோங்கின்
நீங்குபவே தோன்றல் நிறம். 44

**பொழிப்பு:** மொழி வழியாகவும், நில வழியாகவும், நாகரிக வழியாகவும், பண்பாட்டு வழியாகவும், நாட்டு வழியாகவும், ஆட்சி வழியாகவும் இனவுறவு நிலை ஆறுக வகுக்கப்பெறும். இவற்றுள் ஒன்று ஏதாம் ஒரு கரணியத்தால் வலிவிழந்து கழிந்து போகுமானல், அதற்கு முன் உள்ள உணர்வு நிலை தலையெடுத்து, அந்த இனத்தைக் கட்டுறுத்துக் கொண்டிருக்கும். இவ்வுணர்வு நிலைகள் யாவையினும் முதலாவதாகிய மொழியுணர்வு ஓரினத்தின் உள்ள வெழுச்சியாக இருக்குமாயின், அவ்வினத்தில் தலையெடுக்கும் பிறவி நிலை வேறுபாடுகளும் நிறநிலை வேறுபாடுகளும் நில்லாது நீங்கிவிடும்.

## 5. துணை நிலை

உள்ளம் புணர்ந்தார் உறுதுணைமற் றெண்பொருளாற்
கொள்ளுந் துணையென்றுங் கூடாதே—வெள்ளம்
எரிகாற்று வேந்துமிகின் ஏதுதுணையாம் எங்குந்
தெரிபொருளே அற்றூர் துணை ! 45

**பொழிப்பு:** உள்ள வுணர்வுகளுக்குப் பொருந்திய வகையில் இணைந்த ஒருவரே உற்ற துணையாக இருத்தல் முடியும். காட்சிப் பெருமைக்குரிய பொருள்களைத் தந்து பெறுகின்ற துணை என்றும் கூடாதாம். வெள்ளமும், எரியும், காற்றும், அரசும் அளவின் மிகுந்துவிட்டால் ஒருவர்க்கு ஒரு துணையும் பயன் பெறுவதில்லை. ஒரு துணையும் அற்ற ஏழைகளுக்கு எங்கும் நிறைந்து விளங்கும் மெய்ப்பொருளே துணையாக நிற்கும்.

# 10

# அயலியல்

## 1. நொதுமல் நிலை

நொதுமல் பொதுவர் நொடிவார் அவர்கொள்க
ஏதுமற் றவர்க்கினிதென் றேற்க - கதுமென்று
தாம்விலகிக் கொள்க தமைத்தவிர்ப்பின் தாங்காதார்
ஆமென் றவரணைக ஆங்கு ! 46

பொழிப்பு : நொதுமல் எனப்படுபவர் நட்பும் பகையு மற்றுப் பொதுவான நிலையிலுள்ளவர்கள் ஆவர். உலக நிலைகளில் மெலிந்து வாடுபவர் அத்தகையவர்களைத் துணை யாகக் கொள்க. அக்கால், அவர்களுக்கு இனியதாவது எஃது என்று கண்டறிந்து, அதனையே தாமும் இனியதென்று ஏற்றுக்கொள்க. அவர்கள் தம் தொடர்பைத் தவிர்க்க விரும்புவார் போல் தெரியவரின், விரைந்து அவர்பாலிருந்து தாமே முன்னதாக விலகிக் கொள்க. அவ்வாறு அவர் தொடர்பைக் கைவிட்டுத் தாம் வாழ இயலாதவர், அவர் தம்மை விலக்காததற்குரிய தன்மைகளை 'ஆம்' என்று ஒப்பி, அவர்களை முன்பு நின்ற நிலையிலேயே அணைந்து கொள்க.

## 2. வெறுக்கை நிலை

வினைவெறுக்கை உள்ளுறழ்ச்சி! வேண்டார் தவிர்க்க
முனைவதொன் றுண்டால் முகக்க - புனைவதுவும்
கோள்வரை யிட்ட குனிவென்க ஆங்கதுவும்
நாள்வரை யிட்ட நடை! 47

**பொழிப்பு:** *புற வினைகளின்மேல் ஏற்படும் வெறுப்புகளாலேயே ஒருவரின் உள்ளத்தில் மாறுபாடு தோன்றும். எனவே ஒருவரின் உள்ள மாறுபாட்டை விரும்பாதவர்கள் அவ் வுணர்வுக்கடிப்படையாக உள்ள தம் புற வினைகளைத் தவிர்த்துக் கொள்க. ஒருவர் துணையோடு தாம் முயன்று செய்யும் நிகழ்வு ஒன்று உண்டாயின், அவ்வகையில், அவரின் மனவுணர்வுடன் ஒத்து இயங்கி அதனை வெற்றி கொள்க. அவ்வாறு ஒத்து இயங்கும் புறவியக்க நிலையும், தமக்குரிய ஒரு குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளும் ஒரு பணிவு என்று கருதிக் கொள்க. அவ்வாறு நடப்பதுவுங்கூட ஓர் எல்லைப்பட்ட கால வரையறையைக் கொண்டதாகும் என்க.*

## 3. முரணிலை

உள்ளம் உகப்பே உறுவினையே சொல்லாட்டே
கள்ளத்தியங்கின் கடுமுரணும் - கொள்ளத்
தக்க தெனில்தாழ்க தாழாமை முற்றுமெனில்
ஒக்க விடல்தொடர்பை ஓர்ந்து! 48

**பொழிப்பு:** *உள்ளத்தின் மகிழ்ச்சியும், அதன் வயப்பட்ட வினையும், அதன் தொடர்பாகிய சொல்லாடல்களும் பொய்யான நிலையில் இயங்குவன ஆயின், அவையே இயல்புக்கு முரண்பட்ட நிலைகளாம். அவை ஒருவன் ஏற்றுக் கொள்ளத் தக்கவையாயின், தன் நிலைகளைத் தாழ்த்திக் கொண்டு ஏற்றுக் கொள்ளலாம். இனி, அந்நிலைகளே முற்றிய நிலைகளாயிருந்து அவற்றைப் பொறுதார் அவற்றைச் செய்வாரிடத்து நின்று நீங்கி அவர் தொடர்பை அறிவோடு எண்ணி, முற்றும் நீக்கிக் கொள்க.*

## 4. காழ்ப்பு நிலை

பொருளால் புகழால் பொலிதிறனால் கல்வித்
தெருளால் திரள்திரிபு தேர்க - அருளளியால்
மாற்றார்க் கதுகாழ்த்து மன்னுயிரைத் தேய்த்தெடுக்கும்
கூற்றாகும் நெஞ்சங் குடைந்து. 49

பொழிப்பு: ஒருவர்க்கு வந்து சேரும் பொருளாலும், புகழினாலும், நிறைந்த திறன்களாலும், கல்வித் தெளிவினாலும் மற்றவரிடத்துத் திரள்கின்ற திரிபுணர்வைத் தேர்ந்துகொள்க. பிறரிடத்து முகிழ்க்கும் அவ்வுணர்வைத் தம் அருளாண்மையால் மாற்றவியலாதவர்க்கு அது காழ்ப்புக் கொண்டு, தம் நெஞ்சத்தை குடைந்து வருத்தித் தம்முடைய நிலையான உயிரைச் சிறிது சிறிதாகத் தேய்த்து, இறுதியில் அதனை உடலினின்று பிரித்தெடுக்கும் கூற்றாக வந்து நிற்கும்.

## 5. பகை நிலை

வெறுக்கை முரணாகி வேர்விட்டுக் காழ்த்துப்
பொறுக்கவிலாப் புன்பகையாப் பூக்கும் - மறுக்கை
கருத்தென்னின் ஆடி வினையென்னின் காத்துத்
திருத்துண்டேல் தேறிக் கொளல். 50

பொழிப்பு: ஒருவரின் உள்ளத்தில் ஏற்படும் வெறுப்பு, வினைகளில் முரண்பட்டு நின்று, பின் வேர்விட்டு வளர்ந்து முதிர்வுற்றுத் தாம் பொறுத்தற் கியலாத புல்லிய பகையாகப் பூத்துவிடும். எனவே, மறுத்தற்குரியது கருத்தளவாயது என்னின் அதனை உரையாடிச் சரிசெய்தலும், வினையளவாயது என்னின் தன்னைப் பொறையால் காத்துக் கொண்டு திருத்துவதற்குரியதென்னின் திருத்தி அப்பகையினின்றும் தம்மைத் தேற்றிக்கொள்க.

# 11
# வினையியல்

## 1. சொல் நிலை

உள்ளமறி வொத்த துறுசொல்லாங் கொன்றிரண்டு
கொள்ளளவே சொற்பயனென் கொள்க - பொள்ளலுறின்
எள்ளுப் படுஉங் ; இழிபடூஉம் ; ஏற்றவினை
தள்ளுப் படூஉந் தகை. 51

**பொழிப்பு :** உள்ளவுணர்வும் அறிவுணர்வும் தம் அளவான் ஒத்து வெளிப்படும் சொல்லே பொருந்திய சொல்லாம். அவ்வுணர்வுகளுள் ஒன்றையோ அன்றி, இரண்டையுமோ அடிப்படையாகக் கொள்ளுகின்ற அளவைப் பொறுத்தது வெளிவரும் சொல்லின் பயன் என்று கருதுக. அந்நிலையில் இடையீடுபடின், வெளிப்படும் சொல் இகழப்படும் ; படவே, அதனால் மேற்கொண்ட வினை இழிவு பட்டுப்போகும் ; போகவே, அதைச் செய்பவரின் தகுதியும் புறக்கணிக்கப் பட்டு விடும்.

## 2. செயல் நிலை

ஒப்பம் அறிவூக்கம் ஊன்றுதிறன் உண்மையெனச்
செப்பமைந் தற்றே செயலென்ப; - செப்பத்தும்
ஒட்பமும் திட்பமும் ஓர்ந்த உரமென்ப ;
நுட்பம் இயற்கை நுழைபு. 52

**பொழிப்பு :** ஒரு செயலை மேற்கொண்டவரின் மன ஒப்புதல், அறிவு, உடல் முயற்சி, ஈடுபடுகின்ற திறன், உண்மை எனும் ஐந்து நிலைகளைப் பொறுத்தே அச்செயலின் செப்பமும் இருக்கும். அந்தச் செப்பத்துடன் செயல் தூய்மையும், உறுதிப்பாடும் அச்செயல்வகையில் அவர் ஆராய்ந்தறிந்த திறனைப் பொருத்தன. அதன் நுட்பச் சிறப்போ அவருக்கியற்கையாகக் கைவந்த அறிவாண்மையைக் கொண்டதாகும்.

## 3. முயற்சி நிலை

முயற்சி முடிவுக்கு முன்வாயில் ; மூண்ட
பயிற்சி உயர்வின் படியாம் ! - அயர்ச்சியிலா
ஊக்கம் உழைப்புண்மை உண்டால் ஒசிவெனினும்
ஆக்கம் உறுதியெனல் ஆம் ! 53

**பொழிப்பு :** ஒருவரின் முயற்சியே தாம் மேற்கொண்ட செயலின் முடிவுக்கான நுழைவு வாயிலாகும். அவருக்கு அத் துறையில் திரண்டு நின்ற பயிற்சியே அச்செயலில் அவரடையும் வெற்றிக்குப் படிநிலையாகும். சோர்வில்லாத மன ஊக்கமும் உடலுழைப்பும், உண்மையுணர்வும் ஒருவர்க்கிருக்குமானால், இடையில் ஒரோவொருகால் வினைச்சரிவு ஏற்பட்டாலும், இறுதி நிலையில் அவர்க்கு ஆக்கம் உறுதியாக வந்தெய்தும் என்க.

## 4. ஊக்க நிலை

பொருட்குறை யாவும் புலக்குறைவே ; ஐயம்
மருட்கறைகள் சூழின் மழுக்கே ! இருட்குறைந்த
ஒள்ளியோர் மேன்மேலும் ஒள்ளியரே செய்வினையால்
வெள்ளியோர் மேன்மேல் வெளிறு. 54

**பொழிப்பு :** செயலுக்குரிய கருவியின் குறைகள் யாவும் செய்பவரின் அறிவுக் குறைவே. அந்த அறிவுக் குறைவோடு செய்யப்புகும் வினைக்கண் உண்டாகும் ஐயமும், மருட்சியும், குறைகளும் சேர்ந்துவிட்டால் வினை மழுக்கம் ஏற்பட்டுவிடும். அறியாமை குறைந்த அறிவுடையோர் தாம் செய்யப் புகுந்த வினையின் ஈடுபாட்டால் மேன்மேலும் அறிவுத்திறனை பெற்று விளங்குவர். அறிவுக் குறைந்த மூடரோ தாம் செய்யப் புகுந்த வினையின் ஈடுபாட்டால் மேன்மேலும் மூடராகவே விளங்குவர்.

## 5. ஊதிய நிலை

ஊதியம் என்ப துழைப்பெச்சம் ! ஒன்றுண்டால்
யாதினும் யாரும் யாங்காற்றும் - தீதியலா
ஒண்ணோக்கம் ஒன்றே உயிர்க்கு நுகர்வாகும்
மண்ணோக்கம் மற்றூர்க்கே மன் ! 55

**பொழிப்பு :** *ஊதியம் என்று சொல்லப்பெறுவது ஒருவரின் உழைப்பிற்குப் பின் நிற்கும் மீதியாகும். அப்பயன் ஒரு வழியில் கிடைக்கும் என்ருல் எத்தகைய வினைக்கண்ணும் எவரும் எவ்விடத்தும் ஈடுபட முன்வருவர். தீங்கு சேராத உயர்ந்த நோக்கத்தினடிப்படையில் வரும் ஊதியமே உயிர்களின் நுகர்ச்சிக் குரியதாகும். மற்றபடி உலகியல் நோக்குடைய ஊதியங்கள் பிறருக்கே பயன்படுவனவன்றி உழைப்பவருக்குப் பயன்படாதாம்.*

# 12

# செல்வ இயல்

## 1. ஈட்டல் நிலை

ஈட்டம் அறிவுழைப்பாங் கேற்கும் இயல்பறிந்து
நாட்டம் மிகுக்கின் நலன்மிகுக்கும் - வாட்டமெலாம்
ஊக்கத்தின் ஒற்கம்; உறுசெல்வம் ஓங்குவினை
ஆக்கத்திற் காமன் றணிக்கு! 56

**பொழிப்பு:** வருவாய் என்பது அறிவையும் உழைப்பையும் பொறுத்தது. தமக்குற்ற அறிவும் உடலும் ஏற்றுக் கொள்கின்ற வினையின் இயல்பை ஒருவர் அறிந்து கொண்டு, அதில் தம் நாட்டை மிகுப்பாராயின் வந்து சேரும் நலன்கள் மிகுதியாகும். துயரம் என்பதெல்லாம் முயற்சியின் தளர்ச்சியே ஆகும். வந்து சேர்கின்ற செல்வம் உயர்ந்த செயல்களை ஆக்குவதற்கே ஆகும்; அழகுக்கோ ஆரவாரத்திற்கோ அன்று.

## 2. காத்தல் நிலை

காணிப்பு காத்தல்! கருதல்! கவலுறுதல்
கோணிப்பே உள்ளங் குலைவுறுதல் - பேணித்தன்
ஆக்கங் கணக்கறிந்தே அல்வழிக்குக் காப்பிட்டால்
ஏக்கங் குறைக்கும் இழிவு! 57

பொழிப்பு : *காத்தல் என்பது ஒரு வினையைக் கண்காணித்தலும் அதன் நலத்தையே எண்ணுதலும், அதன் சரிவுக்கு வருந்துதலும் ஆகும். உள்ளம் தன் உறுதியில் குலைவுறுமாறுல் வினையில் நொடிதல் நேரும். இவ்வகையில் எண்ணி வினைநிலையைப் பேணிக்கொண்டு, வருகின்ற ஆக்கத்தைக் கணக்கிட்டு, வினைக்குப் பொருந்தாத வழிகளில் தன் உள்ளம் செல்வதைத் தடுத்துக் கொண்டு இயங்கிஞல் ஓரோவழி வினைச்சரிவு வந்தாலும் அதஞல் வரும் மனத்துன்பத்தை அது குறைத்துவிடும்.*

## 3. இழத்தல் நிலை

இழப்பறி யாமை உழைப்பின்மை என்றும்
குழப்பில் துறைப்புலத்தார் கொள்க - உழப்பழியார்க்
கில்லாரும் தேக்கமொன் றுற்றக்கால் அஃதான்றே
வெல்லாகும் ஊக்க விறல். 58

பொழிப்பு : *ஒரு வினையின் முடிவில் இழப்பு ஏற்படுமாயின் அஃது அவ்வினை பற்றிய அறியாமையாலும், அதனில் முற்றும் ஈடுபட்டு உழைக்காமையாலும் ஏற்பட்டதென்றெண்ணிக் கொள்க என்றும் மேற்கொள்ளும் வினைத் துறையில் குழப்ப மில்லாது தெளிந்த அறிவுடையவரைத் துணையாகக் கொள்க. முயற்சி அழியாதவர்க்கு என்றும் வருவாயில் தேக்கம் ஏற்படுவதில்லை. அவ்வாறு ஒருகால் ஏற்படுமாயின் அதுவே அம்முயற்சியில் அவர் பொருந்தி வெற்றி பெறுவதற்குரிய ஊக்கத்தைக் கொடுக்கும் சிறப்பு நிலையாகும் என்று தெளிக.*

## 4. கல்வி நிலை

காட்சி கருதல் கவனித்தல் கற்பவற்றை
ஆட்சிப் புலனுழுதாங் காய்ந்தறிதல் - மாட்சி
தெளிதல் தெளிந்தவற்றைத் தேர்தலெனக் கல்வி
ஒளிர்தல் உயர்தல் உயிர்க்கு! 59

பொழிப்பு: ஒருவர் கட்புலனால் ஆர்வத்துடன் காண்கின்ற காட்சி வழியாகவும், கண்டவற்றை மனவுணர்வுக்குட் படுத்தி அவை பற்றிக் கருதிப் பார்க்கின்ற வழியாகவும், அதன்வழி கிடைக்கப் பெற்ற மனவுணர்வைக் கொண்டு, மேலும் மேலும், காட்சியால் மட்டுமன்றிக் கேள்வியாலும், நுகர்ச்சியாலும், சுவையாலும், ஊறுணர்வினாலும் பெறற்குரிய உணர்வு நிலைகளை ஊன்றிக் கவனித்தல் வழியாகவும், அவ்வாறு அறிந்தவற்றைத் தமக்குற்ற அறிவுப் புலனது ஆளுமையின் கீழ்ப்படுத்தி, ஆராய்ந்து அறிந்து, அவற்றின் பெருமையைத் தெளிந்து கொள்ளுதல் வழியாகவும், அவ்வாறு தெளிந்த பல்வேறு நிலைகளுள் என்றும் உளதாகிய மெய்நிலையைத் தேர்ந்து கொள்ளுதல் வழியும், கல்வி சிறந்து விளங்குதல், படிப்படியாய் உயிர்களை உயர்த்துவதற்காம் என்க.

## 5. பண்பு நிலை

பண்புளத்துச் செல்வம்; பருச்செல்வம் புன்முயல்வால்
மண்பிறந்த யார்க்கும் மலியுமாம் - நண்புறுதி
காக்கும் நடைவலிக்கும் கற்றார் கவினுயர்த்தும்
ஆக்கும் புகழ்நலன்கள் ஆம்! 60

பொழிப்பு: பண்பு, உள்ளத்தின் செல்வம். பிற பருமைச் செல்வங்கள் புல்லிய முயற்சிகளாலும் இம்மண்ணுலகில் பிறந்திருக்கின்ற எவரிடத்தும் மலிந்துவிடும். எனவே அது சிறப்புறுவதில்லை. ஆனால் உலகின் நுண்மைச் செல்வமாகிய இப்பண்புச் செல்வம், நட்பின் உறுதியைக் காத்துக் கொள்ளும்; தம் வாழ்வியல் போக்கிற்கு மிக்க வலிமையை உண்டாக்கும்; கற்ற அறிஞர்க்கு இப்பண்புச் செல்வம் இருப்பின் அவர்களது பெருமையை அது மேலும் உயரச் செய்யும். எல்லாவகைப் புகழ்ச்சிகளையும், வாழ்வு நலன்களையும் அது வருவித்துக் கொடுக்கும்.

# 13

# ஒப்புரவியல்

## 1. ஊண் நிலை

**ஒக்க உணவும் உழைப்பும் ஒருங்கமைக்கும்**
**தக்க முறையே தலையென்க - பக்கவெலாம்**
**மாணன்றி வேண்டும் மனத்து விழைவென்ப**
**ஊணின்றி இல்லை உயிர்!** 61

**பொழிப்பு :** எல்லார்க்கும் பொருந்தும்படி உணவு வாய்ப்புக்களையும் உழைப்பு வாய்ப்புக்களையும் ஒரே நிலையாக அமைத்துக் கொடுக்கின்ற தகுதியான நெறிமுறைதான் சிறந்தது என்க. அவற்றின் புறத்தாய பிற நலன்கள் எல்லாம் பெருமைக்குரியனவும் வேண்டும் என்கின்ற மனத்தின் விழைக்குரியனவுமே ஆகும். உயிர் வாழ்க்கை உணவின்றி இல்லையாகலின், பிற நலன்களுக்குரிய அமைப்புக்களைக் காட்டிலும் உணவு நிலை வாய்ப்புகளே முதல் தேவை என்க.

## 2. நருவு நிலைமை

**தானும் பிறவும் தனியென் றறியாமை**
**மானும் மனத்தின் மலைவிடர்கள்! - ஊனுடம்பு**
**வாய்த்த உயிர்க்கெல்லாம் வாழ்க்கை பொதுவென்றே**
**காய்த்தல் அறுத்தல் கடன் !** 62

**பொழிப்பு :** தாமும் பிற உயிர்களும் இவ்வுலக நலன்களைத் துய்ப்பதில் தனித்தனியாம் என்னும் அறியாத தன்மையால் மயங்குகின்ற மனத்தினது மலிந்த தன்மைகளே இடர்களாகும். ஊனினால் நிறைந்த உடம்புகள் வாய்க்கப் பெற்ற உயிர்கள் எல்லாவற்றிற்கும் இவ்வுலகின்கண் அமைந்த வாழ்க்கை பொதுவினதாகும் என்று கருதி, இங்கு விளைகின்ற நலன்களை யெல்லாம் அனைத்துயிர்களும் வேறுபாடின்றி எடுத்துக் கொள்ளுதலே அவ்வவற்றுக்குரிய கடமையாகும்.

## 5. ஈகை நிலை

உள்ளொண்மை ஈகை! உயிர்கள் நலம்பேணும்
கள்ளண்மை மாந்தர்க் கடனாகும் - வள்ளண்மை
என்றும் உயர்வன்றே இல்லாமை பேணுமொரு
தொன்று முயல்வே அது ! 63

பொழிப்பு : உள்ளத்தின் விளங்கிய தன்மைதான் ஈகை. உயிர்களின் நலத்தைப் பேணிக் காக்கின்றதும், அவர் நலத்தைக் கள்ளத்தால் திருடிக் கொள்ளாததுமான தன்மை மக்களுக்கே உரிய கடமையாகும். இப்பொதுவான தன்மையைப் பேணுமல், ஒருவரின் மீறிய நலன்களைப் பிறர்க்குக் கொடையாக அளிக்கின்ற வள்ளல் தன்மை என்றும் உயர்வாகாது. அது குமுகாயத்தின் ஒரு சாரார்க்கு இல்லாத தன்மையைப் பேணி வளர்க்கின்ற பழைமையான ஒருவகை முயற்சியே ஆகும்.

## 4. துன்பின்ப நிலை

கல்வி தொழிலீட்டம் துய்ப்புக் களிப்பைந்தும்
செல்வர்க்கே என்னும் நிலைசெகுக்க—இல்வகையால்
துன்புறுவார் இன்றித் துடைக்க ; தொகையுலகில்
இன்புறுதல் எல்லவர்க்கும் என்று. 64

பொழிப்பு : கல்வி, தொழில், ஈட்டம், துய்ப்பு, களிப்பு ஆகிய ஐந்து நலன்களும் செல்வர்களுக்கே உரிய வாய்ப்பு என்னும் நிலையைக் கொல்லுக. இல்லாமை நிலைகளால் துன்புறுவார் இல்லாமல் தவிர்த்து விடுக ; அனைத்து நலன்களும் நிறைந்த உலகில், அவற்றால் பெறுகின்ற இன்பநிலை எல்லார்க்கும் உரியது என்று எண்ணி.

## 5. உடைமை நிலை

உலகுடைமை யார்க்கும் உடைமை உழைப்பால்
இலகுநலன் யார்க்கும் இயைபாம் - அலகழியாக்
காக்கும் அரசே அரசென்க ! கள்ளத்தின்
ஊக்கும் உரவோர் உகுத்து ! 65

பொழிப்பு : உலகின் அனைத்து உடைமைகளும் அனைவரின் துய்ப்புக்கும் உரிய உடைமைகளாகும். ஒவ்வொருவரின் உழைப்பாலும் விளங்குகின்ற நலன்கள் அவ்வவர்க்கும் உரிமையாகும். இவ்வகையில் அளவு குறையாமல் காக்கின்ற அரசையே சிறந்த அரசு என்று கொள்க. அஃதன்றி ஒருவர் நலத்தைப் பிறர்க்காக்கும் கரவுத் தன்மைக்கு மக்களைக் கொண்டு செலுத்தும் திறன் மிகுந்தவர்களை வீழ்த்துதல் செய்து !

# 14
# அறவியல்

## 1. வாய்மை

பொய்யாமை வாய்மை ! புறத்தும் பிறர்க்கூறு
செய்யாமை உள்ளச் சிறப்பென்க ; - வையத்து
வாழ்ந்தார் அகத்தெண்ணும் வாழ்வெல்லாம் வாய்மைக்கண்
ஆழ்ந்தார் அவரென்னும் ஆறு ! 66

பொழிப்பு : *பொய்யாக இல்லாதது வாய்மை. புற நிலையான் பிறர்க்கு ஊறு செய்யாதிருத்தலே உள்ளத்தின் சிறந்த தன்மையாகும் என்க. இவ் வையத்தின்கண் இன்று வரை வாழ்ந்து போயினுரை உள்ளத்தில் வைத்துப் போற்று கின்ற தன்மை எல்லாம் வாய்மை நிலையிலே அவர் நிறைந்து நின்ருர் என்னும் நெறியாலேயே !*

## 2. நன்றி நிலை

நன்மை நினைக்குணர்வே நன்றி ! நலன்மறத்தல்
இன்மைக் கிலக்காக்கும் எஞ்ஞான்றும் ; - முன்மைநலம்
ஒன்றன்ருே பின்மைநிலைக் கூற்ருகும் என்றுணரார்
அன்றன்ருே உய்வர் அறிந்து ! 67

பொழிப்பு : *பிறர் செய்த நன்மைகளை என்றும் நிலைத் திருக்கின்ற தன்மையே நன்றியாகும். அவர் செய்த நன்மை களை மறந்து விடுதல் ஒருவரை எப்பொழுதும் ஒன்றுமில்லாத நிலைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து விடும். அவர்பால் முன்னர் தாம் பெற்ற நலன் ஒன்றுதானே தம் பின்மை ஊற்றுப்போல் அமைந்தது என்று உணராதவர் அந்நன்றி மறந்து இடருறும் அன்றைக்கன்ருே மீண்டும் அதனை நினைந்து உய்வர்.*

## 3. நாண் நிலை

அல்லவைக்கு நாணுதார் அஃதான் றடிப்படுக்கும்
இல்லவைக்கு நாணுதலென் ஏங்கியே ! - நல்லவைக்கே
உள்ளுவப்பார் என்றும் உகுக்கார்நாண் ; ஒவ்வாத
கள்ளுவப்பார் காய்மோ களி ! 68

பொழிப்பு : தாம் செய்யும் நன்மை யல்லாத செயல்களுக்கு நாணுதவர், அவை அமைந்து அடிநிலைப்படுத்தும் வறுமை நிலைக்கு மனம் வருந்தி நாணுவது என்ன பயன் தரும் ? நல்லனவற்றுக்கு உள்ளம் விரும்புகின்றவர்கள், என்றைக்கும் அல்லனவற்றைச் செய்ய நாணுகின்ற தன்மையைக் கைவிட மாட்டார்கள். தமக்குப் பொருந்தாத கள் குடியால் உள்ளம் மகிழுவார், அதனைக் குடிக்கும் பிறரை வெறுப்பார்களோ, வெறுக்கார் என்க.

## 4. முறை செயனிலை

விசும்புவளி தீநீர் விரிநிலமென் றைந்தும்
பசும்புல்லோ டுழ்க்கும் பயனும் - இசும்பின்றி
எய்துவித்தல் காத்தல் இழுக்கின் தடிந்துமுறை
செய்துவித்தல் ஆள்மைச் சிறப்பு. 69

பொழிப்பு : விசும்பும் வளியும் தீயும் நீரும் அவற்றால் விரிந்த நிலமும், அவை ஐந்து பூத நிலைகள், பசும்புல் முதலியவற்றால் உகுக்கின்ற பயன்களும், வழுக்கலின்றிப் பெறுவித்தலும், அவ்வாறு பெறுவதைச் சிதைக்கும் நிலைகளினின்று காத்து நிற்றலும், அந்நிலைகளில் தவறுகின்றவரைத் தண்டித்து முறை செய்தலும் அரசாளுமையின் சிறப்பு ஆகும்.

## 5. பொறை நிலை

மிகைபொறுத்தல் மாண்பொறையா மேலோர் வகுப்பர்
தகையொருவர்க் கென்றுமே தாழ்தல் - பகையறுக்கும்
உள்ள உரனதுவாம் ஒள்ளியோர்க் கொண்பொறையே
தள்ளத் தகாத தகவு. 70

பொழிப்பு: உலகியலான் எதுவும் அளவின் மிகுதலைப் பொறுத்துக் கொள்ளுதலையே பெருமை மிக்க பொறை என்று அறிவின் மேம்பட்ட சான்றோர் வகுத்துச் சொல்வர். ஒருவரின் தகுதிநிலை என்பது அறியார்பால் அவர் தாழ்ந்து போதலே. அந்நிலையே பகையை அறுக்கின்ற உள்ள உரன் ஆகும். அறிவுள்ளவர்க்கு ஒளி தரும் பொறையுடைமையே எந்நிலையிலும் தவிர்க்கக் கூடாத தகுதியாகும்.

# 15

# புகழியல்

## 1. அறிவு நிலை

**கரணம் கருமம் கருவியெனும் மூன்றின்**
**முரணின் றுயிர்க்கு முகிழ்த்து - நிரனிறையாப்**
**பாகின்றி நீண்டஃகித் தன்துணையோ டுட்கரணத்** 71
**தாகி இயலும் அறிவு.**

**பொழிப்பு :** கரணியநிலை, கருமநிலை, கருவிநிலை, என்னும் மூன்று நிலைகளும் தம்முள் மாறுபாடு கொள்ளாமல் உயிர்களிடத்து வெளிப்பட்டுத் தோன்றி அவற்றின் உட்பகுப்புக்களாய் வரிசை முறைகளாகப் பகுப்பில்லாத படியாகவும் நெடிதும் குறுகலும் என்னும் படியாகவும், தற்கருவியும், துணைக்கருவியும், கரணியக் கருவியும் என்னும் படியாகவும், விளங்குதல் பெற்று, இயல்கின்ற தன்மை யுடையது அறிவு.

### அறிவு இயல் நிலை

1. கரணிய அறிவு — (பாகில்லாதது) பிரிவில்லாதது
   (Knowledge of reasons)
2. கரும அறிவு — 1. நெடியநிலை (நீண்டநிலை)
   (Knowledge of doings) 2. குறுகிய நிலை (அஃகிய நிலை)
3. கருவி அறிவு — 1. தற்கருவி நிலை
   (Knowledge of things) 2. துணைக் கருவி நிலை
   3. கரணியக் கருவி நிலை

## 2. அருள் நிலை

அருளென்ப துள்ளத் திறைமையது பெற்றார்க்
கிருளில்லை எஞ்ஞான்றும் என்ப - கருள்மனத்தர்
அன்பறியார் என்றும் அருளறியார் ஆழ்ந்தகன்ற
இன்பறியார் ஏந்தும் இடர். 72

பொழிப்பு : அருள் என்பது உள்ளத்தின் இறைமை நிலை. அந்நிலை வரப்பெற்றார்க்கு உலகியலான் கவிழும் இருள் நிலைகள் எந்நிலையிலும் படிவதில்லை என்பர். உலகியலில் மூலநிலைகளைத் தெரிந்துணராத கரிய மனத்தை உடையவர்கள் அன்பையே உணர மாட்டாதவர்கள். எனவே அத்தகையவர்கள் என்றைக்கும் அருளை உணர வியலாதவர்கள். ஆகலினால், ஆழம் உடையதும் அகற்சியுடையதுமான இன்பநிலைகளை அவர்கள் உணர வியலாது. உலகியல் துன்பங்களையே அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

## 3. அமைவு நிலை

இடர்நிலை என்றும் இயல்பன்று யார்க்கும்
படர்துயர் உண்டதுவே பான்மை - தொடர்துயரம்
உற்றாரும் பின்னை உயர்வெய்தும் உள்ளமைவு
பெற்றாருக் கின்பம் பெரிது. 73

பொழிப்பு : உலகியலான் வரும் துன்பநிலை என்றுமே இயல்பாக இருப்பது அன்று. பிறவியுற்ற எத்தகையார்க்கும் அவ்வந்நிலையான் படர்கின்ற துயரம் உண்டு. அதுவே இயற்கைத் தன்மையாம். தொடர்ந்த துன்பங்களை அடையப் பெற்றவர்களும் பின்னொருகால் அவை நீங்கி மேம்பாடு அடைவர். எனவே அத்துன்பங்கள் வருமிடத்து, அவை நீங்குதல் உறுதி என்று உள்ளம் அமைந்திருக்கப் பெற்றவர்க்கே இன்பநிலை அளவின் மிகுதியாகும் என்க.

## 4. மான நிலை

மனவுயர்ச்சி தாழவரல் மானம் அதுதான்
இனவுயர்ச்சி காட்டும் எழுச்சி - இனவுயர்ச்சி
உள்ளுவார்க் கில்லை உயர்மானம் ஆங்கதனைக்
கொள்ளுவார்க் கில்லை குனிவு. 74

**பொழிப்பு :** மனம் உயர்ந்து நின்ற நிலைக்குத் தாழ்ந்து போகும்படி வருகின்ற சூழலில் ஒருவர்க்குத் தோன்றுகின்ற நல்லுணர்வே மானம் என்பது. அம்மான உணர்வுதான் தாம் தோன்றிய உயிர்க்கூட்டத்தின் வளர்ச்சியைக் காட்டுகின்ற ஒரு மனவெழுச்சியாகும். ஆனால் தாம் சேர்ந்த உயிர்க் கூட்டத்தின் நிலையை மேன்மேலும் உயர்த்த எண்ணுகின்றவர்களுக்கு, தம் தனிநிலைத்தாழ்ச்சியால் தோன்றும் உயர்ந்த மான உணர்ச்சி இல்லையாகும். அவ்வினத்தை உயர்த்து தலையே தம் வாழ்வாகக் கொள்ளுபவர்க்கோ, தம் தனிநிலை மானங் கருதாத நிலையால், தலைக்குனிவு ஏற்படுவதில்லை என்க.

## 5. தொண்டு நிலை

தோய்ந்தார்ப் பொருட்டுழைத்தல் தொண்டென்ப உள்ளச்சீர்
வாய்ந்தார் துணிவின் வயப்படுக - ஆய்ந்துரைக்கின்
துன்பம் இழவிழிவு தோளின்மை தூங்காமை
இன்பென்பார் ஆற்றல் இனிது. 75

**பொழிப்பு :** தம்முடன் பொருந்தப் பெற்றாரின் காரணியமாகத் தாம் வாழ்வில் உழைப்பதையே தொண்டு என்பர். இவ்வாழ்க்கைக்குரிய வகையில் உள்ளச்சீர்மை வாய்க்கப் பெற்றவர்களே துணிந்து அதன்பால் ஈடுபடுக. ஆராய்ந்துரைப்பதாயின், துன்பத்தையும், இழப்பையும் இழிவையும், துணையில்லாமையையும், சோர்தல் இல்லாமை யையும் இன்பம் என்று கொள்ளுபவர்கள் இதனை ஆற்றுதல் அவர்களின் உயிர்க்கு உவப்புடைய தாகும்.

## 2. அருள் நிலை

அருளென்ப துள்ளத் திறைமையது பெற்ருர்க்
கிருளில்லை எஞ்ஞான்றும் என்ப - கருள்மனத்தர்
அன்பறியார் என்றும் அருளறியார் ஆழ்ந்தகன்ற
இன்பறியார் ஏந்தும் இடர். 72

பொழிப்பு : அருள் என்பது உள்ளத்தின் இறைமை நிலை. அந்நிலை வரப்பெற்ருர்க்கு உலகியலான் கவிழும் இருள் நிலைகள் எந்நிலையிலும் படிவதில்லை என்பர். உலகியலில் மூலநிலைகளைத் தெரிந்துணராத கரிய மனத்தை உடையவர்கள் அன்பையே உணர மாட்டாதவர்கள். எனவே அத்தகையவர்கள் என்றைக்கும் அருளை உணர வியலாதவர்கள். ஆகலினுல், ஆழம் உடையதும் அகற்சியுடையதுமான இன்பநிலைகளை அவர்கள் உணர வியலாது. உலகியல் துன்பங்களையே அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

## 3. அமைவு நிலை

இடர்நிலை என்றும் இயல்பன்று யார்க்கும்
படர்துயர் உண்டதுவே பான்மை - தொடர்துயரம்
உற்ருரும் பின்னை உயர்வெய்தும் உள்ளமைவு
பெற்ருருக் கின்பம் பெரிது. 73

பொழிப்பு : உலகியலான் வரும் துன்பநிலை என்றுமே இயல்பாக இருப்பது அன்று. பிறவியுற்ற எத்தகையார்க்கும் அவ்வநிலையான் படர்கின்ற துயரம் உண்டு. அதுவே இயற்கைத் தன்மையாம். தொடர்ந்த துன்பங்களை அடையப் பெற்றவர்களும் பின்னெருகால் அவை நீங்கி மேம்பாடு அடைவர். எனவே அத்துன்பங்கள் வருமிடத்து, அவை நீங்குதல் உறுதி என்று உள்ளம் அமைந்திருக்கப் பெற்றவர்க்கே இன்பநிலை அளவின் மிகுதியாகும் என்க.

## 4. மான நிலை

மனவுயர்ச்சி தாழவரல் மானம் அதுதான்
இனவுயர்ச்சி காட்டும் எழுச்சி - இனவுயர்ச்சி
உள்ளுவார்க் கில்லை உயர்மானம் ஆங்கதனைக்
கொள்ளுவார்க் கில்லை குனிவு. 74

பொழிப்பு : *மனம் உயர்ந்து நின்ற நிலைக்குத் தாழ்ந்து போகும்படி வருகின்ற சூழலில் ஒருவர்க்குத் தோன்றுகின்ற நல்லுணர்வே மானம் என்பது. அம்மான உணர்வுதான் தாம் தோன்றிய உயிர்க்கூட்டத்தின் வளர்ச்சியைக் காட்டுகின்ற ஒரு மனவெழுச்சியாகும். ஆனால் தாம் சேர்ந்த உயிர்க் கூட்டத்தின் நிலையை மேன்மேலும் உயர்த்த எண்ணுகின்ற வர்களுக்கு, தம் தனிநிலைத்தாழ்ச்சியால் தோன்றும் உயர்ந்த மான உணர்ச்சி இல்லையாகும். அவ்வினத்தை உயர்த்து தலையே தம் வாழ்வாகக் கொள்ளுபவர்க்கோ, தம் தனிநிலை மானங் கருதாத நிலையால், தலைக்குனிவு ஏற்படுவதில்லை என்க.*

## 5. தொண்டு நிலை

தோய்ந்தார்ப் பொருட்டுழைத்தல் தொண்டென்ப உள்ளச்சீர்
வாய்ந்தார் துணிவின் வயப்படுக - ஆய்ந்துரைக்கின்
துன்பம் இழவிழிவு தோளின்மை தூங்காமை
இன்பென்பார் ஆற்றல் இனிது. 75

பொழிப்பு : *தம்முடன் பொருந்தப் பெற்றாரின் கரணியமாகத் தாம் வாழ்வில் உழைப்பதையே தொண்டு என்பர். இவ்வாழ்க்கைக்குரிய வகையில் உள்ளச்சீர்மை வாய்க்கப் பெற்றவர்களே துணிந்து அதன்பால் ஈடுபடுக. ஆராய்ந்துரைப்பதாயின், துன்பத்தையும், இழப்பையும் இழிவையும், துணையில்லாமையையும், சோர்தல் இல்லாமை யையும் இன்பம் என்று கொள்ளுபவர்கள் இதனை ஆற்றுதல் அவர்களின் உயிர்க்கு உவப்புடைய தாகும்.*

# 16

# இறப்பியல்

## 1. நிலையாமை நிலை

புறத்துப் புதுமை அகப்பழமை போற்றல்
துறத்தல் உயிரியல்பு தோன்றல் - பிறத்தலென்ப
ஒன்றெய்த வொன்றழியும் உண்மை நிலையாமை
என்றுமுள தோற்றம் இறப்பு ! 76

பொழிப்பு : புறத்தே புதுமை என்று சொல்லப் பெறுவன எல்லாம் அகத்தே பழைமை யுடையனவாகவே இருக்கும். தாம் புதிதாகக் கண்டு கொண்ட ஒன்றைப் போற்றுவதும், பின்பு அதனைத் தவிர்ப்பதும், உயிர்களின் அறிவு வளர்ச்சிக் குற்ற இயல்பான தன்மையாகும். மறைந்திருக்கும் ஒன்று வெளிப்படத் தோன்றுவதே பிறப்பு என்று சொல்லப் பெறு கின்றது. ஒரு பொருள் புதிய ஒரு தோற்றம் பெறுகையில் பழைய தோற்றம் அழிகின்றது. எனவே எந்த ஒரு தோற்றத்திலேயும் நிலைத்து நில்லாத — தன்மை (அல்) நிலையாமை — என்பது பொருள்களின் உண்மைத் தன்மை யாகும். வெளிப்படும் அனைத்துத் தோற்றங்களும் அவற்றின் மறைவுகளும் என்றும் உள்ளவையே !

## 2. பொருணிலை

ஆற்றலொடு மூலம் அளவின் அறக்கலந்து
மாற்றுருவங் கொள்ளல் பொருளென்ப - காற்றுருவாய்
நிற்கும் கனக்கும் நிலத்தும் விசும்பிடத்தும்
ஒற்கமுற் றேயும் ஒளிர்ந்து. 77

பொழிப்பு : ஆற்றல் மூலப்பொருளுடன் பல்வேறு வகையான அளவில் இரண்டறக் கலந்து, வேறுவேறு வடிவங்கள் எய்தப் பெறுவதே பொருள்கள் என்று கூறப்பெறுகின்றன. கட்புலனுக்குப் புலப்படா வண்ணம் காற்றுப்போல் உருவமற்ற நிலையில் நிற்கின்ற அவ்வாற்றலும் மூலமுமாகிய பொருள்களே, கண்ணுக்குப் புலப்படும் கனத்த உருவங்களாக நிலத்தின் கண்ணும், விசும்பிடையிலும், விளங்கித் தோன்றி யிருந்து பின்னர் மீண்டும் உருவமற்று எங்கேனும் ஓரிடத்தில் அமைதியாக ஓய்ந்திருக்கும் நிலையை எய்துகின்றன.

## 3. ஆற்றல் நிலை

அற்றாலும் ஆற்றல் அழியாது மற்றொன்றாய்
உற்றாலும் ஆங்கதுவாய் உள்ளுயிர்க்கும் - வற்றாத
ஊற்றாய் உலகமாய் ஒண்கதிராய் நீள்விசும்பாய்
ஆற்றல் நிகழ்த்தும் அலைவு ! 78

பொழிப்பு : பொருள்களில் பொருந்தி யிருந்து இயங்கிய நிலையைத் துறந்தாலும் ஆற்றல் என்றும் அழியாதாம். இனி, வேறு பொருளுருவில் கலந்து புதுப்புறத் தோற்றம் கொண்டாலும், ஆங்கு, அந்தப் பொருளின் உள்ளிருந்து அந்த ஆற்றல் இயங்கும். உலகமாகவும், ஒளி பொருந்திய கதிர்களாகவும், அளவிடப் பெறாத விசும்பாகவும் உள்ளன யாவும், என்றும் வடியாமல் ஊற்றுப்போல் இருந்து கொண்டிருக்கின்ற ஆற்றலின் அலைவுத் தோற்றங்களே யாகும்.

## 4. மாறுதல் நிலை

**விண்வளிதீ நீர்நிலமாய் விண்டுள் வியன்கலந்து**
**கண்செவிவாய் மூக்குமெய்யாய்க் கால்மாறும் - எண்புலனுக்**
**கெட்டா இணைமாற்றம் ஏய்ந்துணர்வார்க் கிவ்வுடற்கண்**
**ஒட்டா துறையும் உயிர். 79**

பொழிப்பு : *விண், காற்று, தீ, நீர், நிலம் என்னும் ஐம்பூதங்களாக உள்ளும் புறமும் விளங்கித் தோன்றி, வியப்புக்குரிய வகையில் தனித்தும் ஒன்றுடன் ஒன்று கலந்தும், பின் கண், செவி, வாய், மூக்கு, மெய் என்னும் ஐம்புலன்களாக அவை வழி நிலையான் மாறியும், அளவைக்கும், அறிவுக்கும் எட்டாமல் பொருந்தி யியங்குகின்ற தோற்ற மாற்றங்களை ஒன்றியிருந்து முருக உணர்கின்றவர்களுக்கு, ஊனிலையான் நின்ற உடலின்கண் உயிர் முற்றப் பொருந்தாமல் தங்கி யிருக்கும்.*

## 5. ஒருங்கல் நிலை

**ஒன்ருற்றல் ஒன்றுபொருள் ஒன்ரேடொன் றுட்புறமாய்**
**நின்ருற்றி நீங்கி நிகழ்வொடுங்கி - மன்றிருந்தே**
**உள்வீறி ஓங்கி உலகாய் நடந்தொளிர்தல்**
**கள்வீறிக் கண்டார் கணக்கு ! 80**

பொழிப்பு : *ஒன்று ஆற்றலாகவும் ஒன்று பொருளாகவும் இருந்து, ஒன்றினுள் ஒன்று கலந்து, அகமாகவும் புறமாகவும் நின்று பல்வகையான இயக்கங்களைச் செய்து, பின் அவ் வியக்க நிலைகளினின்று நீங்கி, நிகழ்ச்சிகளை ஒடுக்கிக் கொண்டு, காலமாகவும் இடமாகவும் அமைந்திருந்து, பின் மீண்டும் உள்ளெழுச்சி யுற்று முன் போலவே பல் வடிவாய் விளர்ந்து எழுந்து உலகமாயும், பிறவாயும் நடந்து தொடர விளங்கி யிருத்தல் என்னும் உண்மை, மூளையின் முருகிய நினைவால் முகிழ்த்த மெய்ப்பொருள் இன்ப ஒழுக்கைச் சுவைத்தறிந்தவர் கூறும் அளவையறி வாகும்.*

# 17

# பிறப்பியல்

## 1. உடல் நுகர்ச்சி நிலை

விழிமின்பாய்ந் துள்வெதுப்ப வேண்மதநீர் ஓடிக்
கழிபெருநற் காமம் கனப்பப் - பொழியன்பால்
சொல்லிதழ்க்கை மொய்த்தூர்ந்துள் ஒத்துச் சுரப்பாடி
வல்லுறுத்துத் துய்த்தல் வரைத்து. 81

பொழிப்பு: விழிகள் ஒன்றை யொன்று கவ்வும் நோக்கினால் தோன்றிய மின் தாக்குதல் போலும் ஓருணர்வு ஊடுருவி, இணையத்தக்க ஆணும் பெண்ணுமாகிய இருவரின் உள்ளத்தையும் உடலையும் வெதும்பலுறச் செய்ய, வேட்கை மதர்ந்த செந்நீர் இருவரின் நாடி நரம்புகளின் முழுதும் பாய்ந்தோடி, மிகவும் பெருகிய நல்ல காமவுணர்வைக் கனலுறச் செய்ய, ஒருவரை யொருவர் நெருங்கி, அன்பு பொழியும் உணர்வுடன் சொற்களையும், வாயிதழ்களையும், கைகளையும் ஒருவர்மேல் ஒருவர் மொய்க்கச் செய்து, மேலிட்டுத் தழுவி உள்ளுணர்வும் உறுப்புகளும் ஒத்துச் சுரக்கும் நிலையில் அசைந்து கூடி, வலிமையொடு உறுத்துத் துய்க்கின்ற இன்பம், அளவொடு நிகழத்தக்க தாகும்.

## 2. கரு நிலை

வித்துசினை ஒன்றித்தாய் வேதுநீர் உள்வாங்கிப்
பத்துமதி தாங்கிப் படர்ந்து - முத்தவிழ்ப்பாய்
வாழும் உலகியற்கு வாய்த்த உறுப்புணர்வால்
வீழும் வியப்பே வியப்பு. 82

பொழிப்பு : ஆணின் வித்தும், பெண்ணின் சினையும் பொருந்தித் தாயினது வெப்பமான அகட்டு நீரை உள் சுவறிக்கொண்டு, பத்து மாதங்கள் உயிரைத் தாங்கி யிருந்து, உருவம் மேவப் பெற்று முதிர்ந்து, சிப்பியினின்று முத்து அவிழ்வது போல், தான் உயிர்மெய்யாய் வாழப்போகும் உலக இயல்புகளுக்கு ஒத்த வகையில், உள் உறுப்புகளொடும் அவற்றிற்கேற்ற உணர்வுகளொடும், இம்மண்ணில் வீழ்கின்ற வியத்தகு வினையே மிகவும் வியப்புக்குரிய தாகும்.

## 3. உரு நிலை

உடல்பொருந்தி அற்றுங் குளம்பொருந்தி ஒருந்
திடல்பொருந்தித் தேவை தெளிந்து - கடலுலகில்
ஏய்ந்த பருப்பொருளுக் கேற்ப வளருமே
வாய்ந்த உயிர்மலர வந்து. 83

பொழிப்பு: உலகியலுக்கு ஒத்த உடலம் பொருந்தி, அவ்வளவில் அங்ஙனே உள்ளமும் பொருந்தி, நுகர்ந்தறியும் திறனும் அதனுட் பொருந்தி, தனக்குற்ற தேவைகளைத் தானே தேர்ந்து தெளிந்து கொண்டு, கடல் சூழ்ந்த இவ்வுலகில் நிறைந்து விளங்கும் பருப்பொருள்களுக் கேற்ற வகையில், வாய்ப்பினுல் வந்து தங்கிய உயிரானது மலர்ந்து வளர்தலுறும்.

## 4. திரு நிலை

பரந்த நினைவின் படிநிலைக்கு வாங்கிச்
சுரந்த நினைவு சொரிந்து - கரந்தொளிர்ந்த
உட்புலன்கள் தேர உடல் பொருந்த வீறூர்ந்து
பெட்புநலன் துய்த்தல் பெரிது. 84

பொழிப்பு : எங்கும் பரந்து நிற்கும் நினைவு வெளியில் அலையும் நினைவுகளை, படிந்த உணர்வு நிலைகளுக்குத் தக்கவாறு, உள்ளத்தால் வாங்கி, அவற்றுள் தானும் சுரக்கின்ற நினைவுகளை உலக நிலைகளுக்கேற்ப வெளிப்படுத்தி, மறைவாக விளங்கி நிற்கும் அக அறிவுநிலைகள் வளரும்படி தன் உடல் கூறுகளுக்கு ஒத்தவகையில் வீறுபெற எழுந்து நின்று, உயிரானது, இவ்வுலக வியற்கையின் இயல்பு நலன்களைப் பெரிதும் துய்க்கும்.

## 5. புதுமை நிலை

நுகர்ச்சி பழமை நுகர்வுபுதி தென்ப
முகிழ்ச்சி தன்னுணர்வால் மொய்க்கும் - இகழ்ச்சி
இவணில்லை ஏற்ற துயர்வென்றே எண்ணும்
கவண்முகத் தூடுருவுங் கல்! 85

பொழிப்பு : உயிர்க்கு உற்ற நுகர்ச்சி நிலையறிவு பழையதும், அதால் நுகர்கின்ற நுகர்வு நிலைகள் புதியனவும் ஆகும் என்றுரைப்பர். அவ்வாறு புதிய நிலைகளை நுகருங்கால், அவற்றின் முகிழ்க்கின்ற உணர்வு நிலைகள், தன்னின் பழைய உணர்வுகளின் அளவடிப்படையில் அவ்வுயிர்க்கு வந்து நிறையும். உயிரளவான் இகழத்தக்க நிலைகள் இவ்வுலகின் கண் ஒன்றும் இல்லையாகலான், தான் ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு நிலையும் தன் நிலையை உயர்த்துகின்ற நிலையே என்று எண்ணி நுகரும். கவணின் முகத்தினின்று ஊடுருவிப் பாயும் கல்போல் அவ்வுயிர் ஒன்றின் தோய்ந்து அதனின்று நீங்கி ஒன்றை நோக்கிப் பாயும் பெற்றியதாம்.

# 18

# உயிரியல்

## 1. உந்து நிலை

**உய்ப்ப துயிரென்க உந்தல் அதற்கியல்பு**
**துய்ப்ப ததன்நோக்கம் தோயவே - மெய்ப்பொருந்தி**
**உற்ற பொருளின் உருப்பெருக்கி ஆங்குகுத்து**
**மற்றொன்று தாவும் மகிழ்ந்து!** **86**

பொழிப்பு : ஒவ்வொரு பொருட்கூறுகளுடனும் பொருந்தி அவற்றை உய்ப்பதால் (இயக்குவதால்) உயிர்க்கூறு ஒவ்வொன்றையும் உயிர் என்று கொள்க. இயங்குதலும் தனக்குற்ற பொருள்களுடன் தங்கி அவற்றை இயக்குதலும் அவ்வொரு கூறுமாகிய உயிர்க்கு இயல்பு ஆகும். அவ்வாறு இயங்கித் தன்னை மேனிலைக்குக் கொண்டு செல்லுதலே அதன் நோக்கம். அவ்வகையில் ஒரு பொருட்கூறொடு வந்து அளாவி நின்று தனக்கேற்ற உடலுருவாய் அப்பொருட் கூற்றைப் படைத்து, அங்ஙன் தான் பொருந்திய உருவம் போன்ற பல்வேறு உருவங்களைப் பொருள்வடிவாய்த் தன் கீழ் நிற்கும் உயிர்கள் வந்து தங்குதற்குப் பெருகச் செய்து, தான் பொருந்திய பொருட்கூறு குலைவுற்ற நிலையில் ஆங்கணே அதனை உகுத்து நீங்கித் தான் அதனின்று வளர்ந்து விளங்கிய மேனிலைக் கொப்ப மீண்டும் வேறொரு தக்க பொருட் கூற்றுக்குத் தாவி நின்று தொடர்ந்து துய்க்கும்.

## 2. உடகர்ப்பு நிலை

உயிர்க்குகப்பு கூர்தல் உகப்புநிலைக் கங்காந்
துயிர்க்குநிலைக் கொன்றினிணைந் தாரும்-செயிர்க்குநிலை
தோன்றின் துமிக்கும் தொகைக்கூடும் துய்ப்புநினைந்
தான்றலையும் மேலொன்றுக் காங்கு ! 87

பொழிப்பு : உயிர் தனக்குகந்த பொருட்கூறுடன் பொருந்தித் துய்த்து உயர்கின்ற நிலையே அதன் வளர்ச்சி நிலையாம். அத்துய்ப்பு நிலைக்கு அவாவுற்றுத் தன்போலும் அவா நிலை கொண்ட பொருட் கூற்றுடன் கூடிய இன்னோர் உயிர்க் கூற்றுடன் இணைந்து பொருந்தித் தான் மேலோங்குதற்குத் துய்க்கும். அவ்விணைப்பு நிலையின் தனக்குப் பொருந்தாத குறை தோன்றுமாயின் தானுற்ற உயிரிணைப்பைத் துண்டித்துக் கொள்ளும். அவ்வாறு ஓருயிர்க் கூறு தொகை மிகுந்த உயிர்க்கூறுகளொடு பொருந்தித் துய்க்கும். அவ்வகையில் ஓர் உயிர்க்கூறு தன்னினும் துய்ப்பின் மிகுந்த பிறிதோர் உயிர்க்கூற்றெடு பொருந்துதற்கே எண்ணி என்றும் அவாவி அலைந்து நிற்கும்.

## 5. துய்ப்பு நிலை

ஒத்தவொன்றி னுள்ளுயிர்த்தே ஓங்குமொன்றல் தாம்வளர்ந்து
மெத்தப் பொருந்துதுணை மேவவே - நித்தலும்
கோடானு கோடிக் கொடிப்பிறக்குந் தாமும்பல்
கோடானு கோடி குவைத்து ! 88

பொழிப்பு : பிறந்து துய்க்க அவாவுதலையுடைய உயிர்கள், தம் உணர்வு நிலைகளுக்கு ஒருவாறு பொருந்துவனவும், பொருட்கூற்றுடன் முன்னரே பிறந்து இயங்குவனவுமாகிய வேறு உயிர்மெய்களின் வழிப் பிறவி யெடுத்து, தம்மினும் பல்வகையான் ஓங்கி நின்ற உயிர்மெய்க் கூறுகளின் புரப்பொடு வளர்தல் பெற்று; தம் நிலைக்கு மெத்தவும் பொருந்தி நிற்கும் உயிர்மெய்க் கூறுகளின் துணையுடன் உலகின்கண் மேவி வளரும் வகையில் நித்தமும் கோடிக்கணக்கான கொடி வழியான் பிறவியெடுப்பதுடன், தாமும் பலகோடிக் கணக்கான கொடிவழித் தொகுதிகளை உண்டாக்கும்.

## 4. உயிர்வு நிலை

உள்ளம் அறிவுணர்வால் உள்விளர்ந்தான் றுங்கடங்கி
வெள்ளப் பிறப்பின் விலகி - கொள்ளலைந்த
பேருளத்தைப் பேறறிவைப் பேரின்பைப் பெற்றூர்ந்தே
ஒருளத்தால் கட்டுண்டாங் கோயும்! 89

பொழிப்பு: ஓர் உயிர் உடலொடு பொருந்தித் துய்க்கின்ற பொழுது, அதற்குற்ற அறிவுணர்வு வழி அதன் உள்ள உணர்வு மேலும் மேலும் தூய்மையும் மென்மையுமுற்று விளங்கிக் கிளர்ந்து நின்று அமைவுற்றுத் தெளிந்து, அளவில்லாத பிறவிநிலைகளினின்று விலகித் தான் இறுதியாகக் கொள்ள விரும்பி, முற்பிறவிகள் தோறும் அலைந்த பேருள்ளமும் பேரறிவும் பேரின்பமும் சான்ற மெய்ப் பொருளை அடையப் பெற்றுத் துய்த்து, அதனின் உள்ளத்தொடும் அறிவொடும் தன் உள்ள அறிவு நிலைகளை இணைத்துக் கொண்டு, அங்ஙனே ஒய்ந்து ஒடுங்கும்.

## 5. நிலைப்பு நிலை

ஒன்றுநிலைக் கொன்றியுயிர் ஓய்ந்தநிலைக் கொண்பொருளால்
என்றும் பிறத்தல் இலையாகும் - அன்றதுபோல்
முற்பிரிந்த வல்லுயிர்கள் முள்வரைக்குத் தான்றுமாய்ப்
பிற்பிரிதல் ஊழிக்குப் பின்! 90

பொழிப்பு: ஓர் உயிர்க்கூறு தான் போய் இறுதியாகப் பொருந்தித் துய்க்க வேண்டிய மெய்ப்பொருள் நிலையோடு பொருந்தி ஓய்ந்த நிலையில், ஒள்ளிய பொருள் கூற்றோடு இணைந்து மீண்டும் உடலெடுத்துத் துய்ப்புக்காகப் பிறத்தல் அவ்வூழிக்கண் என்றும் இல்லையாகும். இனி, அதுபோலும் முன்னர் அம்மூல மெய்ப்பொருளினின்று பிரிந்த வலிய உயிர்க்கூறுகள் அனைத்தும் தன்போல் தம் இறுதி நிலைக்கு வந்து கூடுகின்ற வரையில், தான் என்னும் தனிக்கூறு தாமென்னும் ஒரு பெருங்கூறாய் ஆகி அவ்வூழியின் எல்லைக் காலம் வரை நின்று, அடுத்த தோற்றக் காலத்துப் பண்டு போல் மீண்டும் பிரிந்து தொடரும் என்க.

**ஊழி** — உயிர்க்கூறுகள் உகுக்கப் பெற்று மீண்டும் வந்து பொருந்துகின்ற வரையில் உள்ள காலம்.

# 19

# ஓர்பியல்

## 1. மெய்யறிவு நிலை

அறிவு பகுத்தறிவு மெய்யறிவென் றுன்றே
செறிவின் இயங்கிச் சிறக்கும் - முறிவுறுதல்
என்றென்றும் இல்லை இறையே விரிவென்ப
ஒன்றுென்று ஆரும் உயிர். 91

பொழிப்பு : பற்றுதலறிவும், பற்றியவற்றைப் பகுத்துணரும் அறிவும் பகுத்துணர்ந்தவற்றின் என்று முளதாந் தன்மை பற்றிய மெய்யறிவும் எனப் படிப்படியாய் அமைந்து, ஒன்று செறிய மற்றது இயங்கிச் சிறப்புறும் என்க. இத் தொடர்ச்சியில் இடை முறிவுறுதல் எந்தப் பிறவியினும் இல்லை. (எனவே பிறவிதொறும் அறிவு தொடரும் என்க.) இறைமை யறிந்து பேரறிவின் பொருந்துதலே அத்தொடரின் விரிவு என்று சொல்வர். இப்படி நிலையறிவுணர்வை யெல்லாம் உயிர்க்கூறு ஒவ்வொன்றுகத் துய்த்து உணர்கின்றது.

## 2. மன நிலை

மனமொன்று மாட்சிபல மாந்தலுயிர் ஒக்கம்
இனமொன்றல் ஆங்காங் கியல்பாம் - புனமொன்றிற்
புள்ளார்தல் ஒக்கும் புலம்பார்தல் அப்புலம்பின்
உள்ளார்தல் ஆன்ற ஒளி! 92

பொழிப்பு: *மனவெளி ஒன்றுதான். அவ்வெளிக்கண் ஆங்காங்குப் பொருந்தி யியங்கும் உயிர்க்கூறுகளின் தகுதி நிலைகளுக் கேற்ப, அவ்வவ்விடத்து விளங்கித் தோன்றும் தன்மைகள் பலவாகும். அம் மனவெளிக்கண் தங்கிய உணர்வு களைக் கண்டு நுகரப்பெறுதல் அவ்வவ் வுயிர்க் கூறுகளின் உயர்வு சிறப்புகளைப் பொறுத்தது. அவ்வகையில் உயிர்கள் ஒரோவழித் தம்மொடு ஒத்து விளங்குகின்ற உயிர்களொடு பொருந்துதல் அவ்வவ் விடத்துக்கண் இயல்பாகும் தினைப் புனத்தின்கண் விளைந்து நின்ற கதிர்களை ஆர்கின்ற பறவைக் கூட்டத்தினை ஒக்கதாம். உயிர்கள் மனப்புனத்தின் மலிந்து நின்ற நினைவுகளைக் கூர்கின்ற தன்மை அவ் வுயிர்களின் உள் நின்று இயக்குகின்ற பேராற்றலாக விளங்குவது என்றும் ஆர்ந்து நின்ற பேரொளியாகிய இறைமை யாகும்.*

## 3. இயக்க நிலை

பொருளனைத்தும் ஒன்ருகும் ஆற்றலெலாம் ஒன்ரும்
உருளிரண்டும் ஒன்றிஞே டொன்ரும் - மருள்நிலைகள்
ஆன்ற வியக்கென்ப ஆதல் பொருளாமுள்
ஊன்றல் இறையென் றுணர். 93

பொழிப்பு: *வேறு வேருகப் பிரிந்தியங்கிஞலும் பொருட் கூறுகள் அனைத்தும் ஒன்றே! அஃதேபோல் வேறுவேருகப் பிரிந்தியங்கிஞலும் ஆற்றலெனும் உயிர்க்கூறுகள் அனைத்தும் ஒன்றே! அவ்வாறு பொருளாகவும் ஆற்றலாகவும் இயங்கு கின்ற இரு தன்மை யுடையனவே! அதன் பல்வேறு கலந் தியக்கும் மயக்க நிலைகளே அவற்றின் இயக்கமாகும். உருவம் பெற்றுப் புறத்துப் புலஞகி நிற்பது பொருளாகும். அதனை அளாவி நின்று உள் ஊன்றி இயக்குகின்ற உயிர்க்கூற்றையே இறைப் பொருள் என்று உணர்ந்து கொள்க.*

## 4. கூர்தல் நிலை

தானே புலம்பனும் தாமாகி ஒன்றலிறை
கூனே தலைப்பிரிவு கொள்விரிவே நீள்புடவி
ஊனே தனையறியும் ஒண்ணுகர்ச்சி உட்கூருந்
தானே தலையொன்றித் தாம். 94

பொழிப்பு : *தான் என்னும் ஒருமையுணர்வே உயிர்க் கூறுகப் பிரிந்து இயங்கும் தன்மையை உருவாக்கும். அவ் வாறு பிரிந்தியங்கும் உயிர்க்கூறுகள் பல்வேறு துய்ப்பின் முடிவில் தம்மை முற்றும் உணர்ந்து கொண்டு தாம் என்னும் நிலையில் ஒன்றிணைந்து நிற்கின்ற நிலையே இறைநிலையாகும். ஒன்றியங்கும் இறைக்கூறினின்று இணைமுறிவுக் கடிக்கள ஞகிய உட்கோட்டத்தாலேயே முதற்கண் உயிர்கள் பிரிந் தியங்கலாகிய தன்மை நேரும். அவ்வாறு உயிர்க்கூறுகள் பிரிதலற்றுத் தாம் இயங்குகின்ற நிலையின் விரிவே நீண்டு விளங்கும் புடவி என்க. அவை பொருட்கூற்றுடன் சேர்ந்து தம்மைத் தனிப் படுத்திக் கொண்டு ஊனும் என்பும் குருதியு மாய் இயங்கி, அறிவு விளக்கமுறும்படி நுகர்ச்சி பெற்று, உள்ளுணர்வால் கூர்ந்து விளங்கி நின்று, பிரிதலுற்ற ஒன்றுடன் ஒன்று பொருந்தி இறுதி நிலையில் தாம் ஆகி நிற்கும்.*

## 5. உறவுறழ்ச்சி நிலை

எவ்விடத்தும் எப்பொழுதும் எதுவும் தவறின்றே ;
அவ்விடத்திற் கொவ்வா அலைவதுவே - ஒவ்விடத்தும்
ஒவ்வொன்றும் கொண்ட உறவும் உறழ்ச்சியுமே
அவ்வொன்றுக் கான அறிவு ! 95

பொழிப்பு : *புடவிக்கண் எந்த உலகத்தும் எக்காலத்தும் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளில் எதுவும் முறைமையாக இயங்கு தலன்றித் தன் நிலையின் மாறித் தவருக இயங்குதல் இல்லை.*

அவ்வாறு தவறிய இயக்கம் என்று கருதுவதெல்லாம், அவ்வவ் விடத்திற்குப் பொருந்தாத நெளிவுற்ற தன்மைகளே! பொருந்துகின்ற இடத்திலெல்லாம் ஒவ்வோர் உயிர்க்கூறும் பிறிதொன்றிடத்துக் கலந்து இயங்குகின்ற நிலையில், ஏற்படு கின்ற இணக்கமும், பிணக்கமும் அவ்வந் நிலைக்கண் ஈடுபட்டுத் துய்க்கின்ற உயிர்க் கூறுகளுக்கான அறிவுப் புலப்பாடுகளுக்கேயாம் என்று கொள்க.

# 20

# இறைமையியல்

## 1. ஒருமை நிலை

ஒன்றினுள் ஒன்று ஒடுங்கி உலகொடுங்கி
அன்றிரண் டென்னும் அனையாகி - ஒன்றுவே
என்றுமிருந் தெல்லாமாய் ஏர்ந்து விரிந்ததுவே
இன்றும் இயங்கும் இறை ! 96

பொழிப்பு: ஆற்றலென்னும் அறிவுக் கூறும், விளங்கித் தோன்றும் பொருட்கூறும் பிரிந்தியங்கும் பல்வேறு இயக்க நிலைக்கூறுகளும், ஒன்றினுள் ஒன்றும்படி ஒடுங்கிப் போய், அதன்வழி உலக விரிவும் ஒடுங்குத லடைந்து, ஆற்றல் பொருள் என்னும் இரண்டு நிலைகளும் அல்லாத ஒரே நிலை என்னும் தன்மையாகி, ஒன்றுகவே ஊழித் தொடக்கம் வரை பொருந்தி யிருந்து, பின் ஊழிக்காலத் தொடக்கத்தே இரண்டாயும் அவைவழி எல்லாமுமாயும் எழுந்து விரிந்து நிற்பதே, தொடக்கத்தும் முடிவினும் ஒன்றி நிற்கின்ற இறைமை என்பது.

## 2. இருமை நிலை

தான்பாதி நின்று தனிப்பாதி தான்விசும்பி
மீன்கதிராய்ப் பூதி மிளிர்ந்து - ஊனுடம்பாய்
உள்ளமாய்த் தான்றனையே ஊடுருவி நின்றின்ப
வெள்ளமாய் நின்ற விரகு. 97

பொழிப்பு : ஒன்றாகி நின்ற இறைமைக் கூறு முழுவதுமாய் விரிந்து விளங்காமல், தான் ஒரு பாதியாக என்றும் நின்று, தான் ஊடுருவி நின்ற மறுபாதியினின்று விசும்பி எழுந்து, பல்கோடி விண் மீன்களாகவும், கதிர்களாகவும் புடைந்து மிளிரத் துலங்கி, அவற்றினின்றும், பல்வேறு உயிர்க் கூறு பொருட்கூறுகளாகப் பிரிதலுற்று ஊனுடம்பு பெற்ற பருவியக்கக் கூறுகளாகவும், அவற்றின் அகத்தே இறை வெளியாகவும், அகப்புறத்தே உள்ள வெளியாகவும், புறத்தே அறிவு வெளியாகவும், புறப்புறத்தே பூத வெளியாகவும் விரிந்து, எல்லா நிலையினும் தானே ஊடுருவி நின்று, இன்ப நிலை துய்ப்பின் பெருக்கமாக என்றென்றும் பேரறிவும் பேராற்றலுமாய் நிற்கின்றது.

## 3. உண்டிலை நிலை

இறுத்தல் இறைமை இறுதிநிலை யாவும்
அறுத்துணர்வார் என்றும் அறிவார் - மறுத்தல்
பொருட்புலர்வு மற்ற தகப்புலர்வு போகா
மருட்பொருதல் ஆக்க மலிவு. 98

பொழிப்பு : என்றும் தங்கியிருத்தலே இறைமை என்பது. அதுவே அனைத்து நிலைகளுக்கும் இறுதியான மெய் நிலையாகும். வெளிப்பட விரிந்து நின்ற உயிர்க் கூறுகளையும் பொருட்கூறுகளையும் உள்ளுள்ளாகப் பிரித்து உணரத்தக்க

நுண்ணறிவுடையோர் அனைத்துக்கும் முடிவாகிய இறையுளதாம் இத்தன்மையை அறிந்து உண்மை உணர்வர். அவ்விறைத் தன்மையை மறுத்துரைக்கும் தன்மை பொருட் கூறுகள் புலர்ந்து விரிகின்ற நிலைக்கு அடிப்படையானது. மற்று, அவ்விறைத் தன்மையை ஒத்துரைக்கும் தன்மை ஆற்றற்கூறுகள் மலர்ந்து கூர்கின்ற நிலைக்கு அடிப்படையானது. முடிவு பெருத இவ்விரு அறிவுநிலைகளும் தம்முள் முரணி, பொருதிக் கொள்ளும் தன்மையே இவ்வுலகின் உருவாக்கநிலைகள் நிறைந்து தோன்றுவதற்குரிய அடிப்படையாகும்.

## 4. தெளிவு நிலை

**மன்பொருள் யாவும் மனம்வாங்கும் ஒண்மனத்தை**
**முன்பொருளும் வாங்க முடியுமோ ? - தென்படுபல்**
**புத்தாக்கம் எல்லாம் புலத்துணர்வே ! ஆங்கதனின்**
**வித்தாகும் மெய்ம்மை விறல். 99**

பொழிப்பு : வெளிப்பட்டு நிற்கின்ற பொருள்களின் அனைத்தின் அகப்புறத் தன்மைகளும் மன வாற்றலின்கண் வந்து படிவனவாகும். ஆனுல், ஒளிர்ந்து விளங்கும் மனவாற்றலின் தன்மையை, நம் முன்னர் பருமையாய்ப் படிந்து நிற்கின்ற உள்ளுணர்வு சாராத உருப்பொருள்கள் உள்வாங்குதல் ஒல்லுமோ? ஒல்லாதென்க. புறத்தே பருப்பொருளாய்க் காணப்படுகின்ற, புதுவாய அனைத்து உருவாக்கங்களும், அருவாயமைந்த உணர்வினின்றும் அகத்தால் வாங்கி உருப்படுத்திய உணர்வின் புலப்பாடுகளே ! அவை எல்லாவற்றின் மூலப் பொருளாகி நிற்கின்ற ஒன்றே இறைமை யென்னும் சிறப்பினதாகும்.

## 5. ஒப்பு நிலை

ஓவத் துணுக்கால் உருவறியார் ஒவ்வொன்று
மேவத்துடிக்கும் மிகை உருவம் - கூவநினைந்
தார்க்கே இசைமுடிவாங் கார்ந்திசைப்பார்க் கென்முடிவு
நீர்க்குண்டோ உண்மை நிறம் ! 100

**பொழிப்பு :** *பெரியதோர் ஓவியப் படத்தைப் பல்லாயிரங் கோடிக் கூறுகளாக்கிய நிலையில், அவற்றின் ஒவ்வொரு கூற்றையும் கொண்டு, முழுவுருவையும் முன்பு கண்டறியாதவர்கள், தாம்தாம் பெற்ற அறிவுணர்வுக்கும் உளவுணர்வுக்கும் மெய்ப்பொருளுணர்வுக்கும் ஏற்றவாறு, தாமே ஓருருவத்தைக் கற்பித்துக் கொண்டு, அவ் வுருவநிலைக்குத் தமக்குக் கிடைத்த ஒரு துணுக்கின் கூற்று வடிவத்தைப் பொருத்துகின்ற மிக விரிந்த கற்பிதங்களே இக்கால் உள்ள இறை உருவங்களும் அவற்றின் புறச்சாயைகளான சமையங்களும். ஒலிப்புலனால் ஏதாமோர் ஒலியை உண்டாக்க நினைத்தவர்களுக்கே இறுதி முடிவாக இசைநிலை கைவரப் பெறும். ஆனால் இசைநிலை கிடைக்கப் பெற்ற ஒருவர்க்கு இறுதி முடிவாக, இவ்வுலகின் கண் இயங்கும் வரை, அவ்விசையே முடிவல்லது வேறு முடிவு ஏது ? நீர்க்குத் தான் இயல்கின்ற இடத்தானும் காலத்தானும் பொருட்புணர்வாலும் கொள்ளுகின்ற நிறமேயல்லாது, இயல்பின் ஒரு நிறமில்லையாதல் போல, இறைமை, தன்னை வெளிப்படுத்தி நிற்கும் உயிர்க்கூற்றானும் பொருட்கூற்றானும், வடிவமெய்துமேயன்றி, தனக்கென்று ஒரு வடிவத்தைப் புலப்படுத்தாதாம் என்க. (நீர்க்கே நிறமில்லாயின் அதனின் பலநிலை கடந்த ஒன்றிற்கு உருவம் சமைக்க எங்ஙன் ஒல்லுமென்க.)*

முற்றும்

# அருஞ்சொற்பொருள்

## அகர வரிசை

### அ


அங்காப்பு—ஆசையுடன் (மனம்)
—அவாவுதல் ... 4
அடலுழைப்பு—வருந்திய உழைப்பு ... 17
அடவி—காடு ... 1
அடிப்படுக்கும்—அடிநிலைப்படுத்தும் ... 68
அண்டம்—கோள உலகம் ... 1
அலகழியா—அளவு குறையாமல் ... 65
அழல்—வெப்பம் ... 25
அறக் கலந்து—இரண்டறக் கலந்து ... 77
அனையாகி—இரண்டு நிலைகளும் அல்லாத
ஒரே நிலையாகி ... 96


### ஆ


ஆயம்—அறிவர் குழு ... 6


### இ


இசும்பு—வழுக்கல் ... 69
இடவரைகள்—இடங்களும் அளவுகளும் ... 1
இம்பருலகு—இம்மையுலகம் ... 27
இயைதல்—இயங்குதல் ... 2
இழவு—துயரம், இழப்பு ... 21, 75
இறுத்தல்—தங்கியிருத்தல் ... 98
இன்வாரி—இன்பக்கடல் ... 36


### ஈ


ஈர்சுற்று—இருவகைச் சுழற்சி ... 5
ஈனல்—பிள்ளை பெறுதல் ... 40

உ

உகப்பு—மகிழ்ச்சி ... 48
உகுக்கார்—கைவிடார் ... 68
உகுத்து—வீழ்த்தி ... 65
உந்தல்—இயக்குதல் ... 86
உறம்—திறன் ... 52
உரன்—வீரம் ... 35
உழப்பழிதல்—முயற்சி அழிதல் ... 58
உள் விளர்ந்து—விளங்கிக் கிளர்ந்து ... 89
உள் விறீ—உள்ளெழுச்சியுற்று ... 80
உள்ளார்தல்—உள் நின்று இயங்குதல் ... 92
உள்ளொண்மை—உள்ளத்தில் விளங்கிய ஒளித்தன்மை 63
உறழ்ச்சி—மாறுபாடு ... 47, 95
உறழ்ந்து—மாறுபட்டு ... 2, 43
உறுசொல்—பொருந்திய சொல் ... 51
உறுவினை—வயப்பட்டவினை ... 48

ஊ

ஊர்ந்தடக்கு—மேற்சென்றடக்கு ... 35
ஊழி—உயிர்க்கூறுகள் உகுக்கப் பெற்று மீண்டும் வந்து பொருந்துகின்ற வரையில் உள்ள காலம் ... 90
ஊழ்க்கும்—உகுக்கும், தரும் ... 69
ஊன்று திறன்—ஈடுபடுகின்ற திறன் ... 52

எ

எரி—தீ ... 39, 45
எள்ளுப்படுஉம்—இகழப்படும் ... 51
என்பு—எலும்பு ... 39

## ஏ

ஏமம்—அரண் ... 42
ஏய்ந்துணர்—தெளிந்துணர் ... 79
ஏர்ந்தடக்கு—கடிந்து திருத்து ... 35
ஏர்ந்து—எழுந்து ... 96

## ஐ

ஐந்தினும் கொள்ளா—ஐம்பூதவழியினும் கொள்ளா ... 8
ஐந்தின் வளம்—ஐந்திணை வளம் ... 8
ஐயாறு—ஐந்தும் ஆறும (பதினொன்று) ... 40

## ஒ

ஒக்க—பொருந்த ... 61
ஒசிவு—வினைச்சரிவு ... 53
ஒட்பம்—செப்பம், தூய்மை ... 43, 52
ஒண்சுற்றம்—பொருந்திய சுற்றம் ... 42
ஒண்ணுகர்ச்சி—அறிவு விளக்கமுற நுகர்தல் ... 94
ஒண்ணோக்கம்—உயர்நோக்கம் ... 55
ஒண்பொருள்—ஒளிப்பொருள் ... 17, 45
ஒண்மனம்—ஒளிர்ந்து விளங்கும் மன ஆற்றல் ... 99
ஒல்க—குறைய ... 5
ஒள்ளியோர்—அறிவுடையோர் ... 70
ஒற்கம்—தளர்ச்சி ... 56, 71

## ஓ

ஓக்கம்—பெருமை ... 92
ஓரும்—அறியும், ஆராயும் ... 83
ஓர்ந்த—ஆராய்ந்தறிந்த ... 52
ஓர்ந்து—ஆராய்ந்து ... 48
ஓவம்—ஓவியம் ... 100

க


கங்குல்—இருள் ... 5
கடவிடை—வினவும் விடையும் ... 1
கடுமுரண்—இயல்பிற்கு மாறான முரண் ... 48
கதுமென்று—விரைவுக் குறிப்பு ... 46
கரந்தொளிர்ந்த—மறைவாக விளங்கி நிற்கும் — 84
கருள் மனம்—இருள் மனம் ... 72
கவண்முகம்—கவைக் கருவியின் முகத்திலிருந்து ... 85
கவலுறுதல்—வருந்துதல் ... 57
கழிபெரு—மிகவும் பெருகிய ... 81
கள் விறி—முளையினின்று விளக்கம் பெற்று ... 80
கறை—குறை ... 54


கா


காணிப்பு—கண்காணிப்பு — 57
காயின்ப—இளமைப் பருவத்து இன்பவுணர்வு ... 41
காழிட்டால்—விதைத்தால் ... 21
காழ்த்து—முதிர்ந்து, பகைத்து ... 49, 50
கான்தோயும்—கால்கள் தோய்கின்ற ... 18


கு


குதலை—மழலைச்சொல் ... 29
குவைத்து—தொகுதிகளை உண்டாக்கி ... 88
குழப்பில்—குழப்பமில்லாத ... 58
குனிவு—பணிவு, அவமானம் ... 47, 74


கூ


கூற்று—இறுதி நிலை, உடலினின்று
உயிரைப் பிரிக்கும் இயற்கைத் தன்மை ... 49
கூனே—உட்கோட்டம், உள் வளைவு ... 94

கோ

கோணிப்பு—சாீதல், குலைதல் ... 57
கோதில்—குற்றமற்ற ... 29
கோளறவு—கொள்கையை விட்டுவிடல் ... 31
கோள்வரை—அளவிட்ட குறிக்கோள் ... 47

ஞா

ஞாலம்—உலகம் ... 1

த

தணந்து—பிரிந்து ... 5
தகை—சிறப்பு ... 28
தட்டாய்—தட்டையாய் ... 3
தடங்கல்—குறுக்கீடு ... 37
தடிதல்—தண்டித்தல் ... 9
தடிந்து—தண்டித்து முறை செய்தல் ... 69
தள்ளுப்படூஉம்—புறக்கணிக்கப்பட்டு விடும் 51
தற்சார்பு—தன்னைமட்டில் சார்ந்த நிலை ... 25
தன்னுண்மை—தானே ஆளும வல்லதிகார ஆட்சி ... 6

தா

தாமுறுதல்—தாம் இணைந்து உறவாடல் ... 42
தாயொளி—தாயான (கதிரவனின்) ஒளி ... 5
தார்நலம்—படைநலம் ... 10
தாழவரல்—உயர்ந்த மனம் தாழ்தல் ... 74
தாளறவு—முயற்சியற்று இருத்தல் ... 31
தாளுமை—முயற்சி ... 32

தி

திடல்—திறன் ... 83
திருக்குவை—செல்வ வளம் ... 18

தீ

*தீதியலா—தீங்கு சேராத* ... 55

து

*துமிக்கும்—துண்டித்துக் கொள்ளும்* ... 87
*துய்த்தல்—உவத்தல்* ... 81, 84
*துய்ப்பது—நுகர்ச்சி பெறுவது* ... 86
*துய்ப்பு—நுகர்ச்சி* 16, 20, 41, 64, 87
*துறத்தல்—தவிர்த்தல், விலக்குதல்* ... 76
*துன்ன—நெருக்கமுற* ... 24

தெ

*தெரிபொருள்—விளங்கும் மெய்ப்பொருள்* ... 45
*தெருள்—தெளிவு* — 49

தே

*தேர—வளரும்படி* ... 84

தோ

*தொகை—நிறைந்த நிலை* ... 64
*தொண்டு—ஒன்பது* ... 11
*தோளின்மை—துணையில்லாமை* ... 75

ந

*நயன்—நயன்மை (நீதி)* ... 9

நா

*நாள்வரை—காலவரையறை* ... 47

நி

*நிரனிறை—வரிசைமுறை* ... 71

நீ

நீர்மையறும்—நீர்மைத்திறம் மாற ... 13

நு

நுழைபு—கைவந்த நிலை ... 52

நெ

நெரிமுலை—நெருங்கிப் புடைத்த முலை ... 38

நே

நேர்ச்சி—நிகழ்ச்சி ... 1

நொ

நொடிவார்—வாடுபவர் ... 46
நொதுமல்—நட்பும் பகையும் இல்லாத ... 46

பா

பான்மை— இயற்கைத் தன்மை ... 73

பி

பிறன்கடை—கால்வழியினர் ... 14

பு

புடவி—' பிரபஞ்சம் ' (Universe) ... 1,94
புலம்—அறிவு ... 54
புலர்வு—மலர்ச்சி ... 98
புலனுழுது—புலன் வழிப்பெற்று ... 59
புல்லறிவு—புன்மை அறிவு ... 19
புனம்—கொல்லை ... 92
புன்முயல்வு—புல்லிய முயற்சி ... 60
புன்மை—தாழ்வு ... 23

பூ


பூட்கை—பூண்ட உறுதி, துள் ... 26
பூண்கோட்டம்—பூட்டிட்ட சிறை ... 9


பெ


பெட்பு நலன்—இயல்பு நலன் ... 84


பொ


பொலிதிறன்—மிகுந்ததிறன் ... 49
பொள்ளல்—இடையீடு ... 51
பொன்னர்—பொன்னிறம் தோய்ந்த ... 38


ம


மடங்கல்—அரிமா (சிங்கம்) ... 37
மடிமை—சோம்பல் ... 12
மடுத்து—உட்குவித்து ... 28
மண்டும்—நிறையும் ... 27
மண்ணேக்கம்—உலகியல் நோக்கம் ... 55
மதி—மாதம் ... 82
மருட்கை—மருட்சி, குறை ... 54
மருட்பொருதல்—அறிவு முரண்படல் ... 98
மருண்டறிவு—மருட்சி அறிவு ... 3
மருள்நிலை—மயக்கநிலை ... 93
மறல்—தறுகண்மை ... 6
மறுக்கை—மறுத்தல் ... 50
மன்பொருள்—வெளிப்பொருள் ... 99
மன்னிய—நிலைபெற்ற ... 34


மா


மாட்சி—அறிவுப்புலன் ... 59
மாணன்றி—பெருமைக்குரியனவுடன் ... 61
மானும்—மலியும் ... 62

மி

மிடிமை—துன்பம் ... 12

மு

முகக்க—தவிர்க்க ... 47
முகிழ்த்து—தோன்றி ... 71
முழவு—இடிகாலம் ... 21
முனிமறல்—முனிந்து காக்கும் வீரம் ... 6
முன்மை—முன் பெற்றது ... 67

மூ

மூண்ட—திரண்ட ... 53
மூள்வரை—சேரும்வரை ... 90

மெ

மெய்யுறுதல்—உடலின்பம் துய்த்தல் ... 40

மொ

மொய்ம்பு—புகழ், வலிமை ... 14

யா

யாப்பு—பொருத்தம் ... 16

வ

வயன்—வயப்படுத்தி ... 9
வல்லுறுத்து—வலிமையுடன் ஊன்றி ... 81

வி

விசும்பி—எழுந்து ... 97
விசும்பு—வானம் ... 77, 78
விண்டுள்—விளர்ந்து உள்ளே ... 79
வித்து—ஒளிநீர், விதை ... 82
வியனம்பல்—பரந்த தூற்றல் கூற்று ... 26
வியன்கலந்து—வியப்புக்குரிய வகையில் கலந்து ... 79
விறல்—சிறப்புநிலை ... 58, 99

வீ

*வீழுர்ந்து—வீறுபெற எழுந்து* ... 84
*வீறும்—வீறுண்மை* ... 35

வெ

*வெதுப்ப—வெப்பமுற, சூடேற்ற* ... 81
*வெளிறு—அறிவின்மை* ... 54
*வெறுக்கை—வெறுப்பு* ... 47, 50

வே

*வேண்மதநீர்—வேட்கை நிறைந்த செந்நீர்* ... 81
*வேதுநீர்—அகட்டுநீர்* ... 82
*வேய் தோள்—மென்தோள்* ... 38

# பாடல்கள் முதற்சீர் அகரவரிசை


| | பக்கம் |
|---|---|
| அடங்கல் | 23 |
| அடிமை | 8 |
| அமைத்த | 4 |
| அமைவுக் | 21 |
| அருளென்ப | 44 |
| அல்லவைக்கு | 41 |
| அழலின்ப | 15 |
| அறிவு | 55 |
| அற்றாளும் | 47 |
| அன்பறிவுக் | 18 |
| ஆளுமை | 19 |
| ஆற்றலொடு | 47 |
| இடங்குடிபால் | 12 |
| இடர்நிலை | 44 |
| இழப்பறி | 35 |
| இறுத்தல் | 60 |
| இன்மையே | 14 |
| ஈட்டம் | 34 |
| உடல்கருவி | 10 |
| உடல் நிலத்துக் | 11 |
| உடல் பொருந்தி | 50 |
| உடலம் | 24 |
| உயிர்க்குகப்பு | 53 |
| உய்ப்ப | 52 |
| உருண்டை | 2 |
| உலகுடைமை | 39 |
| உழவுக் | 13 |
| உழைப்பொருபால் | 10 |
| உள்ளமறி | 31 |
| உள்ளம் அறிவுணர்வால் | 54 |
| உள்ளம் உகப்பே | 29 |
| உள்ளம் புணர்ந்தார் | 27 |
| உள்ளொண்மை | 38 |
| ஊதியம் | 33 |
| எவ்விடத்தும் | 57 |
| எழிலியங்கல் | 24 |
| ஒக்க | 37 |
| ஒத்தவொன்றி | 53 |
| ஒப்பம் | 31 |
| ஒழுக்கம் | 9 |
| ஒளிநுதல் | 23 |
| ஒன்றாற்றல் | 48 |
| ஒன்றினுள் | 59 |
| ஒன்று நிலம் | 7 |
| ஒன்று நிலைக் | 54 |
| ஓவத் | 62 |
| கடனென்ப | 19 |
| கரணம் | 43 |
| கல்வி | 38 |
| காட்சி | 36 |
| காணிப்பு | 35 |
| கொண்கன் | 17 |
| கொம்பாய் | 16 |
| செய்தொழில் | 14 |
| சேய்க்குத்தாய் | 5 |
| தனிமை | 4 |
| தன்னை | 20 |
| தாமுறுவ | 26 |

| | பக்கம் |
|---|---|
| தாயன்பே | 25 |
| தானும் | 37 |
| தானே | 57 |
| தான்பாதி | 60 |
| திருக்குவை சூழ் | 11 |
| துன்பமெனும் | 15 |
| தோய்ந்தார்ப் | 45 |
| நட்பரிது | 26 |
| நயன்செய்து | 5 |
| நல்லிளமைக் | 16 |
| நன்மை | 40 |
| நின்று நிலை | 3 |
| நுகர்ச்சி | 51 |
| நொதுமல் | 28 |
| பண்புளத்துச் | 36 |
| பரந்த | 51 |
| பல்லாயிரங் | 2 |
| பிறப்பிற் | 17 |
| புடவி பல | 1 |
| புறத்துப் | 46 |
| பொய்யாமை | 40 |
| பொருட்குறை | 32 |
| பொருளனைத்தும் | 56 |
| பொருளால் | 30 |
| மலையிற் | 3 |
| மறமென்ப | 20 |
| மனக் கலப்பு | 8 |
| மனமொன்று | 56 |
| மனவுயர்ச்சி | 45 |
| மன் பொருள் | 61 |
| மன்னன் | 6 |
| மிகை பொறுத்தல் | 42 |
| முகங்கவிக்கும் | 22 |
| முயற்சி | 32 |
| மொழி நலம் | 27 |
| மொழியோ | 9 |
| விசும்பு வெளி | 41 |
| விண்வெளி தீ | 48 |
| வித்துசினை | 50 |
| விழிமின்பாய்ந் | 49 |
| வினை வெறுக்கை | 29 |
| வெறுக்கை | 30 |

# பிழைதிருத்தப் பட்டியல்

| பக்கம் | பாட்டு / பொழிப்பு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 3, 4 பாடல்கள் 4, 5, 6 வரிசை எண்கள் விடுபட்டுள்ளன. | | | | |
| 8 | பாட்டு-12 | 3 | தண்ட | தண்டம் |
| 8 | பாட்டு | — | எண் 13 | எண் 12 |
| 9 | பாட்டு | — | எண் 14 | (விடுபட்டதுசேர்க்க) |
| 9 | பாட்டு | — | எண் 14 | எண் 15 |
| 10 | பாட்டு-17 | 1 | மூன்றில் | மூன்றின் |
| 11 | (பா-19) பொ. | 2 | பொருளாகும் | பொருள்களாகும் |
| 11 | ,, | 6 | உயிர்களுக்கு | உயிரிகளுக்கு |
| 17 | (பா-28) பொ. | 4 | பிறவாமல் | பிறழாமல் |
| 17 | (பா-29) பொ. | 4 | இந்நிலத்தினகண் | இந்நிலத்தின்கண் |
| 18 | (பா-30) பொ. | 1 | அறிவிக்கும் | அறிவுக்கும் |
| 19 | (பா-31) பொ. | 3 | தாளறவு! | தாளறவு; |
| 19 | (பா-31) பொ. | 7 | நெகிழ்ச்சிக்குந் | நெகிழ்க்குந் |
| 22 | பாட்டு 36 | 1 | நம்நாண் பெண்மை | நாண்பெண்மை |
| 24 | (பா-39) பொ. | 2 | கருவி, | கருவி. |
| 24 | (பா-40) பொ. | 1 | எழுதலும் | எழுந்து |
| 24 | (பா-40) பொ. | 10 | பன்னிரண்டு | பதினொன்று |
| 31 | பாட்டு 51 | 3 | படுஉங் | படுஉம் |
| 31 | பாட்டு 52 | 3 | உரமென்ப | உரனென்ப |
| 31 | (பா-52) பொ. | 6 | பொருத்தன | பொறுத்தன |
| 34 | (பா-56) பொ. | 4 | நாட்டை | நாட்டத்தை |
| 35 | பாட்டு 58 | 3 | கில்லாரும் | கில்லாகும் |
| 36 | (பா-59) பொ. | 6 | சுவையாலும் | சுவையானலும் |
| 37 | (பா-61) பொ. | 5 | பெருமைக் குரியனவும் | பெருமைக் குரியனவுடன் |

# பிழைதிருத்தப் பட்டியல் (தொடர்ச்சி)

| பக்கம் | பாட்டு / பொழிப்பு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 38 | பாட்டு 63 | 2 | கள்ளண்மை | கள்ளன்மை |
| 40 | (பா-67) பொ. | 6 | பின்மை | பின்மை |
| | | | ஊற்றுப்போல் | நிலைக்கு ஊற்றுப் போல் |
| 43 | (பா-71) பொ. | 4 | உட்பகுப்புக் களாய் | உட்பகுப்புகளாய் |
| 45 | (பா-74) பொ. | 10 | ஏற்படுவதில்லை | நேர்வதில்லை |
| 52 | (பா-86) பொ. | 6 | இயங்கித் தன்னை | இயங்கித் துய்த்துத் தன்னை |
| 54 | பாட்டு 90 | 3 | முள்வரைக்குத் | முள்வரைக்குத் |

# உ. த. மு. க.-வில் சேருங்கள்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்
உயர்ந்த குறிக்கோள்கள்

க. தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.

உ. சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.

ங. இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.

ச. தமிழ்த் தேசியத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.

ரு. மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலைவளர்ச்சி.

சு. எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ப அறிவியல் அணுகு முறை.

எ. பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.

# தென்மொழி

தனித் தமிழ் மணக்கும் இலக்கியத் திங்களிதழ்

- தாளிகைத் துறையில் புதியதொரு புரட்சி !
- புதிய சிறந்த இலக்கியப் படைப்புகள், மொழி, இன நாட்டு வரலாறுகள் !
- அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள், பாடல்கள், வாழ்வியல் விளக்கங்கள் !
- முற்றும் இனிய, தூயதமிழில் வெளிக்கொணர்கின்றது!
- தமிழால் எல்லாம் முடியும் என்பதை மெய்ப்பிக்கும் ஒரே தாளிகை !

தனி இதழ் 1-25 ◆ ஆண்டுக் கட்டணம் : 15 உருபா

**தென்மொழி — சென்னை-5**

---

# தமிழ்ச் சிட்டு

சிறுவர் கலையிதழ்

- இளமையோ எச்செயலும் செய்யும்.
- இளமை அறிவோடு இயைந்தால் நாட்டுக்கு விளைவ தெல்லாம் நன்மையாம்!
- வளர்கின்ற சிறுவர்க்கு வழிகாட்டியாய், நல்லாசிரியனாய் நின்று அறிவு புரந்து, மெய்யறிவு புகட்டி அவர்தம் எதிர்கால வாழ்க்கை சிறந்திலங்கத் துணைபுரியும் ஒரே இதழ் !
- சிறுவர்தம் உள்ளொளி பெருக்கி அவர்களை மிகச் சிறந்த குடிமக்களாக்கும் ஒரே ஏடு !
- உங்கள் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுத்துப் பயனடையச் செய்யுங்கள்.

தனி இதழ் 50 காசு ◆ ஆண்டுக் கட்டணம் 6 உருபா

**தமிழ்ச் சிட்டு — சென்னை-5**